# தமிழரசு

செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு

ஜனவரி – 2010
விலை ரூ.10/–





சென்னை சங்கமம் கலைப் பண்பாட்டு நிகழ்ச்சிகள் தொடக்க விழா (10.01.2010)

# தமிழரசு

செய்தி-மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2040-2041

மார்கழி - தை

ஜனவரி 2010

மலர் : 41 இதழ் : 7



**ஆசிரியர் குழு**

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர் :

திரு. **சி.காமராஜ்,** இ.ஆ.ப.,
இயக்குநர் மற்றும்
அலுவலால் அரசு துணைச் செயலாளர்
செய்தி-மக்கள் தொடர்புத்துறை

நிருவாக ஆசிரியர்

**துரை. தாமரைச்செல்வம்**
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

பொறுப்பாசிரியர்களான
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

**க. குமாரவேலு**
**ச. ஜெயலலிதா**
**இரா. சேகர்**

உதவி ஆசிரியர்கள்

**வீ.இரா. நவநீதகிருஷ்ணகுமார்**
**த. கலைச்செல்வன்**
**வ.பாலசுப்பிரமணியன்**

நிருபர்கள்

**கோ. சண்முகம்**
**மாய குமரேசன்**

இதழ் உதவியாளர்கள்

**தி.பெரியார் சாக்ரடீசு**
**ஜெ. ஜெயசிம்ஹன்**

புகைப்படக்காரர்

**வி.இராதாகிருஷ்ணன்**

கணினி வடிவமைப்பு

**அ. மதன்,** உதவி ஒளியச்சுக்கோர்வையாளர்
**ஆர். பாலாஜி**
(ஒப்பந்த தொகுப்பூதிய கணினி இயக்குபவர்)



சென்னை - தமிழரசு அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.

தமிழரசு அலுவலகம்,
110.அண்ணாசாலை, சென்னை-600 002.
தொலைபேசி : 28520407/28520408
நிகரி : 28520407
மின் அஞ்சல் : tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tn.gov.in




**உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்**
**விட்டேமென் பார்க்கும் நிலை.**

எல்லாப் பற்றையும் விட்டுவிட்டதாகக் கூறும் துறவிகள்கூட உழவரின் கையை எதிர்பார்த்துதான் வாழ வேண்டும்.

**கலைஞர்** திருக்குறள் உரையிலிருந்து...

## இந்த இதழில்...


மக்கள் நலம் பாராட்டும் இந்த அரசுக்கு என்றும் தோன்றாத் துணையாய் இருப்பீர் — 2

அயராது பணியாற்றும் அரசு — 29

"பிறப்பொக்கும்" எனும் உயரிய நோக்கம் நாட்டிலே பரவச் செய்திட வேண்டும்! சமுதாயத்திலே வேரூன்றச் செய்ய வேண்டும் — 51

தமிழ்ச் சமுதாய மக்கள் வாழ்வில் மகிழ்ச்சியும் இன்பமும் பொங்கிப் பெருகிட வாழ்த்துகிறேன் — 55

எனது வேண்டுகோளை ஏற்று பொங்கல் திருநாள் – தமிழ்ப்புத்தாண்டு தினத்தை சிறப்பாகக் கொண்டாடி மகிழ்ந்த தமிழ் மக்களுக்கு நன்றி – மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன் — 57

ஏழை – எளிய நலிந்த மக்கள் பொங்கல் நாளில் மகிழ்ச்சியுடன் இருப்பதற்காகவே இலவச வேட்டி – சேலை வழங்கும் திட்டத்தை அரசு தொடர்ந்து நிறைவேற்றுகிறது — 68


**அட்டைப்பட விளக்கம்**

முதலாம் அட்டை :

மேதகு தமிழ்நாடு ஆளுநர்
திரு. **சுர்ஜித்சிங் பர்னாலா** அவர்கள்
**6.1.2010** அன்று சட்டப்பேரவை கூட்டத்தொடரைத் தொடங்கி வைத்து உரையாற்றினார்.

# மக்கள் நலம் பாராட்டும் இந்த அரசுக்கு என்றும் தோன்றாத் துணையாய் இருப்பீர்

**மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள்**
**6-1-2010 அன்று சட்டப்பேரவையில் ஆற்றிய உரை :-**

**மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களே,**

வணக்கம். 2010 ஆம் ஆண்டில், இந்தப் பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவையின் பன்னிரெண்டாவது கூட்டத் தொடரில் உரையாற்றுவதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். தமிழர் திருநாளாம் பொங்கல் மற்றும் தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்களை அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.





உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு-கோவை ★ 2010 ஜூன் 23-27

2. ஐந்தாவது முறையாக தமிழக மக்கள் கலைஞர் கருணாநிதி அவர்களை முதலமைச்சராக ஆட்சிப் பீடத்தில் அமர்த்தியதைத் தொடர்ந்து – அவர் அளித்த வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றியதோடு மட்டுமல்லாது; மேலும் பல நலத் திட்டங்களை வடித்தெடுத்து – தமிழக மக்களின் வாழ்வில் நலம் சிறக்கவும், வளம் கொழிக்கவும் ஓய்வின்றிச் செயலாற்றி வருகிறார். அவரது தலைமையிலான இந்த அரசின் சாதனைகளை வியந்து போற்றி, கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலும், அனைத்து இடைத் தேர்தல்களிலும் மகத்தான வெற்றிகளைத் தமிழக மக்கள் பரிசாக வழங்கிவருவதை இந்த நாடே நன்கறியும். இந்த வெற்றிகளை மக்களின் நற்சான்றுகளாக மனதில் பதித்து, பேரறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய வழியில் 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்ற உறுதியுடன் இந்த அரசு தனது பயணத்தைத் தொடரும்.

3. திராவிட இயக்கத்தின் முக்கியக் கொள்கைகளில் ஒன்றான சமூக நீதியை, அனைத்துச் செயல்பாடுகளிலும் முன்னிறுத்தி வெற்றி கண்டுவரும் இந்த அரசு; அதேவேளையில், மாநில சுயாட்சியின் அடிப்படையிலான உண்மையான கூட்டாட்சி இன்னும் எய்தப்படாமலேயே உள்ளது என்பதை நினைவூட்டி, அந்த இலக்கை எய்திட உறுதிபூண்டுள்ளது. விடுதலை அடைந்த ஒரு நாட்டின் தேவைகளின் அடிப்படையில் அறுபது ஆண்டுகளுக்கு முன்பு வகுக்கப்பட்ட மத்திய மாநில அரசுகளிடையேயான அதிகாரப் பகிர்வினை, ஜனநாயகம் வேரூன்றி தழைத்தோங்கி வலிவும் பொலிவும் பெற்று விளங்கும் இன்றைய சூழலுக்கேற்ப மறு ஆய்வு செய்ய வேண்டிய தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதை வலியுறுத்தியே, முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 1974ஆம் ஆண்டில் இந்த அவையில் மாநில சுயாட்சித் தீர்மானத்தை முன்மொழிந்து நிறைவேற்றித் தந்தார்கள். மக்களுக்கு அருகேயிருந்து அவர்களுக்குத் தேவையான திட்டங்களைச் செம்மையாகச் செயல்படுத்திவரும் மாநில அரசுகளின் கரங்களை வலுப்படுத்த மத்திய அரசு முன்வர வேண்டும்.

4. தமிழ்நாடு போன்ற சிறப்பாகச் செயல்படும் மாநிலங்களுக்கு அளிக்கப்படும் நிதிப்பங்கீடு (Devolution) அடுத்தடுத்த மத்திய நிதிக் குழுக்களால் தொடர்ந்து குறைக்கப்பட்டுள்ளது. இந்தப் பாரபட்சநிலை பதின்மூன்றாவது நிதிக் குழுவிலும் தொடராமல் நியாயமான நிதிப்பங்கீடு அளிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

5. நமது நாட்டை வேகமாக வளர்ச்சியடையச் செய்ய மைய அரசு மேற்கொண்டுவரும் பல்வேறு பொருளாதாரச் சீர்திருத்த நடவடிக்கை களுக்குத் தோள்கொடுக்கும் அதே வேளையில் – விவசாயிகள்,


தொழிலாளர்கள், மீனவர்கள் போன்று சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழும் சாமானிய மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள் தொடர்பான கொள்கைகள், தேசிய அளவிலான முடிவுகள் மற்றும் புதிய சட்ட வரைவுகள் குறித்து மாநில அரசுகளைக் கலந்தாலோசித்த பின்னரே மைய அரசு உரிய முடிவுகளை எடுப்பதுதான் கூட்டாட்சித் தத்துவத்திற்கு உயிர் கொடுப்பதாகும்.

6. தற்போது நடைமுறையில் உள்ள மத்திய மாநில மறைமுக வரிவிதிப்பு முறைகளுக்கு மாற்றாகக் கொண்டுவரப்பட உள்ள பொருள்கள் மற்றும் நற்பணி வரி (Goods and Services Tax) மாநில அரசுகளின் ஒருமித்த கருத்தின் அடிப்படையிலும், மாநிலங்களின் அதிகாரங்களும் வருவாயும் பாதிக்கப்படாத வகையிலும் அமைய வேண்டும் என்பதே இந்த அரசின் கருத்தாகும்.

7. தீவிரவாதம் எவ்வகைப் பட்டதாயினும் அதனை வேரறுக்க இந்த அரசு உறுதிபூண்டுள்ளது. அண்டை மாநிலங்களிலிருந்தும், நமது கடற்கரைப் பகுதிகள் மூலமாகவும் தமிழகத்தில் தீவிரவாதம் ஒரு சிறிதும் ஊடுருவாதிருக்க; இந்த அரசு தொடர்ந்து விழிப்போடு கண்காணித்து வருகிறது. இந்த அரசின் கோரிக்கையை ஏற்று சென்னையில் தேசிய பாதுகாப்புப் படை மையத்தை அமைத்துத் தந்துள்ள மத்திய அரசுக்கு இந்த அரசு நன்றி தெரிவித்துக் கொள்கிறது. மக்களைக் காக்கும் மகத்தான பணியில் ஈடுபட்டுள்ள காவல்துறையினரை மேலும் ஊக்குவிக்கும் வகையில், அவர்தம் நலம்பேண 2006 ஆம் ஆண்டில் இந்த அரசால் அமைக்கப்பட்ட மூன்றாவது காவல் ஆணையம் அளித்த பரிந்துரைகளை இந்த அரசு ஏற்றுச் செயல்படுத்தியுள்ளது. மாறிவரும் காலச் சூழலின் அடிப்படையிலான புதிய பிரச்சினைகளை எதிர்கொள்ளும் வகையில், நமது காவல்துறையை மேலும் நவீனப்படுத்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறோம்.

8. வேளாண் தொழிலையும், உழவர் பெருமக்களையும் ஊக்குவிக்கும் வகையில், கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்ததும்; நமது நாட்டிலேயே முதல் முறையாக வட்டியின்றி கூட்டுறவுப் பயிர்க் கடன்களை வழங்கியதும் இந்த அரசேயாகும். மேலும், இந்த நிதியாண்டிலும் ரூபாய் 2,000 கோடி கூட்டுறவுப் பயிர்க் கடன் வழங்க திட்டமிடப்பட்டு இதுவரை ரூபாய் 1,559 கோடி வழங்கப்பட்டுள்ளது.

9. நெல்லுக்கான கொள்முதல் விலை 2005–2006இல் ரூபாய் 600 என்றிருந்ததை, கடந்த மூன்றாண்டு களிலேயே ரூபாய் 1,050 ஆகவும், கரும்புக்கான கொள்முதல் விலை





ரூபாய் 1,014 என்றிருந்ததை போக்குவரத்துக் கட்டணம் மற்றும் சர்க்கரை கட்டுமான ஊக்கத் தொகையுடன் சேர்த்து ரூபாய் 1,550 ஆகவும் இந்த அரசு உயர்த்தி வழங்கியுள்ளது. **இந்த ஆண்டு விவசாயிகள் மேலும் அதிக நெல்லை உற்பத்தி செய்ய ஊக்குவிக்கும் நோக்குடன் தற்போது சாதாரண ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய் 1,000 மற்றும் சன்னரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய் 1,050 என்று வழங்கப்படுகிற விலையுடன்; மேலும் கூடுதலாக குவிண்டாலுக்கு ரூபாய் 50 ஊக்கத் தொகை மாநில அரசின் சார்பாக வழங்க அரசு முடிவு செய்துள்ளது. எனவே, சாதாரண நெல்லுக்கான கொள்முதல் விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய் 1,050 ஆகவும் சன்னரக நெல்லுக்கான கொள்முதல் விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய் 1,100 ஆகவும் உயரும். இதனால் அரசுக்கு ஏற்படும் கூடுதல் செலவு ரூபாய் 80 கோடியாகும்.**

10. காய்கறி போன்ற விளை பொருள்களுக்கு உரிய விலை கிடைக்கச் செய்வதோடு; நுகர்வோருக்கும் பேருதவியாக இருந்த உழவர் சந்தைகள் மீண்டும் திறக்கப்பட்டு, கடந்த மூன்றரை ஆண்டு காலத்தில் 45 புதிய உழவர் சந்தைகளும் அமைக்கப்பட்டுச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. மேலும், புதிய உழவர் சந்தைகள் இந்த ஆண்டில் தொடங்கப்படும்.

11. தமிழகத்தில் செம்மை நெல் சாகுபடி முறையினால், நெல் உற்பத்தித்திறன் கணிசமாக உயர்ந்து நீர்ப் பயன்பாடும் வெகுவாகக் குறைந்துள்ளது. அண்மையில் உலக வங்கியின் தலைவர் திரு. இராபர்ட் சாலிக் அவர்கள் தமிழகத்தில் இப்புதிய முறை வெற்றி கரமாகச் செயல்படுத்தப் பட்டுவருவது குறித்து தனது பாராட்டினைத் தெரிவித்துள்ளார். மேலும், அனைத்து மாவட்டங்களுக்கும் துல்லியப்பண்ணை

முறையை விரிவுபடுத்தி, அதிக வருவாய் ஈட்டவல்ல பயிர்களைக் குறைந்த நீர் பயன்பாட்டிலேயே பயிர் செய்ய விவசாயிகளை இந்த அரசு ஊக்குவித்து வருகிறது. விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த அனைத்துத் துறைகளையும் ஒருங்கிணைத்து உலக வங்கியின் உதவியோடு ரூபாய் 2,547 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டுவரும் நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ் 63 வடிநிலப்பகுதிகளில் 16 இலட்சம் ஏக்கர் விவசாய நிலங்களுக்குப் பயன் தரக்கூடிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

12. நிலமற்ற ஏழை எளியோருக்கு இலவசமாக நிலம் வழங்கும் திட்டத்தின்




கீழ் இதுவரை 1,77,057 ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு 2,11,356 ஏக்கர் நிலம் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. விவசாயத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் மூலமாக 4,65,386 ஏழை விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்கு ரூபாய் 371 கோடி மதிப்பிலான நல உதவிகள் இதுவரை வழங்கப்பட்டுள்ளன.

13. இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கும் தேசிய பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தை முனைப்போடு செயல்படுத்தி, 2001–2006 ஆம் ஆண்டு காலத்தில் 2,38,036 விவசாயிகளுக்கு ரூபாய் 145 கோடி வழங்கப்பட்ட நிலைக்கு மாறாக, கடந்த மூன்றரை ஆண்டுகளில் 8,59,704 விவசாயிகளுக்கு ரூபாய் 680 கோடி இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளது. 'நிஷா' புயல் காரணமாக விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட வேண்டிய ரூபாய் 652 கோடி இழப்பீட்டுத் தொகையில் மாநில அரசு தனது பங்கான ரூபாய் 306 கோடியை முழுமையாக அளித்த பிறகும்கூட, மைய அரசு தனது பங்கில் ரூபாய் 46 கோடியை மட்டுமே அளித்துள்ளதால் மீதித் தொகையான

ரூபாய் 260 கோடியை உடனடியாக வழங்க வலியுறுத்தியுள்ளோம்.

14. கடந்த நவம்பர் மாதம் பெய்த பெருமழையின் காரணமாக நீலகிரி மாவட்டம் மிகுந்த பாதிப்புக்குள்ளானது. நிலச்சரிவினால் வீடுகள் சேதமடைந்து உயிர் இழப்பும் ஏற்பட்டது. அத்துடன் இம்மாவட்டத்தின் முக்கியச் சாலைகளும் சேதமடைந்தன. உடனடி நிவாரணப் பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன. முற்றிலும் சேதமடைந்த வீடுகளுக்கு 15 நாட்களிலேயே தற்காலிகக் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்பட்டு மற்றும் சீரமைப்புப் பணிகளுக்காக மேலும் ரூபாய் 25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருவதை அந்த மாவட்ட மக்கள் மகிழ்ச்சிடன் வரவேற்றுள்ளனர்.


15. மாநிலங்களுக்கு இடையே நிலவும் நதி நீர்ப் பிரச்சினைகளைப் பேச்சுவார்த்தை மூலமாகவும் சட்டரீதியாகவும் தீர்க்க அனைத்து முயற்சிகளையும் தமிழக அரசு அயராது மேற்கொண்டுவரும் வேளையில், நமது விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கக் கூடிய வகையில் சில அண்டை மாநிலங்கள் நமது நியாயமான பங்கினைக் கூடத் தர முன்வராத சூழ்நிலையை நாம் காண்கிறோம். முல்லைப் பெரியாறு பிரச்சினையில் தென்மாவட்ட விவசாயிகளின் நலனைக் காக்கவும், தமிழகத்தின் உரிமையை முழுமையாக நிலைநாட்டவும் இந்த அரசு அனைத்துச் சட்டபூர்வமான நடவடிக்கைகளையும் உறுதியுடன் தொடர்ந்து மேற்கொள்ளும். இந்த ஆற்றின் குறுக்கே தற்போதுள்ள அணையின் உயரளவு நீர் மட்டத்தை உச்சநீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் உயர்த்திக்கொள்ளவும், தேவையற்ற இன்னொரு அணை அமைப்பதற்கான கேரள அரசின் முயற்சிகளைத் தடுத்திடவும் ஆவன செய்யுமாறு மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்துகிறோம்.

16. நீர் வளம் குறைந்த மாநிலங்களுக்கு மிகப் பயன் உள்ளதாகக் கருதப்படுவதும், தமிழக அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருவதுமான நதி நீர் இணைப்புத் திட்டத்தைச் செயல்படுத்த இயலாது என்று மத்திய அரசு இப்போது கருதினாலும்; இந்த அரசைப் பொறுத்தவரையில், மாநிலங்களுக்குள் பாயும் ஆறுகளையாவது இணைத்து, வெள்ள உபரி நீரை வறண்ட மாவட்டங்களுக்குக் கிடைக்கச் செய்யும் திட்டத்தை விரைந்து செயல்படுத்த வேண்டுமென்று முடிவு எடுத்து, 2008 ஆம் ஆண்டு ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பைத் தொடர்ந்து 'காவிரி குண்டாறு இணைப்புத் திட்டம்' முதற் கட்டமாக ரூபாய் 189 கோடி மதிப்பீட்டிலும், தாமிரபரணி ஆற்றின் உபரி நீரை தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களின் வறண்ட பகுதி களுக்குக் கொண்டு செல்வதற்கான 'தாமிரபரணி கருமேனியாறு நம்பியாறு

இணைப்புத் திட்டம்' ரூபாய் 369 கோடி மதிப்பீட்டிலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்தகைய திட்டங்களுக்கு விரைவுபடுத்தப்பட்ட பாசன உதவித் திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்கப்பட வேண்டுமென்று 19.12.2007 அன்று நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் விடுத்த வேண்டுகோளுக்கு அக்குழு இசைவு அளித்துள்ளதன் அடிப்படையில் இத்திட்டங்களுக்கு மைய அரசு நிதியுதவி வழங்க வேண்டுமென்று வலியுறுத்துகிறோம்.

17. தமிழர்களின் நீண்டகாலக் கனவானதும், அறிஞர்களும் சான்றோர்களும் பெரிதும் விரும்பியதும், மாண்புமிகு பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங், ஐக்கிய முற்போக்குக் கூட்டணித் தலைவர் திருமதி. சோனியா காந்தி, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மற்றும் அனைத்துக் கட்சித் தலைவர்களும் ஒரே மேடையில் ஒருங்கே இருந்து அடிக்கல் நாட்டியதுமான சேது சமுத்திரத் திட்டத்தைச் செயல் படுத்துவதில் ஏற்பட்டுள்ள கால தாமதம் தமிழக மக்களுக்குக் கவலை அளிப்பதாக உள்ளது. தமிழகத்தை வளமும், பொருளாதார வலிவும் பெறச் செய்யக்கூடிய இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் எழுந்துள்ள சிக்கல்களைக் களைந்து, இத்திட்டத்தை விரைந்து நிறைவேற்றிட வேண்டுமென்று மத்திய அரசினை இந்த அரசு வலியுறுத்துகிறது.

**ஆறுகள் இணைப்புத் திட்டம்**




18. நமது நாட்டில் கடந்த நவம்பர் இறுதி வாரத்தில் ஒட்டுமொத்த பண வீக்கம் 4.78 சதவீதமாக மட்டுமே இருந்த போதிலும், சென்ற 11 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு உணவுப் பொருள்களின் விலை ஏற்றத்தினால் ஏற்பட்டுள்ள பண வீக்கம் 19.05 சதவீதமாக உயர்ந்துள்ளது. நாட்டின் பல பகுதிகளில் இந்த ஆண்டு ஏற்பட்ட வறட்சியினால்,

 உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு–கோவை★2010 ஜூன் 23-27

சர்க்கரை, பருப்பு வகைகள், சமையல் எண்ணை போன்ற பொருள்களின் மொத்த உற்பத்தி குறைந்து, அவற்றின் விலை உயர்ந்துள்ளதுதான் இதற்குக் காரணம். சாதாரண சாமானிய மக்கள் மற்றும் நடுத்தர வர்க்கத்தினர் விலைவாசி உயர்வின் சுமையினால் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ளும் வகையில், இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வந்துள்ளது. குறிப்பாக, தமிழக அரசுதான் நமது நாட்டிலேயே மிகக் குறைந்த விலையில் ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கி வருகிறது. அதுமட்டுமன்றி, அத்தியாவசிய உணவுப் பொருள்களாகிய துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில் மற்றும் கோதுமை மாவு போன்றவற்றை அரசே கொள்முதல் செய்து குறைந்த விலையில் நியாயவிலைக் கடைகள் மூலம் வழங்கி வருவதோடு, 'மலிவு விலையில் மளிகைப் பொருள்' திட்டத்தின் கீழ் ரூபாய் 50க்கு 10 மளிகைப் பொருள்கள், அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன. அத்தியாவசியப் பொருள்களின் விலைவாசி உயர்விலிருந்து மக்களைப் பாதுகாக்க இந்த அரசு எடுத்துவரும் இந்த முன்னோடி நடவடிக்கைகள், ஏழை எளியோருக்கும் நடுத்தர வர்க்கத்தினருக்கும் ஆறுதல் தருவதாக அமைந்துள்ளன.

19. இவ்வாறு தமிழகத்தில் உணவு மற்றும் மளிகைப் பொருள்கள் மானிய விலையில் கிடைப்பதை உறுதி செய்ய, இந்த அரசு மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளின் விளைவாக அரசின் உணவு மானியச் செலவு 2005–2006 இல் ரூபாய் 1,200 கோடியாக இருந்தது 2009–2010 இல் ரூபாய் 4,000 கோடியாக உயர்ந்துள்ளது.


20. ஏழை, எளிய சாமானிய மக்கள் அன்றாடம் அணுகும் அரசு மருத்துவமனைகளின் கட்டமைப்பை மேம்படுத்தவும், அங்கு காலியாக இருந்த மருத்துவர் மற்றும் செவிலியர் பணியிடங்களை நிரப்பி, தரமான மருத்துவச் சிகிச்சை கிடைப்பதை உறுதி செய்யவும் இந்த அரசு கடந்த மூன்றரை ஆண்டுகளாகப் பல்வேறு திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வந்துள்ளது. இவற்றின் கீழ், இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து ரூபாய் 792 கோடி மருத்துவத் துறை கட்டமைப்பு மேம்பாட்டிற்குச் செலவிட்டிருப்பதோடு, 6,009 மருத்துவர், 7,042 செவிலியர் மற்றும் 2,812 மருத்துவமனைப் பணியாளர்கள் புதிதாக அரசு மருத்துவமனைகளில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

21. உயர் சிகிச்சை வசதிகள் மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலும் கிடைத்திட மேலும் 5 புதிய அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் தொடங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. **தமிழகத்தின் முதல் மருத்துவக் கல்லூரியும் பாரம்பரியமிக்கதுமான சென்னை மருத்துவக் கல்லூரிக்கு**

**நவீனக் கட்டடங்கள் மற்றும் கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய ஒரு புதிய கட்டட வளாகம், சென்னை பொது மருத்துவ மனைக்கு அருகில் உள்ள பழைய சிறைச் சாலை இருந்த இடத்தில் ரூபாய் 70 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச் சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**




22. 'வருமுன் காப்போம்' திட்டத்தின் கீழ் மாநிலமெங்கும் இதுவரை 13,045 முகாம்கள் நடத்தப்பட்டு 1,26,73,884 பேர் பயனடைந்துள்ளனர். மாநிலமெங்கும் மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள '108' இலவச அவசரகால மருத்துவ ஊர்திச் சேவை வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அரசின் மக்கள் நலம் பேணும் இத்தகைய முன்னோடி முயற்சி களின் பலனாக, அரசு மருத்துவ மனைகளில் சிகிச்சை பெறும் நோயாளிகளின் எண்ணிக்கையும் மகப்பேறுகளின் எண்ணிக்கையும் குறிப்பிடத்தக்க அளவிற்கு உயர்ந்து உள்ளன.



23. அரசு மருத்துவமனைகள் இவ்வாறு திறம்படச் செயல்பட்டு, பொதுமக்கள் பயனடைந்துவரும் நிலையிலும், உயிருக்கு ஆபத்தான பல கடும் நோய்களுக்கு ஏழை எளியோர் தனியார் மருத்துவமனைகளில் உயர் சிகிச்சை பெறவேண்டிய நிலை இருப்பதையும், அதற்கான செலவுகளை அவர்களால் மேற்கொள்ள இயலாது




என்பதையும் உணர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 'உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம்' என்ற உன்னதத் திட்டத்தை அறிவித்துச் செயல்படுத்தி வருகிறார்கள். இத்திட்டத்திற்கான காப்பீட்டுத் தொகையை அரசே ஏற்றுச் செலுத்தியுள்ளது. மக்களிடையே மகத்தான வரவேற்பைப் பெற்றுள்ள இத்திட்டத்தின் கீழ் இதுவரை 1,40,70,367 குடும்பங்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளன. இத்திட்டத்தின் கீழ் முதல் நான்கு மாதங்களிலேயே இதுவரை 24,495 பயனாளிகளுக்கு ரூபாய் 83 கோடி செலவில் மாநிலமெங்கும் உள்ள 539 மருத்துவமனைகளில் இலவச உயர் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

24. தமிழகத்தில் உள்ள பள்ளிகளில் சிறப்பாக நடைமுறைப் படுத்தப் பட்டுவரும் செயல் வழிக் கல்வி முறை நமது நாட்டிற்கே முன்னோடியாக விளங்கி வருகிறது. நாட்டின் பிற மாநிலங்களிலிருந்தும் பல வெளிநாடுகளி லிருந்தும் பல வல்லுநர்கள் இம் முறையைப் பார்வையிட்டுத் தத்தம் பகுதிகளிலும் இதனை நடைமுறைப் படுத்த முனைந்துள்ளனர். மாநிலத்தில் அனைத்துக் குழந்தை களுக்கும் ஐந்து வருட ஆரம்பக் கல்வி கிடைக்கச் செய்யும் இலக்கை வெற்றிகரமாக எய்தியுள்ள இந்த அரசு, மத்திய அரசு அறிவித்துள்ள தேசிய இடைநிலைக் கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், உயர்நிலைப் பள்ளிகளை

மேம்படுத்தி அனைவருக்கும் இடைநிலைக் கல்வி கிடைக்க ஆவன செய்யும்.

25. கல்வி தரமானதாகவும் சீரானதாகவும் அமைந்திட இந்த அரசு, சமச்சீர் கல்வித் திட்டத்தை வகுத்து செயல்படுத்திட முனைந்துள்ளது. நமது மாநிலத்திலும் பிற மாநிலங்களிலும் நடைமுறையில் இருக்கும் பல்வேறு பாடத்திட்டங்கள் பற்றி ஆய்ந்து, அத்திட்டங்களின் நல்ல அம்சங்களைக் கண்டறிந்து, அவற்றைத் தொகுத்து, புதிய தரமான எளிதான பொதுப் பாடத்திட்டம் ஒன்றினை வகுத்து மாநிலமெங்கும் நடைமுறைப்படுத்த முடிவு செய்துள்ளது. பல்வேறு பாட வாரியங்கள் மற்றும் பாடத்திட்டங்களால் மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் இன்னல்கள் இருப்பின் அவற்றைக் களையவும், தேசிய அளவில் நடைபெறும் தேர்வுகளில் நமது மாநில மாணவர்களின் போட்டியிடும் திறனை மேம்படுத்தவும், இந்த சமச்சீர் கல்வித் திட்டம் உதவும் என இந்த அரசு உறுதியாக நம்புகிறது. இந்தப் புரட்சிகரமான திட்டம் வெற்றிபெற அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

26. இந்த அரசின் கோரிக்கையை ஏற்று திருச்சியில் இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம், கோயம்புத்தூரில் உலகத் தரம்வாய்ந்த பல்கலைக்கழகம் ஆகியவற்றை அமைத்திடவும், திருவாரூரில் மத்தியப் பல்கலைக்கழகத்தைத் தொடங்கிடவும் ஒப்புதல் அளித்த மத்திய அரசுக்கு இந்த அரசு தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

**27. அரசு மற்றும் தனியார் பொறியியல் கல்லூரிகளிலும், மருத்துவக் கல்லூரிகளிலும், பல் மருத்துவக் கல்லூரிகளிலும், வேளாண்மைக் கல்லூரிகளிலும், கால்நடை மருத்துவக் கல்லூரிகளிலும், சட்டக் கல்லூரிகளிலும் ஒற்றைச் சாளர முறையில் சேர்க்கை பெறும் மாணவர்களில் – அவர்கள் குடும்பத்தில் இதுவரை யாரும்**




**பட்டதாரிகளே இல்லையானால்; அந்த மாணவர்கள் தொழிற்கல்வி படிப்பதை ஊக்குவிப்பதற்காக, சாதிப்பாகுபாடின்றியும் வருமானத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமலும் வரும் கல்வியாண்டு முதல் அவர்கள் செலுத்த வேண்டிய கல்விக் கட்டணம் முழுவதையும் அரசே ஏற்றுக்கொள்ளும்.**

28. தற்கால உலக நிகழ்வுகளையும் அறிவியல் கருத்துக்களையும் அனைவரும் தெரிந்துகொள்ளும் வாய்ப்பாகவும், பொழுதுபோக்குச் சாதனமாகவும் விளங்கக்கூடிய தொலைக்காட்சிச் சேவையை ஏழை எளிய மக்கள் பெறும் வகையில், இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தின் முதல் நான்கு கட்டங்களில் 1,12,80,000 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்யப்பட்டு இதுவரை 96,09,220 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. **இத்திட்டத்தின் ஐந்தாவது கட்டத்தின் கீழ் மேலும் 40 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்யப்பட்டு தொடர்ந்து இந்த ஆண்டும் வழங்கப்படும்.**

29. தொழில் வளர்ச்சியை நீடித்து நிலைக்கச் செய்யவும், பெருகிவரும் மக்கள் தொகைக்கேற்ப தொடர்ந்து உயர்ந்து வரும் தேவையை நிறைவு செய்யவும், தமிழகத்தில் மின் உற்பத்தியை அதிகரிக்க, இந்த அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. மத்திய அரசு மற்றும் தமிழ்நாடு மின்வாரியத்தின் திட்டங்கள், கூட்டு முயற்சித் திட்டங்கள் மற்றும் தனியார் திட்டங்கள் மூலமாக வரும் 4 ஆண்டுகளில் 8,315 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையங்களை அமைப்பதற்கான பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன. இவற்றில் கூடங்குளம் அணுமின் நிலையம் இந்த ஆண்டிலும், தேசிய அனல் மின்சக்திக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் கூட்டு முயற்சியாக திருவள்ளூர் மாவட்டம் வல்லூரில் கட்டப்பட்டுவரும் மின்நிலையம், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் வடசென்னை அனல் மின்சக்தி நிலைய விரிவாக்கத் திட்டம் ஆகியவை வரும் ஆண்டிலும் உற்பத்தியைத் தொடங்க உள்ளன.

30. கடந்த மூன்றரை ஆண்டு காலத்தில், குறிப்பாக, கடும் பொருளாதார நெருக்கடி நிலவிவரும் அண்மைக் காலங்களில் கூட, இந்த அரசின் எளிய அணுகுமுறை மற்றும் ஒளிவுமறைவற்ற செயல்பாடு ஆகியவற்றால் தமிழ்நாட்டில் தொடர்ந்து முதலீடு செய்ய தொழில் முனைவோர் பலர் முன்வந்துள்ளனர். இந்த அரசு பதவியேற்றது முதல் இதுவரை ரூபாய் 46,091 கோடி முதலீட்டிலான 37 புதிய தொழிற்சாலைகளை அமைப்பதற்காக உரிய சலுகைகள் வழங்கப்பட்டு, 2,22,569 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது. அண்மையில் ரூபாய்

4,000 கோடி முதலீட்டில் பிரான்சு நாட்டைச் சேர்ந்த 'மிஷலின்' (Michelin) டயர் தயாரிப்பு நிறுவனம் தனது சர்வதேசத் தரத்திலான உற்பத்தித் தொழிற்சாலையை சென்னைக்கு அருகே உள்ள கும்மிடிப்பூண்டியில் அமைக்க முன்வந்துள்ளதானது, வாகன உற்பத்தித் தொழிலில் தமிழகத்தின் முன்னணி நிலையை மேலும் உறுதிப்படுத்தியுள்ளது. மேலும், சென்னைக்கு அருகே அமையவுள்ள நிதி நகரம் தமிழகத்தின் எதிர்கால வளர்ச்சியில் ஒரு முக்கியப் பங்காற்றும். இதுமட்டுமன்றி, கங்கைகொண்டான், பெரம்பலூர், பல்லடம், செய்யாறு போன்ற மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் தொழில் முனைவோர் தமது தொழிற்சாலைகளை அமைக்க வகைசெய்து, தொழில் வளர்ச்சியின் பலன்கள் மாநிலமெங்கும் வாழும் மக்களுக்குக் கிடைப்பதை இந்த அரசு உறுதி செய்துள்ளது.





**31.** தென் மாவட்டங்களின் சமூகப் பொருளாதார பிரச்சினைகளுக்கு ஒரே தீர்வு இம்மாவட்டங்களைத் தொழில் மயமாக்குவதில்தான் உள்ளது என்பதை நன்கு உணர்ந்துள்ள இந்த அரசு, தென் மாவட்டங்களின் தொழில் வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்டு அந்த மாவட்டங்களில் புதிய தொழிற்சாலைகளை நிறுவ முன் வருவோருக்குக் கூடுதல் சலுகைகள் அடங்கிய 'தொகுப்புச் சலுகைகள்' வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இதன் பயனாக வீடியோகான் நிறுவனம் சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் மற்றும் வீடுகளில் பயன்படுத்தப்படும் மின்னணுப் பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலையை ரூபாய் 1,600 கோடி முதலீட்டில் நிறுவ முன் வந்துள்ளது. மேலும் தமிழ்நாடு கனிம நிறுவனம் மதுரை மாவட்டத்தில் மேலூர் வட்டத்தில் கருங்கல் வெட்டுதல் மற்றும் மெருகேற்றும் பிரிவு ஒன்றினை அமைக்கும் பணியைத் தொடங்கி உள்ளது.

மாண்புமிகு மத்திய இரசாயனம் மற்றும் உரத்தொழில் அமைச்சர் அவர்களின் முயற்சியின் காரணமாக இந்தோனேசியா மற்றும் ஹாங்காங்கைச் சார்ந்த ஒரு தொழில் நிறுவனம், மதுரை மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் 2,200 கோடி ரூபாய் முதலீட்டில் டிராக்டர்கள், எஃகு உலோகக் கலவை (Steel Alloys), வடிப்புகள் (Forgings) ஆகியவற்றைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளை நிறுவ முன்வந்துள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கங்கை கொண்டானில் ஏ.டி.சி. டயர்ஸ் என்ற நிறுவனம் கடந்த திங்களில் உற்பத்தியைத் துவக்கியுள்ளது.

32. நமது மாநிலத்தில் உள்ள பல்வேறு நகர்ப் பகுதிகள் பெரும் வளர்ச்சி அடைந்து வரு வதையும், நகர்ப்புர மக்கள் தொகை வேகமாக அதிகரித்து வருவதையும் கருத்தில் கொண்டு, இப்பகுதிகளில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும், வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கும் இந்த அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது. மத்திய அரசின் பெருந்திட்டமான ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின்கீழ், 283 நகரங்களில் ரூபாய் 9,271 கோடி மதிப்பீட்டிலான 309 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மாநிலத்தில் முதல் முறையாக நகர்ப்புரங்களில் உள்ள சுயஉதவிக் குழுக்களுக்கும் சுழல்நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

33. பொதுத்துறையின் மூலமாக ரூபாய் 14,600 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. மேலும், ரூபாய் 1,081 கோடி மதிப்பீட்டில் வெளி வட்டச் சாலைக்கான பணிகளும் தொடங்க உள்ளன. சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் உள்ள கூவம் போன்ற ஆறுகளைச் சுத்தப்படுத்தி



சீரமைப்பதற்காகச் சென்னை நதிநீர் அறக்கட்டளை ஒன்றினை மாண்புமிகு துணை முதலமைச்சர் தலைமையில் அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. வெளிநாடுகளில் உள்ளது போன்று நகர்ப்புரங்களில் உள்ள ஆற்றுப் பகுதிகளைத் தூய்மையாக்கவும், அழகுபடுத்தவும் தேவையான திட்டங்களை வகுத்து இந்த அறக்கட்டளை செயல்படுத்தும்.


34. கடந்த மூன்றரை ஆண்டுகளில் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகப் பெரும் திட்டங்கள் பல செயல்படுத்தப்பட்டுள்ளன. ரூபாய் 616 கோடி மதிப்பீட்டிலான இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டப்பணிகளைக் குறிப்பிட்ட காலத்திற்கு முன்னதாகவே முடித்துப் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்ததற்கு, இந்த அரசிற்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். நிலத்தடி நீரில் ஃப்ளூரைடு அதிகம் உள்ள கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களின் குடிநீர்ப் பிரச்சினைக்கு ஒரே தீர்வான ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை ரூபாய் 1,929 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப் படுவதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு அவற்றை முடிவு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. இத்திட்டப் பணிகள் வரும் மார்ச் திங்களில் தொடங்கும்.

35. ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் மகத்தான திட்டங்களில் ஒன்றான மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் நமது மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் மிகச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பயனாளிகளில் 82 சதவீதம் பெண்களும் 59 சதவீதம் ஆதிதிராவிட மக்களும் பயன்பெற்று வரும் இத்திட்டத்தின் கீழ் இதுவரை தமிழகத்தில் 2,885 கோடி ரூபாய் ஊதியமாக வழங்கப்பட்டுள்ளது. நமது கோரிக்கையை ஏற்று இத்திட்டத்தின் கீழ் தினந்தோறும் வழங்கப்படும் ஊதியத்தை 80 ரூபாயிலிருந்து 100 ரூபாயாக உயர்த்த மைய அரசு இசைந்துள்ளது. உயர்த்தப்பட்ட தின ஊதியம் 1.1.2010 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

36. இந்த அரசு செயல்படுத்தி வரும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் இதுவரை, ரூபாய் 2,041 கோடி மதிப்பீட்டில் 10,104 கிராம ஊராட்சிகளில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எஞ்சிய 2,514 கிராம ஊராட்சிகளில் இத்திட்டப்பணிகள் வரும் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும். கடந்த மூன்றரை ஆண்டுகளில், கிராமப்புறச் சாலைகள், பள்ளிகள் போன்றவற்றிற்காக நபார்டு வங்கியிடமிருந்து ரூபாய் 3,536 கோடி நிதியுதவி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேற்கூறிய பணிகள் அனைத்தையும்


உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு–கோவை ★ 2010 ஜூன் 23-27


விரைந்து நிறைவேற்றி, தமிழகத்தின் கிராமப் பகுதிகளில் வாழும் மக்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் கிடைப்பதை இந்த அரசு உறுதி செய்யும்.




37. மக்களுக்கு உரிய வசதிகளை அளிக்கவும், மாநிலத்தின் வளர்ச்சியில் தமது உரிய பங்கினை ஆற்றவும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு இந்த அரசு எப்போதுமே உறுதுணையாக இருந்து வந்துள்ளது. நகராட்சி அமைப்புகளின் கடன் சுமையைக் களையும் நோக்கத்தோடு ரூபாய் 787 கோடி அளவிலான கடன்களை இந்த அரசு தள்ளுபடி செய்துள்ளது. 2005–2006 ஆம் ஆண்டில் மாநிலத்தின் மொத்த வரி வருவாயில் 8 சதவீதம் என்றிருந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கான பங்கினை படிப்படியாக உயர்த்தி தற்போது 9.5 சதவீதமாக இந்த அரசு வழங்கி வருகிறது. வரும் ஆண்டில் இது 10 சதவீதமாக மேலும் உயர்த்தப்படும். வரும் 2012–2017 ஆண்டு காலத்திற்கான நிதிப்பங்கீட்டு முறை குறித்தும் உள்ளாட்சி அமைப்புகளின் வருவாயைப் பெருக்குவது குறித்தும் ஆய்ந்து பரிந்துரைக்க மாநில நான்காவது நிதிக்குழுவை இந்த அரசு அண்மையில் அமைத்துள்ளது.

38. ஏழை எளியோருக்கு வீட்டுவசதியை ஏற்படுத்த அவர்களுக்குக் குடியிருப்புமனைகள் அவசியம் என்பதை உணர்ந்து, அரசுப் புறம்போக்கு நிலங்களில் பல ஆண்டுகள் வீடுகட்டிக் குடியிருப்போர் பட்டா பெறுவதற்கு 10 ஆண்டுகளாவது குடியிருந்திருக்க வேண்டும் என்பதை 5 ஆண்டுகளாகக் குறைத்தும், வருமான வரம்பை நீக்கியும் இந்த அரசு ஆணையிட்டுள்ளது. இந்த சீரிய முயற்சியால் கடந்த மூன்றரை ஆண்டுகளில் 6,99,917 வீட்டுமனைப் பட்டாக்கள் ஏழை எளியோருக்கு வழங்கப்பட்டுள்ளன. **இந்த குறைந்தபட்சக் குடியிருப்புக் கால வரம்பு மூன்று**

ஆண்டுகளாகக் குறைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் மேலும் பல்லாயிரக்கணக்கான ஏழை எளிய மக்கள் வீட்டுமனைப் பட்டா பெற்றுப் பயனடைவர்.





39. ஆயிரக்கணக்கான திரைப்படத் தொழிலாளர்கள் உள்ளிட்ட திரைப்படத் துறையினருக்கும் மற்றும் சின்னத்திரைத் துறையினருக்கும் வீட்டு வசதி அளிக்கும் பொருட்டு, அவர்கள் சார்ந்த அமைப்புகளின் கோரிக்கைகளை ஏற்று சென்னைக்கு அருகில் 90 ஏக்கர் நிலத்தை அரசு அளித்துள்ளது. இந்த நிலத்தைப் பயன்படுத்தி அவர்கள் அடுக்குமாடி குடியிருப்புகளைக் கட்டிக் கொள்ள அரசு அனுமதித்துள்ளது.

40. நகர்ப்புரங்களில் உள்ள குடிசைப் பகுதிகளுக்கு மாற்றாக வீடுகள் கட்டித் தருவதற்காக 1970ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தை அமைத்ததும், கிராமப் பகுதிகளில் வாழும் ஏழை எளிய ஆதிதிராவிடர்களுக்காக இலவசமாக வீடுகளை அமைக்கும் திட்டத்தை 1974ஆம் ஆண்டில் நமது நாட்டிலேயே முதல் முறையாகச் செயல்படுத்தியதும், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்தான் என்பதை நாடறியும். “பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்” என்ற குறள் மொழியை மெய்ப்பிக்கும் சான்றாக பெரியார் நினைவு சமத்துவபுரங்களை உருவாக்கியவரும் கலைஞர் அவர்களேயாகும். நமது நாடும் மாநிலமும் நாளும் வளர்ந்து, மக்களின் வாழ்க்கைத்தரம் மென்மேலும் உயர்ந்து வரும் இன்றைய நல்ல சூழலிலும், மக்களின் மிக அடிப்படைத் தேவையான வீட்டு வசதி இன்னும் முழுமையாக நிறைவு செய்யப்படாத நிலையை நாம் வேதனையுடன் காண்கிறோம். சிறப்புமிகு திட்டங்கள் பலவற்றால் சாதாரண மக்களின் சமூகப் பாதுகாப்பையும் உணவுப் பாதுகாப்பையும் உறுதி செய்ததோடு, கடந்த மூன்றரை ஆண்டுகளில் புதுக் கட்டமைப்பு வசதிகளையும் உருவாக்கி


உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு-கோவை ★ 2010 ஜூன் 23-27

இந்த அரசு மகத்தான சாதனைகள் புரிந்துள்ள போதிலும், மாநிலமெங்கும் ஏழை எளியோர் மண் சுவர்களால் ஆன கூரை வீடுகளில் வசித்துவருவதால், இயற்கை இன்னல்களை எதிர்கொள்ளும் துயர்மிகு நிலை இன்னமும் தொடர்கிறது. கடந்த மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் பல்வேறு ஆய்வுகளின் அடிப்படையில், நமது மாநிலத்தில் ஊரகப் பகுதிகளில் மட்டும் இத்தகைய வீடுகளின் எண்ணிக்கை சுமார் 21 இலட்சம் என அறியப்பட்டுள்ளது.




தற்போது மத்திய அரசின் நிதியுதவியுடன் நாடு தழுவிய அளவில் செயல்படுத்தப் பட்டுவரும் இந்திரா வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் மட்டும் இக்குடிசைகளை நமது மாநில அளவில் நிரந்தர இல்லங்களாக மாற்ற வேண்டும் என்றால் அதற்கு இன்னும் 30 ஆண்டுகள் ஆகும். **இந்த நிலையை நெஞ்சில் நிறுத்தி, முதற்கட்டமாக, ஊரகப்பகுதிகளில் 21 இலட்சம் வீடுகளில் வசிக்கும் ஏழை எளியோரின் வாழ்வில் ஒளியேற்றும் வகையில் இந்த வீடுகள் அனைத்தையும் கான்கிரீட் கூரை கொண்ட நிரந்தர இல்லங்களாக தமிழக அரசின் நிதியைக் கொண்டே மாற்றி அமைத்து, அவற்றை இலவசமாக அளிக்கும் மாபெரும் திட்டம் ஒன்றை இந்த அரசு வகுத்துள்ளது. 2010–2011 ஆம் ஆண்டு தொடங்கி, இந்தத் திட்டத்தின் கீழ் ஆறு ஆண்டு காலத்தில் மண்சுவர்களால் ஆன 21 இலட்சம் கூரை வீடுகளுக்குப் பதிலாக, நிரந்தர வீடுகள் இந்த அரசால் கட்டித் தரப்படும் என்று பெரு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்தின் முதல் ஆண்டான வரும் நிதியாண்டில், மூன்று இலட்சம் நிரந்தர வீடுகள் ரூபாய் 1,800 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும். கிராமப் பகுதிகளில் கூரை வீடுகளே இல்லாத நிலையை உருவாக்கும் இந்த உன்னதத் திட்டம் 'கலைஞர் வீட்டுவசதித் திட்டம்' என்று அழைக்கப்படும்.**

41. ஏற்கெனவே கலைக்கப் பட்ட நலவாரியங்களை இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர், மீண்டும் அமைத்து




பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகிறது. அமைப்புசாரா தொழிலாளர் நலவாரியங்கள் மூலமாக இதுவரை 7,38,690 பயனாளிகளுக்கு ரூபாய் 184 கோடி மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

42. வேலை வாய்ப்பற்ற இளைஞர்கள் மாதாந்திர உதவித் தொகை பெறுவதற்கான ஆண்டுக் குடும்ப வருமான உச்சவரம்பை ரூபாய் 24,000–லிருந்து ரூபாய் 50,000 ஆக இந்த அரசு உயர்த்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 3,53,801 இளைஞர்களுக்கு ரூபாய் 240 கோடி வழங்கப் பட்டுள்ளது.


43. கிராமப் புரங்களில் படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்புகளைப் பற்றிய தகவல்களைச் சரிவர அறியவும் வேலைவாய்ப்புகளை பெறத் தேவையான திறன்களை வளர்த்துக் கொள்ளவும் வழியின்றி இருக்கின்ற நிலையை மாற்றி, தனியார் துறையில், குறிப்பாகத் தகவல் தொழில்நுட்பத் துறையில் உள்ள பல்வேறு விதமான வேலைவாய்ப்புகள் குறித்து இளைஞர்கள் அறிந்து கொள்ளவும், இந்த வேலைவாய்ப்புகளைப் பெறக்கூடிய வகையில் அவர்களைத் தயார்படுத்திக் கொள்வதற்கும் ஏதுவாக, தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் தனியார்



தொழில் நிறுவனங்கள் பங்கேற்கும் வேலைவாய்ப்பு முகாம்கள் தனியார் தொண்டு அமைப்புகள் மூலம் நடத்தப்பட்டு வருகின்றன. இம்முகாம்களில் பல்லாயிரக் கணக்கான இளைஞர்கள் பங்கேற்று பயன் பெற்றுள்ளனர். தமிழக அரசின் எல்காட் நிறுவனமும் தனியார் தொழில் அமைப்புகளுடன் இணைந்து இந்த மாபெரும் வேலைவாய்ப்பு முகாம்களை நடத்தி வருகிறது. தனியார் தொண்டு அமைப்புகளின் பயனுள்ள இம்முயற்சிகளைப் பாராட்டுவதோடு தமிழக அரசு தொடர்ந்து தனது நல்லாதரவையும் ஒத்துழைப்பையும் நல்கும்.

44. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் நலனுக்கு இந்த அரசு தலையாய முக்கியத்துவம் அளித்துவந்துள்ளது. முன்னெப்போதும் இருந்திராத வகையில் நமது மாநிலத்தின் ஆண்டுத் திட்ட ஒதுக்கீடான ரூபாய் 17,500 கோடியில் 15 சதவீதம் அதாவது ரூபாய் 2,615 கோடி ஆதிதிராவிடருக்கான துணைத் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அவர்களுள் மிகவும் பின்தங்கியுள்ள அருந்ததியர்களுக்கு 3 சதவீத உள் ஒதுக்கீடு அளித்து அவர்களது சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழி வகுத்துள்ளது. அரசின் இந்த நடவடிக்கையால் இந்த ஆண்டு அருந்ததியர் வகுப்பைச் சேர்ந்த 56 மாணவர்கள் மருத்துவக் கல்லூரிகளிலும், 1,165 மாணவர்கள் பொறியியல் கல்லூரிகளிலும் சேர்ந்து பயில இயன்றுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.


**45. தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதிக் கழகத்தால் வேளாண்மை சாராத தொழில்களை மேற்கொள்ள ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்த தொழில்முனைவோருக்குக் கடன் வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் இக்கடன்களைத் திருப்பிச் செலுத்த இயலாத நிலையில் உள்ளனர் என்றும், இக்கடன்களை இரத்து செய்ய வேண்டுமென்றும் அரசுக்கு அளித்துள்ள**



**கோரிக்கையை ஏற்று, 31.3.2009 அன்று நிலுவையிலுள்ள ரூபாய் 83 கோடி அசல் மற்றும் வட்டித் தொகையை முழுமையாக இரத்து செய்ய அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் 53,524 ஆதிதிராவிடர் தொழில் முனைவோர் பயன் பெறுவர்.**

46. நமது மாநிலத்தில் சில பகுதிகளில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினராக அங்கீகரிக்கப் பட்டுள்ள சமூகங்களைச் சார்ந்தவர்கள், மாநிலத்தில் மற்ற பகுதிகளில் குடியேறும் போது அப்பகுதிகளில் அவர்களுக்கான சான்றிதழ் கிடைப்பதில் உள்ள இன்னல் களைக் களைந்து, அத்தகையோருக்கு மாநிலமெங்கும் இச்சான்றிதழ்கள் கிடைத்திட இந்த அரசு ஆணையிட்டுள்ளது. மத்திய அரசின் உயர் கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப் பட்டோருக்கு 27 சதவித இட ஒதுக்கீடு கிடைத்திட இந்திய அரசியல் சட்டத்தில் உரிய திருத்தத்தைக் கொண்டுவந்து வழிவகை செய்யப்பட்டுள்ள நிலையில், இந்து மற்றும் பௌத்த மதங்களைச் சார்ந்த ஆதிதிராவிடர் களுக்கு கிடைத்து வரும் ஒதுக்கீட்டுச் சலுகையானது, கிறித்தவ மதத்தைச் சார்ந்த ஆதிதிராவிடர்களுக்கும் கிடைத்திட ஆவன செய்யவேண்டும் என மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.

47. 1996–2001 ஆம் ஆண்டு காலத்தில் 145 சமத்துவபுரங்களை இவ்வரசு நிறுவியது. மேலும், 95 சமத்துவபுரங்கள் மூன்றாண்டு காலத்தில் அமைக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கேற்ப, இதுவரை 29 சமத்துவபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், இந்த நிதியாண்டில் 30 சமத்துவபுரங்கள் அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. வரும் நிதியாண்டில் எஞ்சிய 36 சமத்துவபுரங்கள் உருவாக்கப்படும்.



48. மகளிருக்குச் சமுதாயத்தில் உரிய அங்கீகாரத்தையும், அதிகாரத்தையும் வழங்கி, சமுதாய வளர்ச்சியில் அவர்கள் தமது உரிய பங்கினை ஆற்றிட இந்த அரசு எப்போதுமே உறுதுணையாக இருந்துள்ளது. மகளிருக்கு சமச் சொத்துரிமையையும், வேலைவாய்ப்பு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் 33 சதவீத இடஒதுக்கீட்டையும் இந்த அரசுதான் முன்பே வழங்கியது. இந்த வகையில், உள்ளாட்சி அமைப்புகளில் மகளிருக்கான இட ஒதுக்கீட்டை 50 சதவீதமாக உயர்த்துவதற்கான மத்திய அரசின் முடிவை இந்த அரசு வரவேற்கிறது. நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களில் மகளிருக்கு 33 சதவீத இடஒதுக்கீடு அளிப்பதற்கான சட்டம் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும் என்று அண்மையில் நாடாளுமன்றக் குழு பரிந்துரைத்திருப்பது, இருண்ட வானில் ஒரு ஒளிக் கீற்றுப் போல் மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. இந்நிலையில், மேலும் காலம் தாழ்த்தாது இச்சட்டத்தை உடனடியாக நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

49. 20 ஆண்டுகளுக்கு முன்பு திராவிட முன்னேற்றக் கழக அரசால் தொடங்கப்பட்ட மகளிர் சுயஉதவிக் குழு இயக்கம் இன்று ஒரு மாபெரும் சமூக இயக்கமாக வேரூன்றி வளர்ந்துள்ளது. இந்த இயக்கத்தை மேலும் வலுப்பெறச் செய்யும் வகையில், கடந்த மூன்றரை ஆண்டுகளில் 16.59 இலட்சம் உறுப்பினர்களைக் கொண்ட 1,07,024 மகளிர் சுயஉதவிக் குழுக்கள் தொடங்கப்பட்டுள்ளன. மேலும், ரூபாய் 150 கோடி நிதி ஒதுக்கி, தகுதியுள்ள அனைத்துச் சுய உதவிக் குழுக்களுக்கும் சுழல்நிதி வழங்க ஆவன செய்யப்பட்டுள்ளதோடு, இக் குழுக்களுக்கு ரூபாய் 5,022 கோடி வங்கிக் கடனும் அளிக்கப்பட்டுள்ளது.

50. மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கக்கூடிய கடல் மீன்பிடித் தொழில் மேலாண்மை மற்றும் நெறிப்படுத்துதல் சட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, அண்மையில் நடந்த நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் கொண்டுவராமல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. மேலும், மாண்புமிகு மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இச்சட்ட முன்வடிவு மீனவச் சமுதாய மக்கள் நலன் குறித்த முக்கியமான சட்ட வரைவு என்பதால் மீனவர்களின் நலன் முழுவதும் பாதுகாக்கப்படும் வரையில் இம்மியளவும் முன்செல்ல மாட்டோம் என்று உறுதியளித்துள்ளார். மீனவர் நலனுக்கு எதிரான எந்த ஒரு சட்டத்தையும் மத்திய அரசு இயற்றக் கூடாது என்று இந்த அரசு உறுதியாக வலியுறுத்துகிறது. மேலும், கடலோரப் பகுதிகளில் மீன்பிடிக்கும் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் அடிக்கடி சந்திக்க நேரிடும் இன்னல்களைக் களைய மத்திய அரசு உடனடியாக ஆவன செய்யவேண்டும் என்றும் வலியுறுத்துகிறோம். கச்சத் தீவில் தமிழக மீனவர்களுக்கு ஏற்கெனவே 1976ஆம்

ஆண்டுவரை இருந்த பாரம்பரிய உரிமைகளை மீண்டும் பெற்றுத்தர மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்துகிறோம்.




51. சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு இந்த அரசு பதவியேற்ற பின், பல்வேறு நல உதவிகள் அளிக்கப்பட்டுள்ளன. ரூபாய் 110 கோடி செலவில் மீனவர்களுக்கு வலைகள், மிதிவண்டிகள், ஒளி விளக்குகள், உயிர்காக்கும் கவச உடைகள் மற்றும் முதலுதவிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், விசைப்படகு மீனவர்கள் பயன்படுத்தும் மானிய விலை டீசலின் அளவு மாதமொன்றுக்கு 1,000 லிட்டர் என்பது 1,500 லிட்டராக உயர்த்தப்பட்டுள்ளது. சுனாமியால் தங்களது விசைப்படகுகளை இழந்த மீனவர்கள் வங்கிகள் மூலம் கடன் பெற்று புதிய விசைப்படகுகளை வாங்கியுள்ளதாகவும், வாங்கிய வங்கிக் கடன்களைக் குறித்த காலத்தில் திருப்பிச் செலுத்த இயலாது இருக்கின்றனர் என்றும், இக்கடன்களைத் திருப்பிச் செலுத்த தமிழக அரசு உதவிபுரிய வேண்டும் என்றும் விசைப்படகு மீனவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். அவர்களது வேண்டுகோளின் அடிப்படையில் வங்கிகளுடன் கலந்து ஆலோசித்து விசைப்படகு மீனவர்களின் கடன் பளுவை நீக்கும் வகையில் ஒரு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. **இத்திட்டத்தின் கீழ் சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் வங்கிகளிடமிருந்து பெற்ற கடனில், அசல் முழுவதையும் அரசே வங்கிகளுக்குத் திருப்பிச் செலுத்தும். இக்கடன்களின் மீதான நிலுவை வட்டியை ரத்து செய்ய வங்கிகள் இசைந்துள்ளன. இதனால் தமிழக அரசுக்கு ரூபாய் 80 கோடி செலவு ஏற்படும்.**

52. இலங்கையில் தமது சொந்த நாட்டிலேயே அகதிகளாக வாழ நேரிட்டு, சொல்லொணாத் துயரங்களுக்கு ஆட்பட்டுவரும் அம்மக்களுக்கு நிவாரணப் பொருள்களை வழங்குவதற்காக ரூபாய் 52 கோடி அளவிற்கு நிதி திரட்டி, அத்தியாவசியப் பொருள்களை இந்த அரசு


அனுப்பிவைத்தது. இலங்கைத் தமிழர் தங்கள் வாழ்விடங்களுக்குத் திரும்பிச் சென்று மறுவாழ்வு பெறுவதற்காக, ரூபாய் 1,000 கோடி நிதியுதவியை அறிவித்துள்ள மத்திய அரசிற்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

53. இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்டு முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருந்த தமிழர்களில் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டோர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அயராத முயற்சியினால், தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்ப வழி வகை செய்யப்பட்டது. இவர்கள் தவிர இன்னும் முகாம்களிலேயே தொடர்ந்து வசித்து வருபவர்கள் அனைவரும் இந்த மாத இறுதிக்குள் அவரவர்களது சொந்த ஊருக்குத் திரும்பி, மறுவாழ்வு பெற வழி செய்யப்படும் என இலங்கை அரசு உறுதி அளித்திருப்பது சிறிது ஆறுதலாக இருப்பினும், இவர்கள் அனைவரும் அனைத்து உரிமைகளோடும் உரிய பாதுகாப்போடும் வசித்திடவும், போரின்போது இழந்த வாழ்வாதாரத்தை மீண்டும் பெறவும், இலங்கைத் தமிழர்களுக்கு மன நிறைவு அளிக்கும் வகையில் நிரந்தர அரசியல் தீர்வை விரைவில் காணவும், இலங்கை அரசைத் தொடர்ந்து வலியுறுத்தி ஆவன செய்யவேண்டும் என்று இந்தியப் பேரரசைக் கேட்டுக்கொள்கிறோம்.

54. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தவாறு தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழர் முகாம்கள் அனைத்தையும் மாண்புமிகு அமைச்சர்கள் நேரில் பார்வையிட்டு அங்கு வசிக்கும் மக்களின் தேவைகளைக் கண்டும் கேட்டும் அறிந்து விரிவான அறிக்கைகளை அரசிடம் அளித்தனர். அதன்படி, குடிநீர்



வசதி, சாலை வசதி, வீட்டுவசதி போன்ற பல்வேறு பணிகளுக்காக ரூபாய் 100 கோடி நிதி ஒதுக்கப்பட்டுப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இதுமட்டுமன்றி, முகாம்களில் வாழும் அனைத்துக் குடும்பங்களுக்கும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டு, அவர்கள் கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தில் உறுப்பினர்களாகவும் சேர்க்கப் பட்டுள்ளனர். வெகுகாலமாக அவர்கள் நமது நாட்டில் எவ்வித பிரச்சினைக்கும் இடம் கொடுக்காமல் வாழ்ந்து வருவதைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு நிரந்தர வாழ்வுரிமை வழங்கப்பட வேண்டும் என்று மத்திய அரசை இந்த அரசு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.




55. தமிழ் மொழியைச் செம்மொழியாக அறிவித்து பெருமைப் படுத்தியதோடு, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தையும் சென்னையில் அமைத்து, மத்திய அரசு பெருமைப் படுத்தியுள்ள சூழ்நிலையில், கோவை மாநகரில் வரும் ஜூன் திங்கள் 23 ஆம் நாள் முதல் 27 ஆம் நாள் வரை உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு மிகச் சிறப்பாக நடத்தப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார். இதற்காக முதலமைச்சர் தலைமையில் மாநாட்டுத் தலைமைக் குழுவும், 20 குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன.

56. கோவையில் உள்ள கொடிசியா வளாகத்தில், உலகெங்கும் இருந்து பெரும் திரளாக வரவிருக்கும் தமிழ் அறிஞர்களும், ஆர்வலர்களும் ஒன்று கூடி, தமிழ் மொழி, அதன் வளர்ச்சி மற்றும் தேவைகள் குறித்தும் தமது கருத்துக்களை பரிமாறிக்கொள்ள வாய்ப்பாக 20 அரங்கங்கள் அமைக்கப்படவுள்ளன. இந்த வளாகத்தின் அருகே பல்லாயிரம் பேர் அமரக்கூடிய மாநாட்டுப் பந்தல் அமைக்கப்படவுள்ளது. இம்மாநாட்டின்

நினைவாக சர்வதேசத் தரத்திலான தாவரவியல் பூங்கா ஒன்று 'செம்மொழிப் பூங்கா' என்ற பெயரில் கோவையில் அமைக்கப்படும்.

57. இயற்கை என்ற வலையில் மானுடம் ஒரு இழை தான், இவ்விழை தனித்திருக்க முடியாது என்ற உண்மையை உணர்ந்து, சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும், உலகின் வெப்பநிலை மேலும் உயராமல் தடுக்கவும், தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்ற கொள்கை முடிவினை, அண்மையில் கோபன்ஹேகன் நகரில் ஐக்கிய நாடுகள் மன்றத்தால் நடத்தப்பட்ட சுற்றுச்சூழல் பாதுகாப்பு மாநாட்டில் உலக நாடுகள் எடுத்துள்ளன. நமது பிரதமர் மாண்புமிகு மன்மோகன்சிங் அவர்களும் இதற்கான செயல் திட்டங்களை நமது நாடும் செயல்படுத்தும் எனக் குறிப்பிட்டுள்ளார். எதிர்காலச் சிந்தனையோடு முற்போக்கான பல சமூகப் பொருளாதாரத் திட்டங்களைச் செயல்படுத்திவரும் நமது அரசும் இக்குறிக்கோளை எட்டும் பணியில் தனது உரிய பங்கினைச் செவ்வனே ஆற்றும். இந்த வகையில், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும் தூய்மையான இயற்கை எரிசக்தியை வளர்க்கவும் தேவையான திட்டங்களை வகுத்து இந்த அரசு செயல்படுத்தும். **இதற்காக 'சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கவல்ல எரிசக்தி மேம்பாட்டு நிதி' (Environment Protection and Renewable Energy Development Fund) ஒன்றினை இந்த அரசு உருவாக்கும்.**

58. தற்போது நிலவிவரும் பொருளாதாரத் தேக்கநிலையால் அரசுக்கு கடும் நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ள இந்தச் சூழ்நிலையிலும், மத்திய அரசின் ஆறாவது ஊதியக் குழு பரிந்துரைத்த ஊதிய விகிதங்களை மாநில அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் இந்த அரசு நடைமுறைப்படுத்தியுள்ளது. சத்துணவுப் பணியாளர்கள் மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்களின் நீண்டநாள் கோரிக்கையினை ஏற்று அவர்களுக்குச் சிறப்பு காலமுறை ஊதியமும், சிறப்பு ஓய்வூதியமும் வழங்கப்பட்டுள்ளன. அரசு அலுவலர்களின் நியாயமான கோரிக்கைகளைத் தொடர்ந்து நிறைவேற்றி வரும் அதேவேளையில், அரசுத் திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்க்கும் பெரும் பணியில் அவர்கள் அனைவரும் முழு ஈடுபாட்டோடும் பொறுப்புணர்வோடும் செயல்பட வேண்டும் என்று இந்த அரசு கேட்டுக்கொள்கிறது.

59. அரசு காலிப் பணி இடங்களுக்கு தேர்வாணையத்தின் மூலமாகவே முறையான பணியாளர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற நிலை உள்ளது. இடையில் ஒரு சில பணியிடங்கள் காலியாகும் போது – அவற்றை நிரப்புவதற்குத் தேர்வாணையத்தின் தேர்வுப் பட்டியல்

கிடைப்பதில் தவிர்க்க முடியாத தாமதம் ஏற்படும்போது, மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய அரசுப் பணிகளில் தாமதம் ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு – அந்தப் பணிகளில் முறையாக புதிய பணியாளர்கள் அமர்த்தப்படும் வரையில் – ஓய்வு பெற்ற அரசு அலுவலர்களை காலியாக உள்ள சில பணியிடங்களுக்கு தற்காலிகமாக நியமித்துக் கொள்ள முனைந்திடுவதை – வேலைவாய்ப்புக் காகக் காத்திருக்கும் இளைஞர்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் நடவடிக்கை என்றோ – வேலைவாய்ப்புத் தடையாணை போன்ற ஆபத்தான ஒன்று என்றோ யாரும் கருத வேண்டாமென்று இந்த அரசு தெளிவுபடுத்த விரும்புகிறது.

**60.** புதிய சட்டமன்றப் பேரவை மற்றும் தலைமைச் செயலக வளாகத்தை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமைத்திடத் திட்டமிடப்பட்டு, பணிகள் மிக வேகமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நவீன வசதிகளுடன் கூடிய எழில் ததும்பும் இந்த மாபெரும் வளாகம், மாண்புமிகு பேரவை உறுப்பினர் களுக்கும் அரசு அலுவலர்களுக்கும் பயனுள்ளதாக இருப்பதோடு, தமிழகத்திற்கு மேலும் பெருமை சேர்ப்பதாக அமையும். அதுமட்டுமன்றி, சென்னையில் அமைக்கப்பட்டுவரும் உலகத் தரம்வாய்ந்த அறிஞர் அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகத்திற்கான பணிகளும் விரைவில் நிறைவுறும் நிலையில் உள்ளன.

**61.** திருவள்ளுவர் ஆண்டு பிறக்கும் தைத் திங்கள் முதல் நாளே புத்தாண்டுத் தொடக்கம் என அனைத்துத் தமிழ் அறிஞர்களும் சான்றோர்களும் ஒப்புக்கொண்ட உண்மையின் அடிப்படையில்; சட்டம் இயற்றி, கொண்டாடி வருவதைத் தொடர்ந்து இன்னும் சில நாட்களில் வரவிருக்கின்ற அந்தத் தமிழ்ப் புத்தாண்டு பொங்கல் திருநாளுக்கான வாழ்த்துக்களையும் இந்த உரையின் வாயிலாகத் தெரிவித்துக் கொள்வதோடு, தமிழ்நாட்டு மக்கள் அனைவரும், அந்நாளை தம் வாழ்விலோர் திருநாளாகக் கொண்டாடி மகிழ வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.


**62.** இவ்வாறு ஒல்லும் வகையெல்லாம் உழைப்போருக்கும், உழவர் பெருமக்களுக்கும் மற்றும் அனைத்துத் தரப்பினருக்கும் உவகையளிக்கும் வண்ணம் பணிபுரிந்து மக்கள் நலம் பாராட்டும் இந்த அரசுக்கு, என்றும் தோன்றாத் துணையாய் இருப்பீர் என்ற நம்பிக்கையோடு என் உரையை நிறைவு செய்கிறேன்.

**வணக்கம்**

* * *

# அயராது பணியாற்றும் அரசு!

11–1–2010 அன்று, சட்டப்பேரவையில்,
மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும்
தீர்மானத்தின் மீதான விவாதத்திற்குப் பதிலளித்து
மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் ஆற்றிய உரை :–



ஆளுநர் உரையின் மீது நடைபெற்றுள்ள விவாதத்திற்குப் பதில் அளிக்கக்கூடிய வாய்ப்பினை தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் எனக்கு வழங்கியிருக்கிறார்கள். சென்ற ஆண்டும் இந்த வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. பொன்


உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு-கோவை★2010 ஜூன் 23-27


வைக்க வேண்டிய இடத்திலே ஒரு பூவையாவது வையுங்கள் என்ற பழமொழியைச் சொல்லி, சென்ற ஆண்டு என்னுடைய உரையை நான் தொடங்கினேன். அதே நிலையோடுதான், அந்த நினைப்போடுதான் இப்பொழுதும் பதிலுரையை நான் ஆற்றிட முன்வந்திருக்கிறேன். தொண்டர்தம் பெருமை சொல்லவும் அரிதே என்ற இலக்கியத்திற்கு இலக்கணமாக எனக்கு இந்த வாய்ப்புக் கிடைத்திருக்கிறது என்று நான் உளமார நம்புகிறேன்.

**பாரம்பரியமிக்க மன்றத்தின் கடைசிக் கூட்டத் தொடர்**

புதிய சட்டமன்றப் பேரவை அமைக்கப்பட்டு வருவதைப் பற்றி ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே, சரித்திரக் கீர்த்திமிக்க இந்தச் சட்டப்பேரவையில் நடைபெறக்கூடிய கடைசிக் கூட்டத்தொடர் இதுவாகத்தான் இருக்கப்போகிறது. அடுத்துவரும் நிதிநிலை அறிக்கைக் கூட்டத்தொடர் புதிய சட்டமன்றப் பேரவையில் நடைபெறுவதற்கு ஏற்ற வகையில் நம்முடைய தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் அடிக்கடி நேரடியாகச் சென்று அதைப் பார்வையிட்டு ஆக்கப்பூர்வமான கருத்துகளை, யோசனைகளை எடுத்துச்சொல்லி அந்தப் பணியினை அவர் விரைவுபடுத்திக்கொண்டிருக்கிறார்.

பாரம்பரியமிக்க இந்த மன்றத்தின் கடைசி கூட்டத்தொடர் என்ற காரணத்தால், என்னுடைய பதிலுரைக்குப் பின்னால், சட்டமன்றப் பணியிலே பொன்விழா கண்டிருக்கின்ற நம்முடைய தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் இங்கே உரையாற்ற இருக்கின்றார்கள். எனவே அதற்குரிய நேரத்திற்கு நான் குறுக்கிட விரும்பாமல், சுருக்கமாக என்னுடைய பதிலுரையை அமைத்துக்கொள்ள விரும்புகின்றேன்.

கடந்த 6ஆம் தேதியன்று இந்தப் பேரவையில் நம்முடைய தமிழக ஆளுநர் அவர்கள் உரை நிகழ்த்தியிருக்கின்றார்கள். அரசு இதுவரை நிறைவேற்றியிருக்கக்கூடிய பல்வேறு சாதனைகளில் சிலவற்றை குறிப்பிட்டுக் காட்டி, எதிர்வரக்கூடிய நிதியாண்டில் செயல்படுத்த இருக்கக்கூடிய பல்வேறு திட்டங்களை விரிவாக எடுத்துச் சொல்லி இங்கே உரையாற்றியிருக்கிறார்கள். இந்த ஆளுநர் உரை குறித்து நம்முடைய சட்டமன்றக் கட்சியினுடைய தலைவர்கள், உரையாற்றியிருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள், அதேபோல வெளியிலே இருக்கின்ற பல்வேறு கட்சிகளுடைய தலைவர்கள், பல்வேறு அமைப்புகளைச் சார்ந்திருக்கக்கூடிய நிருவாகிகள், செய்தித்தாள்கள், ஊடகங்கள் பலர் பாராட்டி கருத்துகளை எடுத்துச் சொல்லியிருக் கிறார்கள்; சிலர் குறைகளையெல்லாம் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக ம.தி.மு.க., அ.தி.மு.க.வைச் சார்ந்த உறுப்பினர்கள் வழக்கம்போல, ஆளுநர் உரையைப் புறக்கணித்து வெளிநடப்புச் செய்து, வெளிநடப்புச் செய்ததோடு மட்டுமல்லாமல், வெளியிலே சென்று விமர்சனங்களும் செய்திருக்கிறார்கள். நல்லவேளை விவாதத்திலாவது அவர்கள் கலந்துகொண்டு தங்களது கடமையை ஆற்றியிருக்கிறார்கள். பதிலுரைக்கு இருப்பார்கள் என்ற நம்பிக்கையுடன் நான் இருந்தேன். ஒருவேளை எதிர்க்கட்சித்



தலைவர் அவர்களை வழியனுப்பி வைத்துவிட்டு உள்ளேகூட வருவதற்கு வாய்ப்பு உண்டு. அதற்காக நான் அவர்களை ஆவலோடு எதிர்நோக்கிக் காத்திருக்கிறேன் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

**மாக்கோலம் – பூக்கோலம்**

'போற்றுவார் போற்றட்டும், புழுதி வாரித் தூற்றுவார் தூற்றட்டும், ஏற்றதொரு கருத்தினை எடுத்துரைப்பேன், எவர் வரினும் நில்லேன், அஞ்சேன்' என்கின்ற வரிகளுக்கேற்ப செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய நம்முடைய தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுடைய இலட்சியத்திற்கு, செயல் வடிவம் கொடுக்கக்கூடிய வகையிலே இந்த ஆளுநர் உரை அமைந்திருக்கிறது என்று சொன்னால், நிச்சயம் அது மிகையாகாது.

ஆளுநர் உரையின்மீது நடைபெற்றிருக்கக்கூடிய விவாதத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் இராமகிருஷ்ணன், சிவசங்கர், செங்குட்டுவன், சௌந்திரபாண்டியன், எதிர்க்கட்சியாக இருக்கக்கூடிய அ.தி.மு.க.வைச் சார்ந்த எதிர்க்கட்சித் தலைவர் விசுவநாதன், சேகர்பாபு, அக்ரி கிருஷ்ணமூர்த்தி, காங்கிரஸ் பேரியக்கத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் பீட்டர் அல்போன்ஸ், ஞானசேகரன், வசந்தகுமார், கோபாலன், டாக்டர் விஷ்ணு பிரசாத், பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த கோ.க. மணி அவர்கள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் செல்வி பாலபாரதி, மகேந்திரன், இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த சிவபுண்ணியம், குணசேகரன், ம.தி.மு.க.வைச் சார்ந்த டாக்டர் சதன் திருமலைக்குமார், ஞானதாஸ், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் ரவிக்குமார், எந்தக் கட்சியையும் சாராதவர் என்று தன்னை அடையாளம் காட்டிக்கொண்டு, பெருமைபடுத்திக் கொண்டிருக்கக்கூடிய எஸ்.வி. சேகர் ஆகியோர் பல்வேறு அரிய கருத்துகளை, ஆக்கபூர்வமான, அடிப்படையான

கருத்துகளையெல்லாம் இந்த அரசுக்கு இங்கே எடுத்துச் சொல்லி உரையாற்றியிருக்கிறார்கள். குறிப்பாக, இங்கே உரையாற்றி விடைபெற்ற நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், இந்த ஆளுநர் உரை, இந்த அவையிலே தாக்கல் செய்யப்பட்ட உடனேயே அவர் ஓர் அறிக்கையை வெளியிட்டிருந்தார்கள், ஆளுநர் உரையைப் பற்றி ஒரு விமர்சனம் செய்திருந்தார்கள். சில காரணங்களுக்காக இந்த ஆளுநர் உரையை இன்றைக்கு அரசியல் நோக்கத்தோடு எதிர்க்கலாமே தவிர, கடந்த மூன்றாண்டுகளில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நிறைவேற்றப்பட்டிருக்கக்கூடிய மக்கள் நலத் திட்டங்கள், முந்தைய ஆட்சியில் நடந்தவைகளையும் தயவுசெய்து ஒப்பிட்டுப் பார்க்காமல் இருக்க மாட்டார்கள் என்பது எங்களுக்கே நன்றாகத் தெரியும். எதிர்த்தே ஆக வேண்டும் என்பதுதான் எதிர்க் கட்சியினுடைய இலக்கணமாக இருந்துவிடக் கூடாது. ஆளுங்கட்சியினுடைய செயல் பாட்டைப் பிரதிபலிக்கக்கூடிய கண்ணா டியாக எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் நடந்து கொள்வதுதான், அது ஆரோக்கியமான அரசியலுக்கு வழிவகுத்திட முடியும்.

கண்ணாடியில் முகம் பார்க்கிறோம். முகத்திலே ஒரு சின்ன பரு தெரிகிறது. முகத்தினுடைய அழகுக்கு அது குறைவாக இருக்கிறது, இதனைப் போக்க என்ன செய்ய வேண்டுமென்று முகத்தினுடைய சொந்தக் காரனுக்கு இருக்கக்கூடிய கவலை. கன்னத்திலே ஏதேனும் கறை ஒட்டியிருந்தால் அதைக் கண்ணாடி காட்டும். அதைப் பார்த்துக் கறையை அகற்றிக்கொள்ள முடியும். முகத்திற்குச் சொந்தக்காரர் ஆளுங்கட்சியினர். அதிலுள்ள பருவை, கறையைப் பிரதிபலிக்கும் கண்ணாடி எதிர்க்கட்சியினர். நல்லாட்சி நடைபெற முகம் ஆரோக்கியமாக இருப்பது மட்டுமல்ல, கண்ணாடியும் தரமானதாக இருந்தாக வேண்டும். ரசம் போன கண்ணாடியாகவோ, சரியாகப் பிரதிபலிக்கும் தன்மையில்லாத தாகவோ இருந்தால் அந்தக் கண்ணாடி நிச்சயமாகப் பயன் தரமுடியாது. ஆகவே ஆளுநர் உரையைப் பற்றி முன்னாள் முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு அலங்கோல உரை என்று குறிப்பிட்டார். ஆனால், நான் இந்த ஆளுநர் உரையை பொங்கல் திருநாளில் தமிழர்கள் வீடுகளில் மகிழ்ச்சியோடு போடப்படக்கூடிய மாக்கோலம் என்கிறேன். தமிழர்களின் உள்ளம் பூரிப்பதை வெளிப்படுத்தும் பூக்கோலம்தான் இந்த ஆளுநர் உரை. அணியாய், அணியாய் வந்து கொண்டிருக்கும் நலத் திட்டங்களின் ஊர்கோலம்தான் இந்த ஆளுநர் உரை. ஆளுநர் உரையைப் பார்த்து வியந்து இன்றைக்குப் பாராட்டிக் கொண்டிருக்கிறது இந்த பூகோளமே, என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

**மக்கள் நலன் பேணும் அரசு**

அதேபோல் பல பத்திரிகைகள் இந்த ஆளுநர் உரையைப் பற்றி பல கோணங்களில் விமர்சித்திருக்கிறார்கள், பாராட்டி யிருக்கிறார்கள். சில ஆக்கப்பூர்வமான கருத்துகளை எல்லாம்கூட எடுத்துச்

சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக தினமலர் நாளிதழ், குவிப்பு என்கிற தலைப்பில் கவர்னர் உரையில் அடுக்கடுக்கான சலுகைகள் அறிவிப்பு என்கிற துணைத் தலைப்பில் குடிசை வீடுகளை ஒழித்து கான்கிரீட் வீடுகள் கட்டத் திட்டம். பட்டதாரி இல்லாத குடும்பங்களுக்கும் பெரிய உதவி. அரசுப் புறம்போக்கில் 3 ஆண்டுகள் குடியிருந்தாலே பட்டா கிடைக்கும். நெல் கொள்முதல் விலை 50 ரூபாய் உயர்வு. 21 இலட்சம் கான்கிரீட் வீடுகள் இலவசமாக கட்டித் தரும் மெகாத் திட்டம். சுனாமியால் பாதித்த மீனவர்களின் வங்கிக் கடனை அரசே செலுத்த முடிவு. பட்டதாரி இல்லாத குடும்ப மாணவர்களுக்கு தொழிற் கல்விக் கட்டணம் அரசே ஏற்பு. இப்படி மக்களைக் கவரும் வகையில் ஆளுநர் உரை அமைந்திருக்கிறது என்று தினமலர் நாளிதழ் குறிப்பிடுகிறது.

அதேபோல இந்து நாளேடு. " A Series of welfare measures and schemes including provision of houses for those living in huts marked Governor Surjit Singh Barnala's annual address to the State Assembly."

அதாவது குடிசைவாழ் மக்களுக்கு வீடுகள் கட்டித் தரும் திட்டம் உள்ளிட்ட அடுக்கடுக்கான நலத் திட்டங்கள் மேதகு ஆளுநர் சட்டமன்றத்தில் ஆற்றிய உரையில் இடம்பெற்றுள்ளன என்று இந்து நாளிதழ் குறிப்பிட்டிருக்கிறது.



அதேபோல The Times of India நாளிதழ் Welfare Blitz - Kreig, அதிரடி நலத் திட்ட அறிவிப்புக்கள் என்ற தலைப்புப் போட்டு திட்டங்கள் பற்றி செய்திகளை வெளியிடுகிற போது "When it comes to projecting itself as the ultimate welfare State, the DMK Government in Tamil Nadu is really pushing the envelope." மக்கள் நலம் பேணும் அரசுகளில் தலைசிறந்த அரசாக திராவிட முன்னேற்றக் கழக அரசு தன்னை முன்னிலைப்படுத்திக் கொண்டிருக்கிறது என்று The Times of India குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறது.

அதேபோல தினத்தந்தி பத்திரிகையாக இருந்தாலும், தினகரன் போன்ற பத்திரிகைகள் பாராட்டி செய்திகளை யெல்லாம் வெளியிட்டிருக்கிறது.

**வளர்ச்சியை நோக்கிய பயணம்**

அதேபோல தமிழகத்தில் இருக்கக்கூடிய பல்வேறு கட்சிகளின் தலைவர்கள், குறிப்பாக நம்முடைய தமிழக காங்கிரஸ் கட்சியின் தலைவர் கே.வி.தங்கபாலு அவர்கள், கூறுகிறார்,

''தமிழக அரசின் கொள்கை அறிவிப்பு, மக்களின் வளமான வாழ்க்கைக்கு அடித்தளம் அமைத்துள்ளது. கலைஞர் வீட்டு வசதித் திட்டம், ஏழை மக்களின் வாழ்வுக்கு ஒரு விடிவு காலம். விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையாக நெல் கொள்முதல் விலையில் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.50 கூடுதலாக அளிக்கப்படும் என்பது பாராட்டத்தக்கது. கலைஞர் தலைமையிலான ஆட்சியில் நிறைவேற்றப்படவிருக்கும் மக்கள் நலத் திட்டங்களை ஆளுநர் உரைமூலம் அறிவித்திருப்பதை பெரிதும் பாராட்டி வரவேற்கிறேன்'' என்று குறிப்பிடுகிறார்.

அதேபோல் இன்று உரையாற்ற வாய்ப்பில்லை என்று சொன்னாலும் நம்முடைய சட்டமன்ற காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் சுதர்சனம் அவர்கள் வெளியிலே செய்தியாளர்களிடத்திலே இந்த ஆளுநர் உரையைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்கிறபோது "மொத்தத்தில் இந்த ஆளுநர் உரையானது ஏழையெளிய மக்கள் சமுதாயத்தின் விளிம்பில் இருக்கக்கூடிய அடித்தட்டு மக்களின் வாழ்வுக்கு உத்தரவாதம் அளிக்கக்கூடிய ஒரு சிறப்பான உரை'' என்று அவரும் பாராட்டி இருக்கிறார்.

திராவிடர் கழகத்தின் தலைவர் ஐயா வீரமணி அவர்கள், ஆளுநர் ஆற்றியுள்ள உரை குறித்து "தந்தை பெரியார், அண்ணாவின் லட்சியங்களுக்கு செயல் வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த அரசு வளர்ச்சியை நோக்கிய பயணத்தை மேற்கொண்டுள்ளது. சொன்னதைச் செய்யும் அரசு தி.மு.க. அரசு என்பதற்கு ஓர் செப்பேடு என்றால் மிகையாகாது'' என்று மனம் திறந்து பாராட்டி இருக்கிறார்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் அவர்கள் "தமிழக அரசு செயல்படுத்தி வரும் சமூக நலத் திட்டங்களின் சாதனை வரலாற்றில் மேலும் ஒரு மைல் கல்லாக ஆளுநர் உரை அமைந்திருக்கிறது. தாட்கோ மூலம் வழங்கப் பட்ட அனைத்துக் கடன்களும் தள்ளுபடி



உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு-கோவை ★ 2010 ஜுன் 23-27



செய்யப்பட்டுள்ளன. இனிமேல் புதிய நலத் திட்டங்கள் அறிமுகப்படுத்துவதற்கு எதுவும் இல்லை என்று சொல்லும் அளவுக்கு ஏராளமான அறிவிப்புகள் வெளியிடப் பட்டுள்ளது" என்று அவரும் பாராட்டி யிருக்கிறார்.

அதேபோல் பாட்டாளி மக்கள் கட்சியி னுடைய நிறுவனர், டாக்டர் இராமதாஸ் அவர்கள், எவ்வளவு தான் பல குறைபாடுகளை, குற்றச்சாட்டுகளை அவர் சொல்லியிருந்தாலும், தாட்கோ கடன் இரத்து பற்றி, கான்கிரீட் வீடு கட்டக்கூடிய திட்டத்தைப் பற்றி, மீனவர்கள் கடன் இரத்து பற்றி, அவர் குறிப்பிட்டுச் சொல்கிறபோது இன்று காலையில்கூட செய்திகள் வந்திருக்கிறது, அவர் நேற்றைக்குப் பத்திரிகைகளில் பேட்டி தருகிறபோது மனப்பூர்வமாக வரவேற்கிறோம் என்று எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டமன்றக் கட்சித் தலைவர் செல்வி பாலபாரதி அவர்கள், தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் தினசரி ஊதியத்தை ரூ.80–லிருந்து 100 ரூபாய்க்கு உயர்த்தியதற்குப் பாராட்டியும், மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தையும் அவர் பாராட்டி இங்கு உரையாற்றியிருக்கிறார்.

அதேபோல், இந்திய தேசிய கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டமன்ற கட்சித் தலைவர் சிவபுண்ணியம் அவர்கள், ஏதோ சொல்லவேண்டும் என்பதற்காகச் சில குறைபாடுகளைச் சொல்லி, பாராட்டாமல் இருக்க முடியாது என்ற அந்த நிலையில் இருந்து அவரும் இலவச கான்கிரீட் வீடு திட்டத்தை, தாட்கோ கடன் ரத்தை, இலவச வீட்டுமனைத் திட்டத்தை அவரும் மனமகிழ்ச்சியோடு வரவேற்றிருக்கிறார்.

தமிழ்நாடு இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கினுடைய தலைவர் பேராசிரியர் காதர் மொகிதீன் அவர்கள், தமிழக மக்களின் நலனுக்கும், பலமான வாழ்வுக்கும் வழி வகுக்கக்கூடிய உரையாக ஆளுநர் உரை அமைந்திருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார். மூவேந்தர் முன்னேற்றக் கழகத்தின் தலைவர் ஸ்ரீதர் வாண்டையார் அவர்கள் கலைஞர் வீட்டு வசதித் திட்டம், கிராமப்புற மக்களுக்கு மிகப் பெரும் வரப்பிரசாதம். மீனவர்கள் கடன் இரத்து ஊக்கம் அளிக்கிறது, என்று பாராட்டியிருக்கிறார்.

**தொலைநோக்குத் திட்டங்கள்**

தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் கட்சியினுடைய தலைவர் பொன்குமார் அவர்கள் அடித்தட்டு மக்களின் வாழ்வை வளமாக்கும் சலுகைகள் நிரம்பிய ஆளுநர் உரை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆக, இப்படி பல கட்சியினுடைய தலைவர்கள், பல அமைப்புகளைச் சார்ந்திருக்கக் கூடியவர்கள் பாராட்டி இருந்தாலும், நம்முடைய முன்னாள் முதலமைச்சர், எதிர்க்கட்சியினுடைய தலைவர் அவர்கள் இந்த ஆளுநர் உரையைப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசுகிறபோது தொலைநோக்குத் திட்டங்கள் கொண்ட உரையாக இந்த ஆளுநர் உரை அமையவில்லை. அத்தோடு நிறுத்தவில்லை. இங்கே கூட அவர் பேசினார். முந்தைய உரைகளின் மறுபதிப்பாக இந்த ஆளுநர் உரை இருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொன்னார். நான் கேட்க விரும்புவது ஊரகப் பகுதிகளில் 6 ஆண்டு காலத்தில் குடிசையில் வாழும் மக்களுக்கு 21 இலட்சம் கான்கிரீட் வீடுகளைக் கட்டித் தரப்போகிறோம் என்று அறிவித்து இருக்கிறோமே இது தொலைநோக்குத் திட்டம் இல்லையா? அதற்காக முதற்கட்டமாக இந்த ஆண்டு 1,800 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்ய முன் வந்திருக்கிறோமே இது என்ன முந்தைய உரையினுடைய மறுபதிப்பா? பட்டதாரிகளே இல்லாத குடும்பங்களைச் சார்ந்த அனைத்துச் சாதி மாணவ, மாணவிகள் தொழிற் கல்வி பயில கல்விக் கட்டணத்திற்கு அரசு முன் வந்திருக்கிறதே இது தொலைநோக்குத் திட்டம் இல்லையா? அருந்ததியினருக்கு 3 சதவிகித உள் ஒதுக்கீடு காரணத்தால் 56 மாணவர்கள் மருத்துவக் கல்லூரியிலும் 1,165 மாணவர்கள் பொறியியல் கல்லூரியிலும் படிக்கக்கூடிய வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கிறோமே இது தொலைநோக்குத் திட்டம் இல்லையா?

ஆதிதிராவிட மக்களுக்கு தாட்கோ மூலமாக வழங்கப்பட்ட கடன் 83 கோடி ரூபாய் தள்ளுபடி செய்திருக்கிறோமே, இது முந்தைய உரையினுடைய மறுபதிப்பா? சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுடைய கடன் 61 கோடி ரூபாயை தள்ளுபடி என்று அறிவித்திருக்கிறோமே அது முந்தைய உரையினுடைய மறுபதிப்பா? நெல்லுக்கான கொள்முதல் விலையை குவிண்டாலுக்கு 50 ரூபாய் உயர்த்திக்கொடுக்க முன்வந்திருக்கிறோமோ இது தொலைநோக்குத் திட்டம் இல்லையா? இலவச வீட்டுமனைப் பட்டா பெறுவதற்கான குடியிருப்புக் காலவரம்பை ஏற்கெனவே 10 ஆண்டு காலத்திலிருந்து 5 ஆண்டு காலம்.


உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு-கோவை ★ 2010 ஜூன் 23-27

இப்போது 5 ஆண்டு காலத்திலிருந்து 3 ஆண்டுகாலம் குறைத்திருக்கிறோமே, இது என்ன முந்தைய உரையினுடைய மறு பதிப்பா ? சென்னை மருத்துவக் கல்லூரிக்கு நவீன வசதிகளோடு கூடிய கட்டடம் 70 கோடி ரூபாய் செலவில் கட்ட முன் வந்திருக்கிறோமே இது தொலைநோக்குத் திட்டம் இல்லையா ?

வருங்கால சமுதாயத்திற்கு பயன்படக்கூடிய வகையிலே புதிய சட்டமன்ற வளாகம், தலைமைச் செயலகம், அறிஞர் அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகம், அவைகள் எல்லாம் கட்டப்பட்டு, விரைவிலே திறக்கப்படவிருக்கிறதே, இவைகள் எல்லாம் தொலைநோக்குத் திட்டங்கள் இல்லையா ?

கோவையில் நடைபெற இருக்கக்கூடிய உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் நினைவாக சர்வதேசத் தரத்திலான தாவரவியல் பூங்கா, செம்மொழிப் பூங்கா என்கிற பெயரிலே உருவாக்க முடிவெடுத்திருக்கிறோமே, இது என்ன முந்தைய உரையினுடைய மறுபதிப்பா ? நீங்கள் வேண்டுமானால் எடுத்துப் பாருங்கள். எதிர்க்கட்சித் தலைவர், முன்னாள் முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து ஆளுநர் உரையாக இருந்தாலும், நிதிநிலை அறிக்கையாக இருந்தாலும், அதைப்பற்றி யோசிக்கிறபோது முந்தைய உரையின் அறிவிப்பு, முந்தைய உரையின் மறுபதிப்பு என்றுதான் தொடர்ந்து சொல்லியிருக்கிறாரே தவிர, வேறு ஒன்றும் சொல்லவில்லை. ஆக,



அவருடைய அறிக்கைதான், அவருடைய அறிக்கையினுடைய மறுபதிப்பாக இருந்து கொண்டிருக்கிறதே தவிர இந்த ஆளுநர் உரையைப் பொறுத்தவரை அப்படி இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள நான் விரும்புகிறேன்.

**கரும்புக்கு கூடுதல் விலை**

அதேபோல் கரும்பு கொள்முதல் விலையை பற்றிக் குறிப்பிட்டு விவசாயிகளுக்குப் பெருத்த ஏமாற்றம் அளிக்கிறது என்று அவர் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார். நான் கேட்க விரும்புவது, அ.தி.மு.க. ஆட்சியிலே கரும்புக்கு என்ன விலை கொடுக்கப்பட்டது. மத்திய அரசு நிர்ணயம் செய்திருந்த குறைந்தபட்ச சட்டபூர்வ விலையைவிடக் கூடுதலாக அ.தி.மு.க. ஆட்சியில் அரசின் சார்பில் பரிந்துரைத்த தொகை வழங்கப்பட்டதா? இல்லை. ஆனால், தற்போது கலைஞருடைய அரசு மத்திய அரசு நிர்ணயம் செய்திருக்கக்கூடிய குறைந்தபட்ச விலையைவிடக் கூடுதலாக 359 ரூபாய் 80 காசு உயர்த்தி வழங்கியது மட்டுமல்ல, வாகன வாடகை டன் ஒன்றுக்கு 90 ரூபாயும், மற்ற கூடுதல் கட்டுமான அடிப்படையில் ஊக்கத் தொகையாக 22 ரூபாய் 60 காசும் ஆகமொத்தம் டன் ஒன்றுக்கு 1,550 ரூபாய் கிடைக்க வழிவகை செய்திருக்கிறது. இவையெல்லாம் மறந்துவிட்டு கரும்பு விவசாயிகளுக்குப் பெருத்த ஏமாற்றம் என்று கூறியிருப்பது, வேடிக்கையிலும் வேடிக்கையாக இருக்கிறது என்பதை மாத்திரம் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

**ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி**

ஒரு கிலோ அரிசி இன்றைக்கு ஒரு ரூபாய்க்கு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த ஒரு கிலோ அரிசி வழங்கக்கூடிய திட்டத்தைப் பற்றிச் சொல்கிறபோது நான் ஒன்றை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். 2006 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலைச் சந்தித்த நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையாக நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் பல உறுதிமொழிகளை, வாக்குறுதிகளை அந்த அறிக்கையிலே எடுத்துச் சொல்லியிருந்தார்கள். எத்தனையோ உறுதிமொழிகள் உண்டு. அவற்றிலே ஒன்று, நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஒரு கிலோ அரிசியை இரண்டு ரூபாய்க்கு வழங்குவோம் என்று உறுதிமொழி தந்தார்கள்.

அப்போது அன்றைக்கு முதலமைச்சராக இருந்த இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், அவர் சொன்னது என்னவென்று கேட்டால், ஒரு கிலோ அரிசியை இரண்டு ரூபாய்க்கு எப்படித் தர முடியும்? முடியவே முடியாது, சாத்தியப்படாது, நடக்கவே நடக்காது. ஏதோ தேர்தலுக்காகச் சொல்லக்கூடிய வாக்குறுதி என்று அவர்கள் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆனால், மக்கள் அதை ஏற்று, நம்பி வாக்களித்த காரணத்தால் நாம் ஆட்சிக்கு வந்தோம், கலைஞர் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார்.



உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு-கோவை ★ 2010 ஜூன் 23-27



முதலமைச்சராக நேரு விளையாட்டரங்கத்திலே தன்னுடைய அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட போது, பதவிப் பிரமாணத்தை மேதகு கவர்னர் அவர்கள் நடத்தி வைத்தபோது, நியாயமாக ஒரு முதலமைச்சர் பதவி ஏற்றுக்கொண்டால், பதவி ஏற்பு விழா முடிந்தால், அந்த விழா முடிந்ததற்குப் பிறகு நேராகக் கோட்டைக்குச் செல்வார்கள். கோட்டைக்குச் சென்று அவருடைய அறையிலே போய் உட்காருவார்கள். நாற்காலியிலே போய் உட்காருவார்கள். பின், அடையாளத்திற்காக ஒரு கோப்பில் கையெழுத்துப் போடுவார்கள். இதுதான் மரபின்படி நடந்து கொண்டிருக்கக்கூடிய ஒரு செய்தி. ஆனால், அதற்கெல்லாம் நேர்மாறாக பதவியேற்றுக் கொண்டு, அந்த விழா மேடையிலேயே, அவர் நேராகக் கோட்டைக்குச் செல்லாமல், கோட்டையில் இருக்கக் கூடிய கோப்பினையே விழா மேடைக்கு வரவழைத்து, அந்த விழா மேடையிலேயே அவர் போட்ட முதல் கையெழுத்து ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய். இப்போது அதுவும் மாறி ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய் என்று அதுவும் இன்றைக்கு மாறியிருக்கிறது. அதை நான் ஏன் சொல்கிறேன் என்று சொன்னால், அன்றைக்கு முடியவே முடியாது, நடக்கவே நடக்காது, சாத்தியப் படாது என்று சொன்னார்கள். ஆனால், இன்றைக்கு முடிந்திருக்கிறதா இல்லையா ?

நேற்றைக்குக் கூட நான், நேற்று முன்தினம் இதே அவையிலே நான் கூர்ந்து கவனித்துப் பார்த்தேன். நம்முடைய உறுப்பினர் அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் விலைவாசியைப் பற்றி ஒப்பிட்டுச்



உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு-கோவை ★ 2010 ஜூன் 23-27

சொல்கிறபோது இந்த ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாயைத்தான் அவர் அடையாளம் காட்டினார், மற்ற விலைகளைச் சொல்கிறபோது. எங்களுக்குக் கூட அவ்வளவு வேகமாக அந்த ஒரு கிலோ அரிசியைப் பற்றி ஒரு ரூபாய் என்று சொல்லக்கூடிய அளவுக்கு வேகம் வராது. ஆனால், அவருக்கு அந்த வேகம் வந்தது. நான் அவர் பேசியதைக்கூட எண்ணிப் பார்த்தேன். 19 முறை சொல்லியிருக்கிறார், ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய், ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய் என்று சொல்லி 19 முறை சொன்னார். நான் எண்ணினேன், எத்தனை முறை சொல்கிறார் என்று. ஆகவே, அந்த அளவுக்கு அவருடைய உள்ளத்திலேயிருந்து ஆழமாக அந்த ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய் என்பது பதிந்திருக்கிறது என்று எண்ணிப் பார்க்கிறபோது உள்ளபடியே எங்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது.

**மானிய விலையில் மளிகைப் பொருட்கள்**

இன்னொரு சம்பவத்தைக்கூட நான் இந்த அவையிலே பதிவு செய்ய வேண்டும். பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணாவினுடைய பிறந்த நாளை ஒட்டி ஒவ்வொரு ஆண்டும் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய இளைஞர் அணியின் சார்பில் கொண்டாடி வருகிறோம். அண்ணா அவர்களுடைய நூற்றாண்டு விழாவை யொட்டி இளைஞர் அணியின் சார்பில் நாங்கள் கொண்டாடியுள்ளோம். அந்த வகையிலே பள்ளிக்கூடத்திலே படித்துக் கொண்டிருக்கக்கூடிய மாணவ, மாணவிகளுக்கு எல்லாம் பேச்சுப் போட்டிகளை, கவிதைப் போட்டிகளை, கட்டுரைப் போட்டிகளை நடத்திக் கொண்டிருக்கிறோம். அந்தவகையிலே இந்த ஆண்டு, அந்த நிகழ்ச்சியை நடத்துகிறபோது திண்டுக்கல் பகுதியைச் சார்ந்த 5 ஆம் வகுப்பிலே படித்துக் கொண்டிருக்கக் கூடிய ஒரு மாணவன், அவன் அந்தப் போட்டியிலே பங்கேற்று, அதிலே கலந்து கொண்டு உரையாற்றினான். அப்படிப் பேசுகிறபோது இந்த அரசினுடைய சாதனைகளைப் பற்றியெல்லாம் வரிசைப்படுத்திச் சொன்னான். சொல்லி விட்டு, ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாயைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னான். சொல்லிவிட்டு, அதற்கு ஒரு உதாரணம் கொடுத்தான், என்ன என்று கேட்டால் மகாத்மா காந்தி அவர்களை இந்த நாட்டினுடைய தலைவராக, அதாவது Father of the Nation-ஆகக் கருதுகிறோம். அதுபோல் இன்றைக்கு Father of the Ration-ஆக கலைஞரை நாங்கள் எண்ணிக் கொண்டிருக்கிறோம் என்று அந்த 5–ஆவது வகுப்பு படித்துக் கொண்டிருக்கக்கூடிய மாணவனுடைய உள்ளத்திலே அது பதிந்திருக்கிறது என்று சொன்னால், அக்ரி கிருஷ்ணமூர்த்தியினுடைய உள்ளத்திலே பதிந்திருப்பதிலே எந்தவித தவறும் இல்லை என்பதைத்தான் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எனவே, விலைவாசி என்பது இங்கே தமிழகத்திலே மட்டுமல்ல, இங்கேகூட நம்முடைய உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ்



அவர்கள் சில, பல சிறப்பான விளக்கங்களை எல்லாம் இங்கே அளித்தார்கள். ஆகவே, இன்றைக்கு இந்தியா முழுவதும் ஏற்பட்டிருக்கக்கூடிய பிரச்சினை, இந்த விலைவாசிப் பிரச்சினை. ஆனால் அதற்குரிய நடவடிக்கையை இன்றைக்கு இருக்கக்கூடிய அரசு தொடர்ந்து எடுத்துக் கொண்டிருக்கிறதா, இல்லையா, அதைத்தான் நீங்கள் தயவுகூர்ந்து புரிந்துகொள்ள வேண்டும்.

விலைவாசியைக் குறைக்க வேண்டும் என்பதற்காகத் தான் தொடர்ந்து ஒரு கிலோ அரிசியை ஒரு ரூபாய்க்கு வழங்கிக் கொண்டிருக்கிறோம். ஏழை மக்களைப் பொறுத்தவரையில், நடுத்தர மக்களைப் பொறுத்தவரையில், விலைவாசியினுடைய உயர்விலிருந்து அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகத்தான் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில், கோதுமை மாவு, மளிகைப் பொருட்களை மானிய விலையிலே வழங்கிக் கொண்டிருக்கிறோம். குறிப்பிட்டுச் சொல்லவேண்டும் என்று சொன்னால், கடந்த ஏப்ரல் மாதம் முதல் 71,402 மெட்ரிக் டன் துவரம் பருப்பும், 29,597 மெட்ரிக் டன் உளுத்தம் பருப்பும், 15,185 மெட்ரிக் டன் கோதுமை மாவும், 69,124 கிலோ லிட்டர் பாமாயிலும் பொது விநியோகத் திட்டத்தின் மூலமாக மானிய விலையிலே நம்முடைய அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது. மேலும், கூடுதலாக கனடா நாட்டிலிருந்து 27,000 மெட்ரிக் டன் துவரம் பருப்பு இறக்குமதி செய்து மானிய விலையில் வழங்கிக் கொண்டிருக்கிறோம். அதுமட்டுமல்ல, மலிவு விலையில் 50 ரூபாய்க்கு 10 வகையான மளிகைப் பொருட்களை அனைத்து குடும்ப

அட்டைதாரர்களுக்கு தரமான வகையிலே நாம் வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

மின்வெட்டைப் பொறுத்தவரைக்கும் இந்தியாவிலேயே நம்முடைய தமிழ்நாட்டில்தான் மின்வெட்டு அதிகமாக இல்லை என்பது தெளிவாய் இருக்கிறது என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். ஆகவே, விலைவாசி உயர்வால் மக்கள் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதற்காகத்தான் 2005–2006 ஆம் ஆண்டில் 1,600 கோடி ரூபாயாக இருந்த உணவு மானியச் செலவு, தற்போது 4,000 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது என்பதையும் நீங்கள் மனதிலே பதிய வைத்துக்கொள்ள வேண்டும். எனவே, விலைவாசியைக் கட்டுப்படுத்திட அரசு எடுத்துக் கொண்டிருக்கக்கூடிய முனைப்பான நடவடிக்கைகளை நிச்சயமாக யாரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அதேபோல் அரசுப் பணியிலே ஓய்வு பெறக்கூடியவர்களை ஒப்பந்த அடிப்படையிலே காலிப் பணியிடங்களில் நியமிப்பது குறித்து, அரசு ஆணைக்கு உறுப்பினர்களாக இருக்கக்கூடிய நீங்கள் பல கருத்துகளை, ஏன் சிலர் ஆட்சேபணைகளை எல்லாம் கூட இந்த அவையிலே எடுத்து வைத்திருக்கிறீர்கள். படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு குறையும் என்கிற அந்த கருத்தும் இந்த அவையிலே பரவலாக பேசப்பட்டது. நான் அழுத்தம்திருத்தமாகக் குறிப்பிட விரும்புகிறேன். யாரும் இதுகுறித்து அச்சப்பட வேண்டிய அவசியமில்லை. இது அடிப்படையற்றது. இதுகுறித்து நம்முடைய தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் சில நாட்களுக்கு முன்பு தெளிவாக ஓர் அறிக்கையை அவர் வெளியிட்டிருக்கிறார்கள். ஏன், இந்த ஆளுநர் உரையிலேகூட, இதுகுறித்து தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. நான் ஒரேயொரு கேள்வி கேட்கிறேன். கடந்த ஆட்சியில் போடப்பட்ட வேலை நியமன தடைச் சட்டத்தை இரத்து செய்த ஆட்சி, கலைஞருடைய ஆட்சி என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும்.

**3,44,815 பேருக்கு வேலைவாய்ப்பு**

இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு மே 2006 முதல் செப்டம்பர் 2009 வரை ஒரு புள்ளிவிவரத்தை நான் குறிப்பிட விரும்புகிறேன், காவல் துறைமூலமாக 12,471 பேர்களும், அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக 23,971 பேர்களும், வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலமாக 1,15,073 பேர்களும், காலமுறை ஊதியம் வழங்கி நிரந்தரம் செய்யப்பட்ட தொகுப்பூதியப் பணியாளர்களாக 1,84,154 பேர்களும், கருணை அடிப்படையிலே நியமனம் 9,146 பேர்கள், ஆக மொத்தம் 3,44,815 பேர்கள் வேலைவாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால் ஒன்று, தேர்வாணையத்தின் மூலமாகப் பணியிடங்களை நிரப்புகிற நேரத்தில் சில நேரங்களில் ஏற்படக்கூடிய இடைவெளி, அந்த இடைவெளி ஏற்படுகிற காரணத்தால்தான், அதனால் மக்களுக்குச்


உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு–கோவை ★ 2010 ஜூன் 23–27



செய்யக்கூடிய சில திட்டங்கள் மக்களுக்குப் போய்ச் சேராத ஒரு நிலை வந்துவிடுகிறது. ஆக, அந்த நோக்கத்தில்தான் இந்த அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறதே தவிர வேறு அல்ல. எனவே, யாருக்கும் எந்தச் சந்தேகமும், அச்சமும் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. இளைஞர்களுடைய வேலைவாய்ப்புகளைப் பொறுத்தவரையில், எந்த ஓர் இளைஞனுக்கும் இந்த அரசாணையால் எந்தவிதத்திலும், ஓர் இம்மியளவும் பாதிப்பு இருக்காது என்பதை நான் அழுத்தம்திருத்தமாக உறுதியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம். நம்முடைய உறுப்பினர் கோ.க. மணி அவர்கள் அதைக் கொஞ்சம் விவரமாக இங்கே எடுத்து உரையாற்றியிருக்கிறார்கள். அதுவும் இப்போது தருமபுரி மாவட்டத்திலே, பெண்ணாகரம் தொகுதியிலே ஒரு தேர்தல் வரவிருக்கிறது, இடைத்தேர்தல், அதையெல்லாம் மனதிலே வைத்துக் கொண்டு, கொஞ்சம் அழுத்தம் திருத்தமாகவே அவர் பேசியிருக்கிறார். அதுவும் எங்களுக்குத் தெரியும். அதை எப்படிச் சமாளிப்பது என்பதும் எங்களுக்குத் தெரியும்.

ஒகேனக்கல் திட்டம் அப்போது செயல்பாட்டிற்கு வரவில்லை, அதனால் பேசினீர்கள். இப்பொழுது செயல்பாட்டிற்கு வந்திருக்கிறது. வந்திருக்கக்கூடிய

சூழ்நிலையில் பேசியிருக்கிறீர்கள். அதனால்தான் சொன்னேன். வேறல்ல. எனவே, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்பது தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட மக்களுடைய நீண்ட காலப் பிரச்சினை என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும்.

2006 ஆம் ஆண்டு கலைஞர் தலைமையிலே, நம்முடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு அதற்கான முயற்சிகளிலே முழுமையாக ஈடுபட்டு, இந்தத் திட்டத்தை எப்படியாவது, அந்த இரண்டு மாவட்ட மக்களினுடைய வாழ்விற்கு, அவர்களுடைய பிரச்சினையைத் தீர்த்து வைக்கக்கூடிய வகையிலே நிறைவேற்றிட வேண்டுமென்று முடிவு செய்து, ஜப்பான் நாட்டினுடைய நிதியுதவியைப் பெற்று, செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். இது ஒரு கட்டத்திற்கு வந்து சேர்ந்திருக்கிறது. துவக்க நிலைக்கு வந்திருக்கிறது.

அதிலே ஒன்று, பன்னாட்டு நிதி அமைப்புகளிடமிருந்து உதவி பெறக்கூடிய நேரத்தில், அவர்களோடு செய்து கொண்டிருக்கக்கூடிய ஒப்பந்தத்தில் இருக்கக் கூடிய வழிமுறைகள், கால அட்டவணை, நிபந்தனைகள், இவற்றையெல்லாம் நாம் பார்க்க வேண்டியிருக்கிறது. அந்த ஒப்பந்த அடிப்படையிலே திட்ட மேலாண்மை கலந்தாலோசகராக ஜப்பான் நாட்டைச் சார்ந்த Nippon Koei என்கிற நிறுவனம் 3-10-2008 இல் நியமிக்கப்பட்டுள்ளது. இந்தப் பணிகளைப் பொறுத்தவரைக்கும் 5 தொகுப்புகளாகப் பிரித்து இதை நாம் நிறைவேற்றவிருக்கிறோம். அந்த 5 தொகுப்புகளுக்கான பணிகளைப் பொறுத்தவரைக்கும் டெண்டர் கோரி, அந்த 5 டெண்டர்களும் முறையாகப் பெறப்பட்டு, தற்போது அது மதிப்பாய்வு செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. நான் உறுதியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மார்ச் இறுதிக்குள்ளாக அவையெல்லாம் முடிவு செய்யப்பட்டு, அதனுடைய தொடக்கப் பணி, களப்பணி, அது மார்ச் இறுதியிலே துவங்கப்பட இருக்கிறது. அது தொடங்கப்படுவது மட்டுமல்ல, ஏற்கெனவே அதற்கென்று ஒரு கால அட்டவணை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது, 2012 டிசம்பர் மாத இறுதிக்குள்ளாக இந்தப் பணியை நிறைவேற்றிட வேண்டுமென்று வரம்பு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதைக்கூட இங்கே பேசுகிறபோது உறுப்பினர் குறிப்பிட்டுச் சொன்னார்.

இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை 3 ஆண்டுக்காலம் என்று சொல்லி, 2 ஆண்டுக்காலத்திலே விரைவிலே முடித்தீர்களே, இதை ஏன் முடிக்கவில்லை என்று கேட்டார்கள். நான் அவருக்கு, அவர் தேர்தலை மனதிலே வைத்து சொன்ன காரணத்தால், நானும் தேர்தலை மனதிலே வைத்தே சொல்கிறேன். 2012 ஆம் ஆண்டு என்று கால நிர்ணயம் வைத்து அறிவித்திருந்தாலும், அதைவிட முன்கூட்டியே அதை முடிப்பதற்கான முயற்சிகளில் நிச்சயமாக இந்த அரசு



உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு-கோவை ★ 2010 ஜூன் 23-27

ஈடுபடும் என்ற அந்த உறுதியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாநில சுயாட்சி**


அதேபோல், அ.தி.மு.க.வைச் சார்ந்த உறுப்பினர், முன்னாள் அமைச்சர் விஸ்வநாதன் அவர்கள் இங்கே உரையாற்றுகிறபோது, இந்த கவர்னர் கொள்கையை தேவைப்படும்போது தி.மு.க. எடுத்துக்கொள்கிறதென்று விமர்சனம் செய்தார். தயவுசெய்து அவர் ஒன்றை உணர்ந்துகொள்ள வேண்டும். இந்த ஆண்டு கவர்னர் உரையிலே மட்டுமல்ல, 2006 ஆம் ஆண்டு கவர்னர் உரையாக இருந்தாலும், 2007 ஆம் ஆண்டு கவர்னர் உரையாக இருந்தாலும், 2008 ஆம் ஆண்டு கவர்னர்



உரையின்மீது அவர் கலந்துகொண்டு பேசுகிறபோது, இந்த அறிக்கையிலே, தட்பவெப்ப நிலைக்கு மாறக்கூடிய நிலையிலே சில அறிவிப்புகள் எல்லாம் வந்திருக்கிறதென்று குறிப்பிட்டுச் சொன்னார். குறிப்பாக மாநில சுயாட்சிக் உரையாக இருந்தாலும், அந்த உரைகளெல்லாம் இந்த அவையிலே தாக்கல் செய்யப்படுகிறபோது இந்த மாநில சுயாட்சி என்ற அந்த முழக்கம் அதிலே இடம்பெற்றிருக்கிறது. அதுமட்டுமல்ல, நிதிநிலை அறிக்கையாக இருந்தாலும் சரி,

2006–2007, 2007–2008, 2008–2009 ஆம் ஆண்டுகளிலே வெளியிடப்பட்டிருக்கிற நிதிநிலை அறிக்கையிலேகூட, தொடர்ந்து அதை நாம் குறிப்பிட்டிருக்கிறோம். இன்னும்கூட நான் வெளிப்படையாகச் கலைஞர் அவர்கள். அதை யாரும் மறந்துவிட முடியாது.

தோழமையாக இருந்தால் ஒரு கொள்கை, தோழமை இல்லையென்றால் ஒரு கொள்கை என்பதெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம்



சொல்லவேண்டுமென்று சொன்னால், இப்போதல்ல, எப்போதெல்லாம் கலைஞர் முதலமைச்சராக இருக்கிறாரோ, எப்போதெல்லாம் நாங்கள் ஆட்சியிலே இருக்கிறோமோ, அப்போதெல்லாம் அதை மறக்காமல் நாம் குறிப்பிட்டுச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். எனவே, மாநில சுயாட்சியைப் பொறுத்தவரையில் அதற்காக முதல் குரல் கொடுத்துக் கொண்டிருக்கக்கூடிய, ஓங்கிக் குரல் கொடுத்துக் கொண்டிருக்கக்கூடிய தலைவர், நம்முடைய தமிழக முதல்வர், தலைவர் கடைப்பிடிக்கக்கூடிய கொள்கையல்ல என்பதை நான் தெளிவாகத் தெரிவிக்க விரும்புகிறேன். அதற்கு ஒரு எடுத்துக்காட்டைக்கூட, ஒரு சான்றைக்கூட நான் சொல்ல வேண்டும்.

மரியாதைக்குரிய அம்மையார், அன்னை இந்திரா காந்தி அவர்கள் ஒரு முறை சென்னை கடற்கரையில் நடைபெற்ற ஒரு கூட்டத்திலே கலந்துகொண்டு உரையாற்றுகிறபோது ஒன்றைக் குறிப்பிட்டுச் சொன்னார். தோழமையாக இருந்தாலும், எதிரியாக இருந்தாலும் இரண்டு



உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு–கோவை ★ 2010 ஜூன் 23–27

நிலைகளிலும் தி.மு.க. உறுதியாக இருக்கும் என்று அவரே சொல்லியிருக்கிறார். விஸ்வநாதனுடைய சர்ட்டிபிகேட்டா எங்களுக்குத் தேவை! அன்னை இந்திரா காந்தி அவர்களே சொல்லியதற்குப் பிறகு வேறு யாருடைய சர்ட்டிபிகேட்டும் எங்களுக்குத் தேவையில்லை என்பதைத்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல, நம்முடைய உறுப்பினர் விஸ்வநாதன் அவர்கள் இன்னொரு செய்தியைக்கூட இந்த அவையிலே பதிவு செய்தார். சென்னை, அசோக் நகர் பகுதியிலே நடன ஆசிரியையும் அவரது மகனும் கொலை செய்யப்பட்டதாகவும், அந்தக் கொலைக்குற்றவாளியை காவல் துறையால் கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் நீதிமன்றம் அந்த வழக்கில் காவல் துறைக்குக் கடுமையான கண்டனம் தெரிவித்ததாகவும், ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்றும் பேசினார். உண்மை என்னவென்றால், இந்த வழக்கில் நான் விளக்கமாகச் சொல்ல விரும்பவில்லை. நீதிமன்றத்தில் இந்தப் பிரச்சினை இருக்கிறது. இருந்தாலும் அவர் சொன்னதை மறுக்கவேண்டும், அவர் சொன்னதற்கு விளக்கம் தரவேண்டுமென்பதற்காகத்தான் குறிப்பிடுகிறேனே தவிர வேறு அல்ல. இந்த வழக்கில் வேல்முருகன், அவரது நண்பர்கள் பாலா, விஜயராஜ். வேல்முருகனுடைய காதலி தானியா ஆகியோர் கைது செய்யப்பட்டு, வழக்கில் சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய சொத்துகள் எல்லாம் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. எனவே, உறுப்பினர் விஸ்வநாதன் கூறியதைப்போல, குற்றவாளிகள் யாரும் கைது செய்யப்படவில்லை என்பது உண்மைக்குப் புறம்பான செய்தியாகும். அதுமட்டுமல்ல, ஒரு வார இதழ் செய்தி தொடர்பாக தலைமறைவான வரதராஜன் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் முன்ஜாமீன் கேட்டு ஜாமீன் மனுச் செய்து, 12-1-2009-ல் முன்ஜாமீனும் பெற்றிருக்கிறார். எனவே, இந்த வழக்கைப் பொறுத்தவரைக்கும், சென்னை உயர் நீதிமன்றத் தீர்ப்பிலேகூட அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். This Court feels to transfer the investigation to the C.B.I. restricts from passing any such order having faith on the State Government என்றுதான் குறிப்பிட்டிருக்கிறார்களே தவிர, அவர் சொன்னதைப் போல 'கண்டனம்' என்ற வார்த்தை இதிலே இல்லை என்பதை அவர் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக நான் குறிப்பிடுகிறேன்.

**கலைஞர் வீட்டு வசதித் திட்டம்**

அடுத்து, அதேபோல், நம்முடைய உறுப்பினர் சேகர்பாபு அவர்கள் இங்கே பேசுகிறபோது பயிர்க் காப்பீடுத் திட்டத்தின்கீழ் வழங்கப்படக்கூடிய இழப்பீடு, அதுகுறித்து தந்திருக்கக்கூடிய புள்ளிவிவரத்திலே குழப்பம் இருக்கிறதென்று குறிப்பிட்டுச் சொன்னார். புள்ளி விவரத்திலே குழப்பமில்லை. பத்திரிகைச் செய்தியின் அடிப்படையில் அவர் புரிந்து கொண்டதில்


உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு-கோவை ★ 2010 ஜூன் 23-27

தான் ஒரு சிறு குழப்பம் ஏற்பட்டிருக்கிறதே தவிர, வேறல்ல. காரணம், தினமலர் நாளிதழ் செய்தியை வைத்து அரசின் புள்ளி விவரம் தவறு, புள்ளிவிவரங்களைக்கூட ஒழுங்காக அச்சிட முடியாத ஓர் அரசு என்று ஒரு தடித்த வார்த்தையை அவர் பயன்படுத்தினார். உண்மை என்னவென்று கேட்டால், 8–1–2010 அன்று நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் மூலமாக வெளியிடப்பட்ட பத்திரிகை செய்தியில், மத்திய அரசினுடைய பங்கு 306.47 கோடி என்றுதான் சரியாக இருக்கிறது. ஆனால், தினமலர் பத்திரிகையில் குறிப்பிட்டதுபோல, 325 கோடி ரூபாய் அல்ல என்பதை அவருக்கு விளக்க வேண்டும் என்பதற்காக நான் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறேன்.

அதேபோல, சேகர்பாபு, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியைப் பற்றி அவர் குறிப்பிட்டுச் சொல்கிறபோது, நான்காவது கட்டக் கொள்முதலில் அறிவித்ததைவிடக் கூடுதலாக, அதாவது 8 இலட்சத்து 37 ஆயிரத்து 500 பெட்டிகள் கூடுதலாக எப்படி வந்தன என்று ஒரு கேள்வியைக் கேட்டார். நான் அவருக்கு ஒரு விளக்கம் தர விரும்புகிறேன். முதல் மூன்று கட்டங்களில் வாங்கப்பட்ட வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், 62 இலட்சத்து 80 ஆயிரம். நான்காவது கட்டமாக, 41 இலட்சத்து 62 ஆயிரத்து 500 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்க முடிவு செய்யப்பட்டது. அதுதான் 2009 ஆம் ஆண்டு ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், நான்காவது கட்டத்தில் மொத்தம் வாங்கப்பட்ட எண்ணிக்கை 50 இலட்சம் ஆகும். அதாவது, கூடுதலாக 8 இலட்சத்து 37 ஆயிரத்து 500 பெட்டிகளை வாங்கியுள்ளோம். எனவே இந்தக் கூடுதல் தொலைக்காட்சிப் பெட்டிகள், சேகர்பாபு சொன்னது போல, இனப்பெருக்கத்தால் அல்ல. கூடுதல் நிதியொதுக்கீடு செய்து, அதிக எண்ணிக்கையிலே வாங்கப் பட்டிருக்கிறதே தவிர, வேறல்ல. இன்னும்கூட ஒன்றை விளக்கிட வேண்டுமென்று சொன்னால், இந்த வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளைக் கொள்முதல் செய்வதாக இருந்தாலும் சரி, அதை விநியோகிக்கக்கூடிய அந்த நிலையாக இருந்தாலும்சரி, இதற்கென்று ஒரு குழுவை, சட்டமன்றக் கட்சிகள் தலைவர்கள் அடங்கிய ஒரு குழு நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் தலைமையிலே அமைத்திருக்கிறது. அந்தக் குழுவிலே கூட அவர்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் யாரும் இடம் பெறவில்லை. இடம்பெற வேண்டுமென்று அழைத்தோம். அவர்கள் மறுத்து விட்டார்கள். ஏனென்றால், இந்தக் கொள்கையை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்தத் திட்டத்தையே அவர்கள் வெறுக்கக்கூடியவர்கள், ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால், அக்கறையோடு இதிலே கேள்வி கேட்டதற்காக, உள்ளபடியே நான் சேகர்பாபு அவர்களுக்கு இந்த நேரத்திலே என்னுடைய நன்றியைக் கூட நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள், வேலூர் பகுதியிலே நிறைவேற்றப் பட வேண்டிய கூட்டுக் குடிநீர்த்



உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு-கோவை ★ 2010 ஜூன் 23-27

திட்டத்தைப்பற்றி இங்கே பேசினார். இந்தக் கூட்டத் தொடரில் மட்டுமல்ல, தொடர்ந்து பல கூட்டத் தொடரிலே அதை அவர் நினைவுபடுத்திப் பேசிக் கொண்டிருக்கிறார். நான்கூட கடந்த ஆண்டு இந்த அவையிலே ஓர் அறிவிப்பைக்கூட வெளியிட்டேன். வேலூர் மாவட்டத்தில் இருக்கக்கூடிய வேலூர் மாநகராட்சி. திருப்பத்தூர், ஜோலார்பேட்டை, வாணியம்பாடி, ஆம்பூர், குடியாத்தம், பேரணாம்பட்டு ஆகிய 6 நகராட்சிகள்; நாட்றாம்பள்ளி, உதயேந்திரம், ஆலங்காயம், ஒடுகத்தூர், பள்ளிகொண்டா ஆகிய 5 பேரூராட்சிகள் மற்றும் 64 வழியோர ஊரகக் குடியிருப்புக்கள். இந்தப் பகுதிகளுக்கெல்லாம் காவிரி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு, 1,400 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்டது. ஆனால் தற்போது, அதில் அரக்கோணம் நகராட்சியையும் சேர்த்து, 1,800 கோடி ரூபாய் திருத்திய மதிப்பீட்டின் அடிப்படையிலே இப்போது திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இதற்குரிய நிதியாதாரத்தைப் பெறுவதற்கான வகையிலே இப்போது உறுதி செய்து கொண்டிருக்கிறோம். எனவே, அதுவும் விரைவிலே உறுதி செய்யப்பட்டு, நிச்சயமாக, உறுதியாக இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல உறுப்பினர் கோ.க. மணி அவர்கள் பேசுகிறபோது, ஆசிரியர்களுக்கான ஊதிய முரண்பாடு குறித்து இங்கே பேசியிருக்கிறார்கள். உண்மைதான். அந்த ஊதிய திருத்தம் குறித்து குறைபாடுகள் எதுவும் இருப்பின், அவற்றைப் பரிசீலிப்பதற்காக ஒரு நபர் குழு ராஜீவ் ரஞ்சன் ஐ.ஏ.எஸ். அவர்கள் தலைமையில் நியமிக்கப்பட்டிருக்கிறது. 31–3–2010க்குள் அந்தக் குழுவினுடைய அறிக்கை பெறப்பட விருக்கிறது. எனவே, அந்த அறிக்கை வந்தபிறகு அதுகுறித்து பரிசீலித்து, உரிய, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, நம்முடைய முன்னாள் முதலமைச்சர் எதிர்க்கட்சித் தலைவர் அம்மையார் அவர்கள் இங்கே பேசுகிறபோது மிகுந்த அக்கறையோடு ஒரு கேள்வியைக் கேட்டார்கள். கலைஞர் வீட்டு வசதித் திட்டத்தைப்பற்றி அவர் பேசி, இதற்கு நிதி ஆதாரங்களை எங்கிருந்துப் பெறவிருக்கிறீர்கள் என்ற ஒரு கேள்வியைக் கேட்டார்கள், அக்கறையோடு கேட்டார்கள், அதற்கு நன்றி. ஆறு ஆண்டுகளில், 12,600 கோடி ரூபாய் ஒதுக்குவது ஒன்றும் முடியாத செயல் அல்ல. நிச்சயமாக அந்தந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கீடு செய்து, அந்தத் திட்டத்தை நிச்சயமாக நிறைவேற்றவிருக்கிறோம். இந்த அரசைப் பொறுத்தவரையில், ‘சொன்னதைத்தான் செய்வோம்’, ‘செய்வதைத்தான் சொல்வோம்’, இன்னும் சொல்லப்போனால், சொல்லாததையும் இன்றைக்கு நம்முடைய தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, யாரும் எந்தக் கவலையும், பட வேண்டிய அவசியம் இல்லை என்பதையும்

நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில், நம்முடைய தமிழக போக்குவரத்துத் துறை அமைச்சர் நேரு அவர்கள் நம்முடைய முதல்வரிடத்திலும், என்னிடத்திலும் தொடர்ந்து ஒரு கோரிக்கையை எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவருடைய மாவட்டத்திலே கம்பரசம்பேட்டை தடுப்பணைத் திட்டம் என்ற ஒரு திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று அவர் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறார். எனவே, முதல்வர் அவர்களுடைய அனுமதியோடு நான் இந்த அறிவிப்பை வெளியிட விரும்புகிறேன்.

காவிரி ஆற்றினுடைய படுகையிலிருந்து திருச்சி குடிநீர்த் திட்டத்திற்கும், இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கும் நீர் வழங்கக்கூடிய கிணறுகளுக்கு நிலத்தடி நீர் செறிவூட்டப்பட்டு, கோடைக் காலங்களிலும் தங்கு தடையின்றி நீர் கிடைத்திட வழிவகை செய்யும் நோக்கத்துடன் திருச்சி மாவட்டம், திருவரங்கம் வட்டம், கம்பரசம்பேட்டை கிராமம் அருகே, காவிரி ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்க ஆய்வுப் பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அந்த ஆய்வறிக்கை பெறப்பட்டதும் நிச்சயமாக போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

'என் கடன் பணி செய்து இருப்பதே' என்கிற இலட்சியத்தோடு நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அல்லும், பகலும் அயராது தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.


அவருடைய அயராத உழைப்பிற்கு தமிழகம் அதனுடைய அங்கீகாரத்தைத் தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்க, மறைக்க முடியாது.

ஆளுநர் உரையில் அறிவித்திருக்கக் கூடிய நலத் திட்டங்களையும், 'சொன்னதைச் செய்வோம்', 'செய்வதைச் சொல்வோம்' என்ற அடிப்படையிலே நிறைவேற்ற இந்த அரசு தொடர்ந்து உறுதி எடுத்துக் கொண்டு, தன்னுடைய கடமையை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.

எனவே, மக்கள் நலத் திட்டங்களை சிலர் எதிர்க்கிற காரணத்தால், நிச்சயமாக நாங்கள் உங்களை என்றைக்கும் எதிரிகளாகக் கருதமாட்டோம். ஆனால், நீங்கள் மக்களுக்கு எதிரானவர்களாக ஆகிவிடக் கூடாது என்கிற அச்சம்தான் எங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அதை மாத்திரம் நினைவுபடுத்தி, நன்றி கூறி அமைகிறேன்.

★ ★ ★

# ‘பிறப்பொக்கும்’ எனும் உயரிய நோக்கம் நாட்டிலே பரவச் செய்திட வேண்டும்! சமுதாயத்திலே வேரூன்றச் செய்ய வேண்டும்!



**‘சென்னை தீவுத்திடலில், இந்திய–சுற்றுலா தொழில் பொருட்காட்சி அரங்கில் சென்னை சங்கமம்’ கலைப் பண்பாட்டு நிகழ்ச்சிகளைத் தொடங்கி வைத்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை (10.1.2010)**

**தீ**வுத்திடல் நிரம்பி வழிகின்ற அளவிற்கு இந்த நிகழ்ச்சி நடைபெற்று – இதிலே எங்களுடைய கருத்துகளை எடுத்துச் சொல்லுகின்ற கட்டத்திலே நிகழ்ச்சியினுடைய தொடர்ச்சி அமைந்திருக்கின்றது. சங்கமம் கலை விழா தமிழகத்தில் குறிப்பாக தமிழகத்தின் தலைநகராம் சென்னை மாநகரத்தில் மூன்று நான்கு ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கப்பட்டு மாநகரின் வீதிகளில் – தெருக்களில் – சந்துபொந்துகளில் எங்கெங்கே மக்கள் இருக்கிறார்களோ அங்கெல்லாம் நம்முடைய நாடு, நகரம் இவைகளையன்னியில், இதற்கு மத்தியில் நாட்டுப்புறம் என்று ஒன்று இருக்கிறதே, அதற்கென்று கலைகள், இசைத் துறையிலே பாடல்கள், என்றெல்லாம் இருக்கின்றனவே அவைகளை அந்த மக்களோடு பரிமாறிக் கொள்ள வேண்டும், நாம் பெற்ற இன்பம் அந்த மக்களும் பெறவேண்டுமென்ற அந்த உயர்ந்த உணர்வோடு இந்தச் சங்கமம் தொடங்கப் பட்டு, தமிழ் மையத்தின் சார்பாக பிரமாண்டமான வெற்றியைப் பெற்று வருகின்றது.



உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு–கோவை ★ 2010 ஜூன் 23–27

பாரதியார் பாடலிலே குறிப்பிட்ட பத்திரகாளி

இதைத் தொடங்கியவர்களும், தொடங்கி வைத்த நானும் எதிர்பாராத அளவிற்கு இந்தச் சங்கமம் நிகழ்ச்சி வெற்றி முரசு கொட்டி வருகின்றது. அதிலும் இன்றைக்கு நடைபெற்ற இந்தக் கலை நிகழ்ச்சி நான் வியந்து போற்றுகின்ற அளவிற்கு – பாராட்டுகின்ற அளவிற்கு அவ்வளவு அருமையாக அரிய பல கருத்துகளை எடுத்துக் கூறுகின்ற நிலையில் இங்கே நடத்திக் காட்டப் பட்டிருக்கின்றது.

எனக்கு சில சந்தேகங்கள் வந்தன – ஆனால் சந்தேகம் ஏற்பட்ட அடுத்த விநாடி அந்தச் சந்தேகத்தை நீக்குகின்ற காட்சிகள் இந்த அரங்கத்திலே வந்தன. அது உள்ளபடியே நடன நிகழ்ச்சி சோபனா அவர்களால் நடத்திக் காட்டப்பட்டபோது, அதுவரையில் வரப்போகிறாள், வரப்போகிறாள் என்று இரண்டு கட்டியக்காரர்களைப் போல மன்னர்களே எடுத்துரைத்து பிறகு அவர் வந்த பிறகு – புதுப் பொலிவோடு எப்படி தமிழகம் வீர முழக்கமிடும், வெற்றி முழக்கமிடும் என்பதை எடுத்துக்காட்டிய அந்த நிலை மிக மிகப் பாராட்டத்தக்க ஒன்றாகும்.

ஆரம்பத்திலே எனக்குக் கூட சற்று அய்யப்பாடு. நான் அய்யப்பாடு கொள்ளத் தேவையில்லை. காரணம் எனக்கு நேராக இப்படி அய்யப்பாடு தோன்ற எதுவும் நடக்காது இந்தக் காட்சியிலே என்பதை நான் நம்பிக்கையோடு தெரிந்திருந்த போதிலும் ஒரு சிறு அய்யப்பாடு – காளிகாதேவி தோன்றினாள், பல கைகளோடு – பயங்கர உருவத்தோடு – ஒருவேளை என்னையும், வீரமணியையும் பார்த்தவுடன் காளிகாதேவி பின்னால் போய்விட்டாள் போலும், பிறகு இந்த அரங்கத்திலே காளிகாதேவியை காணவே இல்லை. அந்தக் காளிகாதேவி கூட பாரதியார் சொன்ன புரட்சிக் காளி – பாரதியார் பாடலிலே குறிப்பிட்ட அந்தப் பத்திரக்காளி – அந்தப் பராசக்தி. அவளைத் தான் இங்கே உருவகப்படுத்தி அவள் காலத்திலே இருந்த இருண்ட நிலைகள் எல்லாம் மாற வேண்டும் என்பதற்காக – புத்தொளி இந்தச் சமுதாயத்திலே பரவ வேண்டும் என்பதற்காக அமைக்கப்பட்ட காட்சிகளை நான் வெகுவாக ரசித்தேன்.



சொல்லப் போனால் சங்கமம் என்பதனுடைய நோக்கம் "பிறப்பொக்கும்" என்பதை நாட்டிலே பரவச் செய்திடல் வேண்டும், சமுதாயத்தில் வேரூன்றச் செய்ய வேண்டும் என்பது தான். "பிறப்பொக்கும்" என்கிற இந்த வார்த்தைக் கோவை – "பிறப்பு ஒக்கும்" என்ற இந்த இரண்டு சொற்களைக் கொண்ட இந்த வார்த்தை– "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற வாசகக் கோவையிலேயிருந்து எடுக்கப் பட்டது.

**நாம் ஒற்றுமையாக வாழவேண்டும்**

நாம் நடத்தவிருக்கின்ற – நாம் என்று சொல்லுகிறேன், நான் என்று சொல்லவில்லை – நாம் விரைவில் நடத்தவிருக்கின்ற செம்மொழி மாநாட்டிற்காக – முதன் முதலாக குறியிடப்பட்ட அந்த வாசகம்தான் "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்பதாகும். கடந்த இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு சென்னையிலே நம்முடைய அருமைத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் முன்னின்று நடத்திய அந்த மாநாட்டிற்கு "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பது இலட்சிய வாசகமாக அமைந்தது. இப்போது அவ்வளவு சொன்னால் போதாது, இன்னும் சொல்ல வேண்டுமென்ற நிலையிலேதான் "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற அந்த வாசகத்தை நம்முடைய சின்னத்திலே இன்றைக்குப் பொறித்திருக் கிறோம். இவ்வளவு கூடச் சொல்ல வேண்டியதில்லை, "பிறப்பொக்கும்" என்று சொன்னால் போதாதா என்று நம்முடைய சங்கமம் குழுவினர் – "பிறப்பொக்கும்" என்கின்ற அந்த வார்த்தையை மாத்திரம் வைத்து – அந்த வார்த்தைகளின்

> "நாம் பிரிந்து கிடக்கக் கூடாது,
> நாம் ஒன்று பட்டிருக்க வேண்டும்,
> நாம் ஒற்றுமையாக வாழ வேண்டும்,
> நாம் நம்முடைய தமிழ் மொழியால்
> ஒன்று சேர வேண்டும்,
> நாம் நம்முடைய தமிழைக் காப்பாற்ற
> வேண்டும், நம்முடைய மொழி
> உணர்வைத் தொடர்ந்து இங்கே
> நிலைநாட்டிக் கொண்டிருக்க
> வேண்டும்"

வடிவமாக இந்தக் காட்சியமைப்பை எல்லாம் இங்கே காட்டியிருக்கிறார்கள்.

நாம் பிரிந்து கிடக்கக் கூடாது, நாம் ஒன்றுபட்டிருக்க வேண்டும், நாம் ஒற்றுமையாக வாழ வேண்டும், நாம் நம்முடைய தமிழ் மொழியால் ஒன்று சேர வேண்டும், நாம் நம்முடைய தமிழைக் காப்பாற்ற வேண்டும், நம்முடைய மொழி உணர்வைத் தொடர்ந்து இங்கே நிலைநாட்டிக் கொண்டிருக்க வேண்டும் என்ற இத்தனை வாசகங்களும் பொருந்தியதாக சங்கமம் கலை விழாவிலே "பிறப்பொக்கும்" என்ற அந்தச் சுருக்கமான சொற்றொடரை அமைத்திருக்கிறார்கள். அதற்கேற்ப இங்கே நிகழ்ச்சிகள் நடந்தன. "பிறப்பொக்கும்" என்பது பிராமண, ஷத்திரிய, வைசிய, சூத்திர என்றெல்லாம் நால்வகை வர்ணங்கள் பிரிக்கப்பட்டு பறையர் என்றும், பள்ளர் என்றும், புலையர் என்றும், நாவிதர் என்றும், அருந்ததியர் என்றும், முடிதிருத்துவோர் என்றும் உள்ள தொழிலாளர் வர்க்கத்தை அடிமைப்படுத்தி அவர்களுக்கெல்லாம் இருந்த உயர்வை –

> **“தமிழ் உள்ள அளவும், தமிழன் உள்ள அளவும், தமிழ் நெறி உள்ள அளவும், தமிழர்களுக்கு வீழ்ச்சியில்லை, வீழ்ச்சியில்லை”**

சம நிலையை அகற்றி படு பாதாளத்திலே தள்ளிய பயங்கர சூழ்ச்சியிலேயிருந்து தமிழர்களை மீட்க – தமிழ்ச் சமுதாயத்தை மீட்க எழுந்தது தான் யுக புரட்சி போல தமிழகத்திலே பெரியார் நடத்திய புரட்சி, சாதி சமயத்தை ஒழித்த புரட்சி – அந்தப் புரட்சியை அடிப் படையாக வைத்துத்தான் இந்த நடன நிகழ்ச்சி, பாடல் நிகழ்ச்சி, கற்பனை நிகழ்ச்சி, நாட்டுப்புற நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டு – என்னுடைய அருமை மகள் கவிஞர் கனிமொழி எம்.பி., அவர்களால் – நம்முடைய வர்ணனைப் புலி நண்பர் கஸ்பர் அவர்களால் – தம்பி சுரேஷ்ராஜனுடைய முயற்சியால் – மற்றுமுள்ள நடிகர்கள், கலைஞர்கள் அத்தனை பேருடைய கூட்டு முயற்சியால் இந்த அற்புதமான நிகழ்ச்சியை நாமெல்லாம் காணுகின்ற வாய்ப்பை நமக்கு வழங்கியிருக்கிறார்கள். இந்த வாய்ப்பு சென்னை மாநகரத்துக்கு மாத்திரமல்ல, பல நகரங்களுக்கும், பல ஊர்களுக்கும் வழங்கப்படவிருக்கின்றது என்பதையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நான் அவர்களுடைய இந்தச் செயலை பாராட்டுகிறேன், புகழ்கிறேன்.


**தமிழர்களுக்கு வீழ்ச்சியில்லை**

தமிழ் உள்ள அளவும், தமிழன் உள்ள அளவும், தமிழ் நெறி உள்ள அளவும், தமிழர்களுக்கு வீழ்ச்சியில்லை, வீழ்ச்சியில்லை – வீழ்ச்சி வந்தது போல இங்கே ஒரு காட்சி அமைக்கப்பட்டு – பெண்கள் எல்லாம் கண்ணீர் விடுகின்ற காட்சியைக் கண்டீர்கள். புறநானூற்றிலே இப்படி பல தாய்மார்கள் புலம்பி அழுத காட்சியை இங்கே காட்டியிருக்கிறார்கள். இனி புறநானூறு இருந்தாலும், அதிலே நாம் பெறுகின்ற வீரத்தை, நம்முடைய தோழர்கள், நம்முடைய இளைஞர்கள் பெறுவதற்குத்தான் புறநானூறு படிக்க வேண்டுமேயல்லாமல், புறநானூறிலே வருகின்ற களச் சாவுகளை நாம் இறைஞ்சி பெற்றிடுவோம் என்ற ஆசைக்காக அல்ல என்பதை எடுத்துச் சொல்லி, இந்த அருமையான நிகழ்ச்சியிலே தங்களை ஈடுபடுத்திக் கொண்ட அனைவருக்கும், கனிமொழிக்கும், நம்முடைய நண்பர் கஸ்பருக்கும், இறையன்புவிற்கும், சுற்றுலா வளர்ச்சித் துறையமைச்சர் சுரேஷ் ராஜனுக்கும் இதனை ஆதரித்து தொடர்ந்து தமிழகத்திலே இந்த நாட்டுப்புற கலையை வளர்க்கவிருக்கின்ற அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகளை, நன்றியை, பாராட்டுகளை தெரிவித்து இந்த அளவில் விடைபெறுகிறேன்.

* * *



உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு-கோவை ★ 2010 ஜூன் 23-27



# தமிழ்ச் சமுதாய மக்கள் வாழ்வில் மகிழ்ச்சியும் இன்பமும் பொங்கிப் பெருகிட வாழ்த்துகிறேன்!

மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்களின்
தமிழ்ப் புத்தாண்டு – பொங்கல் திருநாள்
வாழ்த்துச் செய்தி!

**தை**த்திங்கள் முதல் நாள் – தமிழ்ப் புத்தாண்டு – பொங்கல் திருநாள்! தமிழர் வாழும் இடமெல்லாம் மிகுந்த மகிழ்ச்சிப் பெருக்கோடு கொண்டாடப்படும் பொன்னாள் இந்நாள்!

தமிழகம் முழுவதும் சீரான மழை – செழிப்பான விளைச்சல் என உழவர் பெருமக்கள் உளம் குளிர வேளாண்மையின் வளம் பெருகியுள்ள வேளையில், இவ்வாண்டின் பொங்கல் விழாவையும், தமிழ்ப்புத்தாண்டுத் திருநாளையும் கொண்டாடும் எனதருமைத் தமிழ்ச்சமுதாய மக்கள் வாழ்வில் வளமும் நலமும் செழிக்கட்டும்! மகிழ்ச்சியும் இன்பமும் பொங்கிப் பெருகட்டும்! – என என் உளமார வாழ்த்துகிறேன்.

“இந்தியப் பண்பாட்டில் 75 விழுக்காடு, திராவிடப் பண்பாடு” என சுநீதிகுமார் சட்டர்ஜி என்னும் ஆய்வியல் அறிஞர் குறிப்பிடுகின்றார். அத்தகைய பெருமை வாய்ந்த திராவிடப் பண்பாட்டின் இன்றைய வடிவமாக விளங்கும் தமிழ்ச்சமுதாயம் தழைத்திட எந்த வகையிலெல்லாம் உதவிட முடியும், நன்மைகளை நிறைவேற்றிட முடியும், சலுகைகளை வழங்கிட முடியும் என ஒவ்வொரு நொடி நேரத்தையும் எண்ணி எண்ணிச் செலவிட்டு, உழைத்து வருகின்றது இந்த அரசு.

வேளாண்மை செழித்து விவசாயிகள் பயன்பெற பம்ப் செட்டுகளுக்கு இலவச மின்சாரம்! 7,000 கோடி ரூபாய்




கூட்டுறவுக் கடன் தள்ளுபடி! பயிர்க் காப்பீட்டுத் திட்டம்! நெசவாளர்கள் உட்பட பல்வகைத் தொழிலாளர்கள், பாட்டாளிகள், உழைப்பாளிகள் நலன்களைக் காத்திட விவசாயத் தொழிலாளர்கள் நல வாரியம் முதலான 30 அமைப்புசாராத் தொழிலாளர் நல வாரியங்கள்! தொழில்கள் வளர, வேலைவாய்ப்பு பெருக புதிய தொழிற்சாலைகள்! ஏழை எளியோர் மகிழ இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள்! ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு வழங்கும் திட்டம்! மகளிர் சுயஉதவிக் குழுக்கள், மூவலூர் மூதாட்டியார் நினைவு திருமணத் திட்டம், கர்ப்பிணிப் பெண்களுக்கு 6,000 ரூபாய் நிதியுதவி முதலான மகளிர் மேம்பாட்டுத் திட்டங்கள், நல வாழ்வு நல்கிட தனியார் மருத்துவமனைகளுடன் இணைந்து, ''கலைஞர் காப்பீட்டுத் திட்டம்'' உட்பட பல்வேறு மருத்துவக் காப்பீட்டுத் திட்டங்கள்! அவசர மருத்துவ ஊர்தி–108 – முதலான மக்களால் பாராட்டப்படும் திட்டங்கள் பலவற்றை இந்த அரசு இதுவரை நடைமுறைப் படுத்தியுள்ளதுடன், வரும் ஆண்டுகளில், 21 இலட்சம் கூரை வீடுகளைக் கான்கிரீட் வீடுகளாக மாற்றிட, ''கலைஞர் வீட்டுவசதித் திட்டம்'' எனும் மிகப் பெரிய திட்டத்தையும் புதிதாக நடைமுறைப் படுத்தவுள்ளது.

தமிழகத்தில் வாழும் ஏழை எளியோர் நலம்பெற வேண்டும் எனும் விழைவோடு – தமிழகம் இந்தியாவில் அனைத்து வகையிலும் முன்னோடி மாநிலமாகப் புகழ் குவிக்க வேண்டும் என்னும் உணர்வோடு இத்தகைய திட்டங்களை நிறைவேற்றிவரும் தமிழக அரசின் சார்பில் தமிழக மக்கள் அனைவர்க்கும் எனது உளமார்ந்த தமிழ்ப் புத்தாண்டு – பொங்கல் திருநாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

★ ★ ★

# எனது வேண்டுகோளை ஏற்று பொங்கல் திருநாள், தமிழ்ப்புத்தாண்டு தினத்தை சிறப்பாகக் கொண்டாடி மகிழ்ந்த தமிழ் மக்களுக்கு நன்றி – மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன்!

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள்



**15.1.2010 அன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற திருவள்ளுவர் திருநாள் மற்றும் தமிழக அரசின் விருதுகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை**

**வ**ள்ளுவர் கோட்டத்தில் – திருவள்ளுவர் திருநாளில் – வள்ளுவர் பெயராலும், அவர் வழி நடந்த பல தலைவர்களுடைய பெயராலும் – அறிஞர்கள் பெயராலும் அத்தகையோருக்கு விருதுகள் வழங்குகின்ற இந்தச் சிறப்பு மிகுந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர்களுக்கெல்லாம் விருதுகளை வழங்குவதில் நான் பெருமையடைகின்றேன்.

வள்ளுவர் கோட்டத்திலே நடை பெறுகின்ற சாலப் பொருத்தமுடைய விழா, இந்த விழா. வள்ளுவர் கோட்டத்தை உருவாக்கி, இங்கே வள்ளுவர் சிலையை அமைத்தது மார்த்திரமில்லாமல், குமரி முனையிலும் விண்ணையெட்டுகின்ற அளவிற்கு அமைத்துள்ள வள்ளுவருடைய சிலை – அதையொட்டி தமிழகமெங்கும் ஆங்காங்கு தமிழ்ச் சான்றோர்களால் நிறுவப்பட்டுள்ள சிலை – தமிழகத்திலே மாத்திரமல்லாமல் நம்மோடு ஒட்டியிருக்கின்ற – ஒட்டியிருக்க வேண்டிய கருநாடகத் தலைநகரிலும் – 18 ஆண்டுகளுக்கு முன்பே திறந்திருக்க வேண்டிய வள்ளுவர் சிலையைத் திறந்து வைத்ததின் தொடர்ச்சியாக இன்றைக்கு இந்த விழா நடைபெறுவதாக நான் உணருகின்றேன்.

இந்த விழாவிலே விருதுகளைப் பெறுகின்ற பெருமக்களுக்கு என்னுடைய பாராட்டுகளை, நன்றியைத் தெரிவித்துக்




கொள்கிறேன். என்னுடைய கரங்களால் விருதுகள் வழங்குவதை பெருமையாகக் கருதுவதாக இங்கே சில நண்பர்கள் எடுத்துச் சொன்னார்கள். நான் அதைத் திருப்பிச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய கரங்களால் வழங்கப்படுகின்ற விருதுகளைப் பெற வந்தார்களே என்பதற்காக, அந்த வாய்ப்பை எனக்கு வழங்கினார்களே என்பதற்காக, நான் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மண்டபத்தில் இதுபோன்ற நிகழ்ச்சிகள் பல நடைபெற்றிருக்கின்றன. தமிழ் குலுங்குகின்ற, தமிழ் மொழியின் சிறப்பு செழிக்கின்ற அளவிற்கு எத்தனையோ நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக் கின்றன. ஆனால் இன்றைக்கு நடைபெறுகின்ற இந்த நிகழ்ச்சி வள்ளுவப்பெருந்தகையை முன் வைத்து, அவருடைய பெயரால் நடைபெறுகின்ற நிகழ்ச்சியாகும். அதுமாத்திரமல்ல, பல ஆண்டுகளுக்கு முன்பே நம்முடைய தமிழ்ச் சான்றோர்கள் பலரும் மறைமலையடி களாருடைய தலைமையிலே கூடி, திருவள்ளுவருடைய ஆண்டு எது என்பதைக் கணித்து, அந்த ஆண்டின் முதல் நாள் தான் தமிழர்களுடைய ஆண்டுக்கு முதல் நாள் என்று நிர்ணயித்து, அதைக் கொண்டாடுவதற்கு தயங்கித் தயங்கி, சட்டம் அனுமதிக்குமா என்றெல்லாம் கேட்டுக் கேட்டு மயங்கி நின்ற நிலையை மாற்றி இன்றைக்கு நிச்சயமாக சட்டம் அனுமதிக்கிறதோ இல்லையோ என்ற நிலை மாறி, அதற்காக சட்டமே இயற்றப்பட்டு விட்டது என்று சட்டத்தை நிறைவேற்றி, கடந்த ஆண்டும் அதற்கு முதல் ஆண்டும் நம்முடைய பொங்கல் திருநாள் – தை முதல் நாள் – அது தான் தமிழர் திருநாள் – தமிழ்ப் புத்தாண்டு நாள் என்பதை உலகிற்கு உணர்த்தி, உவகை கொண்ட நிலைமை தமிழர்களுக்கு ஏற்பட்டு – நாம் இன்றைய தினம் அளவிலா மகிழ்ச்சியிலே இங்கே குழுமியிருக்கின்றோம்.

நான் கேட்டுக் கொண்டேன் – தமிழர் திருநாளில் பொங்கல் புது நாளில் ஒவ்வொரு இல்லத்திலும் மகிழ்ச்சி பொங்கவேண்டும் – ஒவ்வொரு வீட்டிலும் குழந்தை குட்டிகளோடு நம்முடைய தமிழ்ப்


உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு-கோவை ★ 2010 ஜூன் 23-27




பெரியோர்கள், தமிழ்ச் சான்றோர்கள், தமிழ்த் தாய்மார்கள் பொங்கல் திருநாளைக் கொண்டாட வேண்டு மென்று! என்னுடைய வேண்டுகோளுக் கிணங்க கூடுமான வரையில் தமிழ்நாட்டிலே உள்ள பெரியோர்களும், தாய்மார்களும், புலவர் பெருமக்களும், அறிஞர் பெருமக்களும், சங்கம் நிறுவியிருப்போரும், தமிழ்க் கழகங்கள் பல கண்டோரும், அத்தனை பேரும் இன்றைக்கு இந்த விழாவை பொங்கல் திருநாளை அதற்கு அடுத்த நாள் நடைபெறுகின்ற திருவள்ளுவர் திருநாளை, தமிழ்ப் புத்தாண்டு நாளை சிறப்புறக் கொண்டாடி மகிழ்ந்துள்ள காட்சியை தொலைக்காட்சிகளில் நான் கண்டுகளித்து உண்மையிலேயே நாம் நம்முடைய வேண்டுகோளை நிறைவேற்றிய தமிழ் மக்களுக்கு என்னுடைய சார்பாக – தமிழக அரசின் சார்பாக – நான் பிறந்து வளர்ந்த இந்த இயக்கத்தின் சார்பாக என்னை ஆளாக்கிய அறிஞர் அண்ணாவின் சார்பாக – அண்ணாவை உருவாக்கிய தந்தை பெரியாரின் சார்பாக – திராவிட இயக்கத்தின் சார்பாக நன்றியறிதலை, மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**கல்வெட்டில் தமிழர் வரலாறு**

இன்றைக்கு விருது பெற்றவர்களில் முக்கியமானவர்கள் குறிப்பாக முனைவர் ஐராவதம் மகாதேவன் அவர்களைப் பற்றி நம்முடைய பேராசிரியர் அவர்கள் இங்கே எடுத்துரைத்தார்கள். ஐராவதம் அவர்களின் பெயரை நீங்கள் எல்லாம் பல முறை இலக்கிய வட்டாரத்தில் – தமிழ் மொழி பேசுகின்ற வட்டாரத்தில் – ஆய்வாளர்கள் வட்டாரத்தில் கேட்டுக்கேட்டு பழகியிருக்கிறீர்கள். அந்த ஐராவதம் மகாதேவன் தமிழகத்திலே கல்வெட்டுக்களிலே இன்றைக்குப் பொதிந்துள்ள தமிழ்நாட்டுச் சரித்திரங்களை, தமிழ்நாட்டு முன்னோர்களுடைய வரலாறுகளை – இவைகளையெல்லாம் வடித்தெடுத்து அவற்றைத் தமிழ் மக்களுக்கு புலப்படுத்திக் கொண்டிருக்கின்ற ஒரு புலவர் ஐராவதம் மகாதேவன்

அவர்களாகும். அவர்களுக்கு திருவள்ளுவர் விருது இன்றைக்கு வழங்கப்படுவது மிக மிகப் பொருத்தமுடையதாகும்.

**மனித உரிமை – எழுத்துரிமை**

தந்தை பெரியார் விருது, என்னுடைய நண்பர் நக்கீரன் கோபால் இன்றைக்குப் பெற்றிருக்கிறார். நக்கீரன் என்றாலே கண்டிப்பானவர் – சிவனுக்கே பயப்படாதவர் – பரமசிவனையே எதிர்த்தவர் – அவரோடு எதிர்த்து வாதாடியவர். எனவே என்ன தான் நான் முதலமைச்சராக இருந்தாலும் இங்கே அவர்களைப் பாராட்டினாலும், என்னை எதிர்த்தும் கொடி தூக்கக் கூடியவர் நக்கீரன் கோபால். அவர் தூக்குகின்ற கொடி நியாயத்திற்காக தூக்கப்படுகின்ற கொடி என்றால், அந்தக் கொடிக்கு தலை தாழக் கூடியவன் நான் என்பதை அவர் அறிவார். அப்படிப்பட்ட நக்கீரன் கோபாலும், நக்கீரன் காமராஜனும் படாத பாடுகள் பட்டிருக்கிறார்கள். நம்முடைய காலத்திலேயே எழுத்துரிமைக்காகப் போராடி, மனித உரிமைக்காகப் போராடி நக்கீரன் கோபாலை அந்தப் போர்க் களத்திலே சிக்க வைத்து அவருக்கு கொடுக்க முடியாத துன்பங்களை யெல்லாம் கொடுத்து கொடுமைகளை யெல்லாம் இழைத்து – அந்தக் கொடுமைகளையெல்லாம் தாங்கிக் கொண்டு நம்முடைய தமிழ்ச் சமுதாயத்திற்காக எழுத்துரிமை போராட்டத்திலே எதிர் நின்று வென்று இன்று நம்மிடையே – நம்முடைய வாழ்த்துகளுக்கும் புகழாரங்களுக்கும் உரியவராக வீற்றிருப்பவர் நக்கீரன் கோபால்.

**ஒதுக்கப்பட்ட மக்களின் குரல்**

அண்ணல் அம்பேத்கர் விருது இங்கே வழங்கப்பட்டிருக்கின்றது. இந்தியாவிலே உள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, தலித் என்று சொல்லப்படுகின்ற மக்களுக்கு,






ஆதிதிராவிட மக்களுக்கு இந்தியா விடுதலை பெற்றுங்கூட, விடுதலை கிடைக்காமல் வெம்பிக் கொண்டிருந்த மக்களுக்கு உண்மையான விடுதலையை வாங்கித் தந்த, பெற்றுத் தருவதற்குப் போராடிய அண்ணல் அம்பேத்கர் பெயரால் வழங்கப்படுகின்ற விருதை திருமதி கிருஷ்ணம்மாள் ஜெகநாதன் பெற்று தனக்கேயுரிய பெண்மை நிறைந்த அந்த உள்ளத்தோடு என்னை வாழ்த்தி பாராட்டினார்கள். அவர்களுக்கும் அவருடைய துணைவர் ஜெகநாதன் அவர்களுக்கும் எனக்கும் நீண்ட நாட்களாக நட்பு உண்டு, தொடர்பு உண்டு. ஏதோ சாதாரண முறையிலே ஏற்பட்ட நட்பல்ல அது. அவர்கள் எந்தவொரு குறிக்கோளுக்காகப் பாடுபட்டார்களோ, அந்தக் குறிக்கோளுக்கு நானும் துணை நின்றேன் என்ற முறையிலே அவர்களுக்கும் எனக்கும் உள்ள நட்பு தான், அந்த நட்பு. அவர்கள் சென்னைக்கு வரும் போதெல்லாம் என்னைச் சந்திப்பார்கள். சந்திக்கும் போதெல்லாம் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, ஒதுக்கப்பட்ட மக்களுக்காகத் தான் குரல் கொடுப்பார்கள். என்னிடமும் அது பற்றித் தான் கோரிக்கைகளைத் தருவார்கள். அவைகளை நிறைவேற்றுவதில் எனக்கொரு தனி இன்பம், தனி மகிழ்ச்சி.

## தமிழின்பால் அன்பு

அண்ணா விருது பெற்றிருக்கின்ற என்னுடைய அன்புக்குரிய அவ்வை நடராஜன் அவர்கள் இரண்டே வரிகளில் தன்னுடைய நன்றியுரையை குறள் போல முடித்துக் கொண்டார். அவருடைய தந்தையார் தமிழுக்கு, தமிழ்நாட்டிற்கு, தமிழ் மக்களுக்கு ஆற்றியிருக்கின்ற அரும்பணிகளையொட்டி அவருடைய திருமகன் அவ்வை நடராஜனும் பணியாற்றியிருக்கிறார், ஆற்றிக் கொண்டு வருகிறார். அவர்கள் தமிழின்பால் கொண்டிருக்கின்ற அன்பு, தமிழின்பால் வைத்திருக்கின்ற அன்பு – இவைகள் என்னை மிகவும் கவர்ந்தவை. அப்படிப் பட்ட அவ்வை துரைசாமி பிள்ளையினுடைய திருமகன் நடராஜன்



இன்றைய தினம் விருது பெற்று அவர் தன்னுடைய தந்தையாரைப் போல இன்னும் புகழ் மலையின் உச்சியிலே கொடி போடக் கூடியவர் என்ற என்னுடைய பாராட்டுகளை அவருக்கு இந்த விழாவிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆட்சித் திறமையும் – செயல்பாடுகளும்**

காமராஜர் விருது பெற்றிருக்கின்ற விருதுநகர் சொக்கர், எனக்கு சட்டப் பேரவையிலே நெருங்கிய நண்பர். இன்றல்ல – 1989ஆம் ஆண்டு, 1996ஆம் ஆண்டு முதல் நான் சட்டமன்றத்திலே அவரோடு நெருங்கிப் பழகுகின்ற அந்த வாய்ப்பைப் பெற்றவன். அவர் எதிர்க்கட்சி வரிசையிலே அமர்ந்து நான் ஆளுங்கட்சி வரிசையிலே அமர்ந்து அந்நாள் முதல் பல ஆண்டுக் காலம் எங்களுக்குள்ளே நட்பு இருந்ததைப் போல ஒரு தாக்கம் ஏற்பட்டு அவரும் நானும் அந்த அளவிற்குப் பழகியிருக்கிறோம். அப்படி பழகிய காரணத்தால் தான் அவருக்கு இன்று விருது அளிக்கப்படுவதாக யாரும் கருதக் கூடாது. ஆட்சியினுடைய திறமைகளை பாராட்டவும், ஆட்சியினுடைய செயல்பாடுகளைப் போற்றவும், அதே நேரத்தில் குறை காணுமிடத்தில் சுட்டிக் காட்டவும் ''இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் கெடுப்பா ரிலானுங் கெடும்.'' என்ற குறளை நானும் பேராசிரியர் அவர்களும் அமைச்சர் பெருமக்களும் உணர்ந்திருக்கின்ற காரணத்தால் நாங்கள் உணர்ந்திருந்தாலுங்கூட, எங்களை இடித்துரைப்பவர்களில் ஒருவராக விளங்கியவர் அவர். இன்றைக்கு அவர் சட்டமன்றத்திலே இல்லாவிட்டாலும் குறை காணும் நேரத்தில் இடித்துரைக்கக் கூடிய அளவிற்கு உரிமை எடுத்துக் கொள்ளக் கூடியவர். அப்படிப் பட்டவர் சொக்கர் அவர்கள். எனக்கு சொக்கரைப் பார்த்ததும் சட்டமன்றத்திலே நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி நினைவிற்கு வந்தது. அதைச் சொன்னால் அவர் தவறாக எடுத்துக் கொள்ளமாட்டார், நீங்களும் தவறாக எடுத்துக் கொள்ள மாட்டீர்கள்.

ஒரு முறை சொக்கர் எதிர் வரிசையில் அமர்ந்திருக்கும்போது நானும், பேராசிரியர் போன்றவர்களும் ஆளுங்கட்சி வரிசையில்




அமர்ந்து இருக்கும்போது – எங்கள் பக்கத்திலே இருந்த ஒரு அமைச்சர், தாளில் எழுதி வந்து தன்னுடைய மானியத்தின் மீது பதிலைப் படித்தார். அப்போதெல்லாம் படிக்கும் வழக்கம் இல்லை. இப்போதுதான் பெரிய நோட்டுப் புத்தகத்திலே பெரிதாக எழுதிக் கொண்டு வந்து, அதைப் படித்து விட்டுப் போய் விடுகிறார்கள். அன்றைக்கு அந்த அமைச்சர் ஒரு நான்கைந்து பக்கங்கள் தாளில் எழுதிக் கொண்டு வந்து படித்தார். படித்துக் கொண்டே இருந்தார். ஆனால் யாருக்கும் அந்தப் பேச்சிலே ஈர்ப்பு ஏற்படவில்லை. அவர் என்ன சொல்கிறார் என்று – அவர் எங்கள் பக்கத்திலே அமைச்சராக இருந்தாலுங்கூட – நான் உண்மையைச் சொல்லித்தானே ஆகவேண்டும். ஆகவே ஈர்ப்பில்லாத ஒரு நிலையில் அவர் தன் உரையைப் படித்துக் கொண்டேயிருந்தார். ஆறு பக்கங்கள் ஆயிற்று – ஆறு பக்கங்கள் முடிந்ததும், மீண்டும் முதல் பக்கத்திலிருந்து படித்தார். எழுதிக் கொடுத்தவர்கள் சரியாகச் சொல்லவில்லை போலும்! அவரது பதிலை தட்டச்சு செய்து கொடுத்தவர்கள், இரண்டு நகல்கள் வைத்திருந்த காரணத்தால் – ஆறு பக்கங்கள் முடிந்த பிறகு – மீண்டும் முதல் பக்கத்திலிருந்து படிக்கத் தொடங்கினார். எவ்வளவு விழிப்போடு சட்ட மன்றத்தில் நம்முடைய நண்பர் சொக்கர் போன்றவர்கள் இருந்தார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாகச் சொல்லுகிறேன். சொக்கர் எழுந்து, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அவர் தட்டச்சு செய்து கொண்டு வந்ததைப் படிக்கிறார் – ஒரு முறை படித்து முடித்ததை மறுபடியும் திரும்பப் படிக்கத் தொடங்குகிறாரே என்று கேட்டார். நான் புரிந்து கொண்டேன் – நமது அமைச்சர் தவறு செய்கிறார் என்பதை! புரிந்து கொண்டும் சொன்னேன் – அவர் சரியாகத்தான் படிக்கிறார், ஒருவேளை அவர் படித்தது உறுப்பினர்கள் எல்லோருக்கும் மனதிலே பட்டதா இல்லையா என்பதை அறிந்து கொள்வதற்காக அவர் இரண்டாவது முறை படிக்கத் தொடங்குகிறார். முதல் முறை படிக்கும் போது நம்முடைய சொக்கர் கொஞ்சம் கண்ணயர்ந்து விட்டார் போலும்!




– இப்போது சொக்கருக்காகத் தான் மீண்டும் அமைச்சர் அதைப் படிக்கத் தொடங்குகிறார் என்று சொன்னேன். சொக்கர் ஒன்றும் கண்ணயரவில்லை. அவர் அயர்ந்திருக்காத காரணத்தால் தான் எப்படி திரும்பப் படிக்கிறார் என்று கேட்டார். இப்படி நான் அமைச்சரைக் காப்பாற்ற – அந்த நிகழ்ச்சி பயன்பட்டது. ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் – சொக்கர் எப்போதும் விழிப்போடு இருக்கக் கூடியவர் என்பதைச் சொல்வதற்காகத் தான். ஆளுங்கட்சியிலே உள்ளவர்கள் தங்கள் உரைகளைப் படிக்கும்போது ஏற்படுகின்ற தவறுகளை சுட்டிக்காட்டுகின்ற அளவிற்கு எதிர்க்கட்சியிலே அன்றைக்கு இருந்தவர்களிலே ஒருவர் என்னுடைய நண்பர் சொக்கர் ஆவார்.

இன்றைக்கும் சில பேர் இருக்கிறார்கள். அவர்கள் படித்துக் கொண்டு வருவதை அவர்களே திரும்பப் படிப்பதில்லை. அப்படிப்பட்டவர்களும் இருக்கிறார்கள். அதிலே வருகின்ற பிழைகளை எடுத்துச் சொன்னால் எங்களை அர்ச்சனை செய்கின்றவர்களும் இருக்கின்றார்கள். அதை ஆதரிக்கின்ற கூட்டமும் நாட்டிலே இருக்கின்றது என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள்.

**பாரதியின் தமிழ் பற்றும் தேசப்பற்றும்**

பாரதியார் விருது பெற்ற ராமச்சந்திரன் அவர்கள் பாரதியாருடைய கவிதைகளை கவிதையிலே உள்ள நுணுக்கங்களை, பாரதிக்கு தேசப் பற்று, தமிழ்ப் பற்று எந்த அளவிற்கு இருந்தது என்பதையெல்லாம் அவருடைய கட்டுரைகள் வாயிலாக நூல்களின் வாயிலாக வெளிப்படுத்தியவர். அவர் இந்த விருது பெறத்தக்கவர்.

பாரதிதாசன் விருதைப் பெற்ற தம்பி தமிழ்தாசன் இங்கே பேசும்போது அவர் ஏன் விருது பெற்றார், எதற்காக அவருக்கு விருது கொடுத்தோம் என்பதையெல்லாம் விட்டு விட்டு, கொஞ்சம் விலகிச் சென்று, நீங்கள் ஓய்வு பெறுவதாகச் சொன்னீர்கள், ஓய்வு பெறக் கூடாது என்று எனக்கொரு அன்புக் கட்டளையிட்டு விட்டு, ஜோதிபாசு இன்னமும் அரசியலிலே இருக்கிறார்,




மண்டேலா அரசியலிலே இருந்தார், பெரியார் அரசியலிலே இல்லாவிட்டாலும் சமுதாயப் பணிகளை ஆற்றினார் என்றெல்லாம் இங்கே சொன்னார். அது நான் எங்கே விலகிச் சென்று விடுவேனோ என்ற அச்சத்தில் அவருக்கு ஏற்பட்ட பதற்றத்தின் காரணமாக, பரபரப்பின் காரணமாக வந்த தவறு என்று கருதுகிறேன்.

### சமுதாயத் தொண்டு

ஜோதிபாசு இன்றைக்குக் கூட இருக்கிறார், இல்லை என்று சொல்ல வில்லை. அவருக்கு மெத்த உடல் நலிவு என்று செய்திகள் வருகின்றன. அவர் நலம் பெற்று நாட்டுக்குத் தொண்டாற்ற வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் அவருக்கு வாழ்த்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த ஜோதிபாசு அவர்கள் எனக்கு நெருங்கிய நண்பர். ஆனால் இப்போது நம்முடைய தமிழ்தாசன் உவமை காட்டியதற்கேற்ப ஜோதிபாசு அவர்கள் இருந்தால் நீ தொடர்ந்து இரு என்று சொல்வதற்கு சரியில்லை – மண்டேலா இருந்ததாகச் சொல்கிறார் – மண்டேலா இருபதாண்டுகளுக்கு மேல் சிறையிலே இருந்து, அதன் பிறகு அதிபராக விளங்கி அவரும் ஒய்வு பெற்று விட்டார் என்பதை தம்பி தமிழ்தாசன் அறியாதவரல்ல.

பெரியார் நல்ல காலம் அரசியலுக்கே வரவில்லை. வந்தவரும் கொஞ்சநாளில் ஒதுங்கி விட்டார், சமுதாயத் தொண்டே ஆற்றினார். ஆகவே தமிழ்தாசன் சொன்ன அந்த உதாரணத்தை நான் எடுத்துக்கொண்டு – அவ்வழியிலே நடக்க நான் விரும்புகிறேன் என்பதை நான் மீண்டும் ஒரு முறை வள்ளுவர் கோட்டத்திலே தமிழ்தாசனின் சொற்பொழிவின் மூலமாகச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

### சாதாரண மக்களுக்குத் தொண்டு

தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருது பெற்ற இமயம் என்ற அண்ணாமலை அவர் தான் யார் என்பதையும், இந்த இயக்கத்திற்கு எந்த அளவிற்கு உறவு,




தொடர்பு என்பதையும் எடுத்துச் சொன்னார். அவரையும் நாங்கள் அறிவோம். அவருடைய தொண்டு அவர் வாழ்கின்ற மாவட்டத்தில் எந்த அளவிற்கு சாதாரண, சாமான்ய மக்களுக்காக பயன்பட்டு வருகிறது என்பதையும் அறிவோம். அப்படிப்பட்ட நண்பர், இமயம் என்ற அண்ணாமலை பேராசிரியர் சொன்னதைப் போல இமயம் அளவிற்கு வளர வேண்டும் என்று நானும் பேராசிரியரோடு சேர்ந்து வாழ்த்துகிறேன்.

**பெண்ணின் வெற்றிக்குப் பின்னால் ஆண்**

தாயம்மாள் அறவாணன் அவர்கள், முத்தமிழ்க் காவலர் விருது பெற்றிருக்கிறார். அறவாணன் அவர்கள் நல்ல தமிழறிஞர். தாயம்மாள் பேசும்போது அறவாணனின் உதவிகளோடு தானும் தமிழ்த் தொண்டு ஆற்றுவதாகச் சொன்னார்கள். இதுவரை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஒரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் இருப்பதாக – இன்றைக்குத் தான் கேள்விப்பட்டோம் – ஒரு பெண்ணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு ஆண் இருக்கிறார் என்பதை தாயம்மாள் அறவாணன் பேச்சின் மூலமாக நமக்குக் கிடைத்த ஒரு பேருண்மை. விருது பெற்ற அவர்களையும் நான் வாழ்த்துகின்றேன்.

இந்த விழாவிலே நான் திருவள்ளுவருடைய நாள் என்கின்ற காரணத்தால் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த நிகழ்ச்சியில் மிக முக்கியமாக நான் சொல்ல விரும்புவது – இன்று இந்த நிகழ்ச்சிக்கு வந்து நான் இவ்வளவு நேரம் பேச முடியுமா என்ற நிலையில் காலையிலே இருந்தேன். காரணம் நான் என்றும் இல்லாமல் இன்றைக்கு விடியற்காலை ஒரு நான்கு மணி நேரம் தொடர்ந்து எல்லோரும் எழுப்பியும் கூட எழுந்திருக்காமல் தூங்கியிருக்கிறேன்.

நேற்றையதினம் பொங்கல் நாளில் எனக்கேற்பட்ட நம்முடைய கழகத் தோழர்களுடைய அன்பால், அவர்களுடைய பற்றால், பாசத்தால் எனக்கு ஆயிரக்கணக்கானோர்



உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு-கோவை ★ 2010 ஜூன் 23-27

வழங்கிய வாழ்த்துகளைப் பெறுவதிலே ஏற்பட்ட அலுப்பும் களைப்பும் சேர்ந்து என்னை அறி யாமல் தூங்கி – நான்கு மணி நேரம் வீட்டார் எழுப்பியும் எழாமல், அதற்குப் பிறகு பகல் 12 மணியளவில் டாக்டர்கள் வந்து என்னை எழுப்பியிருக்கிறார்கள். இதை ஏன் சொல்கிறேன் என்றால், சொல்வதற்கு என்ன காரணம் என்றால், அவ்வளவு சோர்வோடும், அலுப்போடும் தூங்கியெழுந்த பிறகும் கூட, இன்று மாலையிலே பேராசிரியர் விருது பெறுபவர்களுக்கு விருதுகளை வழங்கட்டும், நான் இன்றைக்கு கலந்துகொள்ள இயலாது என்று கூட முதலில் சொல்லியனுப்பினேன்.

ஆனால் விருது பெறுகிறவர்களுக்கு ஏமாற்றம், விழாவிற்கு வரக் கூடியவர்களுக்கு ஏமாற்றம் ஏற்படக் கூடாதென்று – பேராசிரியர் வந்து விட்டார் என்றதும், நானும் வந்து விட்டேன். என்ன தைரியம் என்றால், அவர் என்னுடைய கடமையை ஆற்றுவார் – விருது பெற்றவர்களைப் பாராட்டுவார் – விருது பெறுகின்ற முக்கியமான ஒன்பது பேரைத் தவிர மற்றுமுள்ள நூலாசிரியர்கள், பதிப்பகத்தார், தமிழறிஞர்களுக் கெல்லாம் பரிசுகள், விருதுகளை வழங்க பேராசிரியர் எத்தனை பேருக்கு வழங்க முடியும் என்ற போதுதான், நான் பரவாயில்லை, என்னால் முடியாவிட்டால் பேராசிரியருக்கும் ஒரு வேளை இயலாவிட்டால் இருக்கவே இருக்கிறார் துணை முதல்வர், அவர் வழங்குவார் என்று – பிறகு எப்படி துணை முதல்வர் என்று பெயர் இருக்க முடியும் – துணையாக இருப்பார் என்பதற்காகத்தான் அந்தத் துணை முதல்வர் இவைகளையெல்லாம் வழங்குவார் என்று சொன்னேன். இப்போதும் நான் வழங்கியது போக மிச்சம் இருப்பதை பேராசிரியர் வழங்கியது போக மிச்சம் இருப்பதை துணை முதல்வர் வழங்கவேண்டும். இதை நான் சொல்வதற்குக் காரணம் நாங்கள் விட்டுச் செல்கின்ற பணிகளையெல்லாம் அவர் ஆற்ற வேண்டும், அவரும் நீங்களும் தொடர வேண்டும் என்ற அந்த எண்ணத்திலே தான் அதைச் சொல்லுகின்றேன்.

வள்ளுவருடைய விழாவிலே – வள்ளுவத்தை வையமெல்லாம் பரப்பிட அவருக்குச் செலுத்துகின்ற மரியாதையாக இந்த விழாவிலே கலந்து கொள்கின்ற உங்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியையும், மரியாதையும் தெரிவித்து இந்த அளவில் என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.''

**வி**ழாவை தொடர்ந்து சிறந்த நூலாசிரியர்களுக்கும், பதிப்பகத்தாருக்கும், அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கும் விருது மற்றும் நிதியுதவியினை மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர் களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களும் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

விழாவில் மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் வரவேற்புரையாற்றினார். நிறைவாக தமிழ்வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித்துறைச் செயலாளர் திரு. க.முத்துசாமி, இ.ஆப., நன்றி கூறினார்.

இந்த விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், ஆன்றோர் – சான்றோர், தமிழறிஞர்கள், புலவர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

★ ★ ★

# ஏழை-எளிய-நலிந்த மக்கள் பொங்கல் நாளில் மகிழ்ச்சியுடன் இருப்பதற்காகவே இலவச வேட்டி - சேலை வழங்கும் திட்டத்தை அரசு தொடர்ந்து நிறைவேற்றுகிறது

1-1-2010 அன்று சென்னை சிந்தாதிரிப்பேட்டையில்
இலவச வேட்டி-சேலை வழங்கும் விழாவில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை:-




இந்த விழாவிற்கு நான் வந்ததும், மேடைக்கு எதிரே நின்று கொண்டிருந்த நண்பர்களையும், புகைப்படக் காரர்களையும் சற்று விலகியிருக்குமாறு கேட்டுக் கொண்டேன். காரணம், கூட்டமாக மக்கள் வந்திருக்கிறார்களா, அல்லது இங்கே உள்ள மக்கள்தானா, என்று தெரிந்து கொள்வதற்காக கூட்டத்தை மறைத்துக் கொண்டு நின்று கொண்டிருந்த புகைப்படக்காரர்களையெல்லாம் உட்காருமாறு கேட்டுக் கொண்டேன். அவர்கள் உட்கார்ந்த பிறகு தான் யார் யார் இந்த விழாவிற்கு வந்திருக்கிறார்கள், யார் யார் என் எதிரே அமர்ந்திருக்கிறார்கள், எவ்வளவு மக்கள் இந்த தேர்தல் அண்மையில் இல்லை என்பதும் விழாவினைச் சிறப்பிப்பதற்காக கூடியிருக்கிறீர்கள் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. இல்லாவிட்டால் ஏதோ வித்தைக்காரன் நடத்துகின்ற கூட்டத்தைப் போல சுற்றிலும் நூறுபேர் நின்றுகொண்டு நடைபெறுகின்ற நிகழ்ச்சி போல இது ஆகியிருக்கும். நல்லவேளையாக புகைப்படக்காரர்களும், நிருபர்களும் என்னுடைய வேண்டுகோளையேற்று கீழே அமர்ந்து என் எதிரே இருக்கின்ற உங்களையெல்லாம் காணுகின்ற வாய்ப்பை எனக்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள்.



உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு-கோவை ★ 2010 ஜூன் 23-27

**நலிந்த மக்களுக்கான திட்டம்**

இந்த விழா கடந்த காலங்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒரு பெரும் திட்டமாக நலிந்தோர்க்கு பொங்கல் விழாவினை முன்னிட்டு வழங்குகின்ற வேட்டி, சேலைகளை தொடர்ந்து வழங்குகின்ற வகையில் நடைபெறுகின்ற நிகழ்ச்சியாகும். எனக்கு முன்னால் பேசியவர்கள் குறிப்பிட்டதைப் போல இடையிலே 2001ஆம் ஆண்டு இந்த வேட்டி சேலைகள் வழங்குகின்ற திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டது. ஏனென்றால் தேர்தல் முடிந்து 2001இல் வேறு ஆட்சி வந்தது. அவர்கள் இந்தத் திட்டத்தை நிறுத்தி விட்டார்கள். நாம் இப்படி நிறுத்தியிருந்தால், வாரந்தோறும் சென்னையிலே, திருச்சியிலே, மதுரையிலே, வேலூரிலே, விழுப்புரத்திலே என்று ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றிருக்கும். இப்போது அப்படி நடைபெறாமல் நாம் இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து நடத்தி வருகிறோம்.

2001லே ஏன் இந்த இலவச வேட்டி சேலைத் திட்டம் நிறுத்தப்பட்டது என்பதற்குக் காரணம், 2002இல் தேர்தல் இல்லை. அதனால் 2001இல் ஆட்சிக்கு வந்ததும் இந்தத் திட்டம் நிறுத்தப்பட்டது. 2002ஆம் ஆண்டு பொங்கல் திருநாளின் போது இந்தத் திட்டம் நிறைவேற்றப் படவில்லை. 2003ஆம் ஆண்டு பொங்கல் திருநாளின் போதும் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. ஏன் நிறைவேற்றப் படவில்லை ? ஒருவேளை ஏழையெளியோர் யாருமே இல்லையா ? எல்லோரும் வேட்டி சேலைகளை வாங்குகின்ற அளவிற்கு பெருந்தனம் படைத்தவர்களாக ஆகி விட்டார்களா என்றால் இல்லை. காரணம், இந்த இரண்டு மூன்று ஆண்டுகளிலும் வேட்டி சேலை இலவசமாக வழங்குகின்ற திட்டம் கைவிடப்பட்டதற்குக் காரணம், அப்போது தேர்தல் இல்லை. ஆனால் 2004ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் வந்தது. 2004ஆம் ஆண்டு தேர்தல் என்றதும் அந்த ஆண்டு இந்தத் திட்டத்தை மீண்டும் அன்றிருந்த ஆட்சியாளர்கள் நிறைவேற்றினார்கள். அதையும் அரைகுறையாக நிறைவேற்றினார்கள். அதுவும் உங்களுக்குத் தெரியும்.

நம்மைப் பொறுத்த வரையில் தேர்தலுக்காக அல்ல, கழகத்தை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்பதற்காக அல்ல, கட்சி அரசியலுக்காக அல்ல, நலிந்த மக்கள் – என்னுடைய தமிழ் மக்கள் – ஆடைக்கு அரையாடை தான் அவர்களுக்குக் கிடைக்கின்றது என்ற அளவிற்கு வாழ்ந்து கொண்டிருக்கின்ற அந்த மக்களை மகிழ்ச்சியடையச் செய்ய பொங்கல் கொண்டாடுகின்ற அந்த நாளிலாவது அவர்கள் பூரிப்போடு இருக்க வேண்டும், அவர்களுக்குரிய சேலைகள், வேட்டிகளை அணிய வேண்டுமென்ற காரணத்தினாலேயே அத்தகைய உணர்வு நம்முடைய உள்ளத்திலே இருந்த காரணத்தினாலேயே அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தோம். கொண்டு வந்த திட்டத்தை தொடர்ந்து நிறைவேற்றினோம். இடையில் வந்த அரசு இடையிலே புடவையும் வேண்டாம் – வேட்டியும் வேண்டாம் என்று நிறுத்திவிட்டார்கள். நாம் இன்றைக்கு அவற்றை இடையிலே மாத்திரமல்ல, தொடர்ந்து அவைகளை மக்களுக்கு வழங்க வேண்டும் என்ற அந்த எண்ணத்தோடு – தூய எண்ணத்தோடு ஒரு அரசு மக்களுக்காக இருக்கின்ற அரசு, (தேர்தலுக்காக இருக்கின்ற அரசு அல்ல) என்பதை எடுத்துக்காட்டுகின்ற வகையிலேதான் இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து நடத்தி வருகிறோம்.

**மனநிறைவு–மன மகிழ்ச்சி**

இன்றைக்கு இங்கே பார்க்கின்றேன். இந்தத் தொகுதியில் கூடியிருக்கின்ற உங்களையெல்லாம் காணுகின்ற நேரத்தில் நான் வென்ற தொகுதியில் என்னைத் தேர்ந்தெடுத்த மக்களுக்கு நேராக –

உங்களுக்கு மாத்திரமல்ல, உங்களைப் போல தமிழ்நாடு முழுதும் இருக்கின்ற மக்கள் – இந்த ஆட்சியை நம்பிக்கையோடு தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்ற காரணத்திற்காக நீங்கள் குழுமியிருக்கின்ற காட்சியைப் பார்த்து நான் மெத்தவும் மகிழ்ச்சியடைகிறேன், மனநிறைவு கொள்கின்றேன். இந்த மன நிறைவை, மகிழ்ச்சியை நீங்கள் எனக்குத் தொடர்ந்து அளிப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு நிரம்ப இருக்கின்றது.

**திருத்திக் கொள்வதுதான் ஜனநாயகம்**

ஒரு நாட்டில் ஒரு அரசு, அதுவும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு அந்த மக்களுக்குத் தான் தொண்டாற்ற வேண்டும். அதை குறை கூறுபவர்களும் இருப்பார்கள். குறை இல்லாமல் ஒரு அரசு இருக்க முடியாது. அதனால்தான் "இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் கெடுப்பா ரிலானுங் கெடும்"

என்று அய்யன் திருவள்ளுவர் அழகாகச் சொல்லியிருக்கிறார். இடித்துச் சொல்லாதவர்கள் இல்லாத ஒரு ஆட்சி யாரும் கெடுப்பவர்கள் இல்லாமலே தானே கெட்டு விடும் என்று குறள் கூறுகிறது. அந்தக் குறளை ஏதோ வாசகத்திற்காக மட்டும் சொல்லாமல், அந்தக் குறளிலே பொதிந்திருக்கிற வாய்மையை, அந்தக் குறளிலே இருக்கின்ற எச்சரிக்கையை நாங்கள் என்றைக்கும் மறவாதவர்கள் என்ற அந்த நிலையில் அந்தக் குறளை நினைவுபடுத்திக் கொண்டு மக்களுக்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றோம்.

அதனால்தான் குறை இருந்தால் சொல்லுங்கள், கேட்கிறோம். குற்றம் இருந்தால் கண்டியுங்கள், தண்டியுங்கள். அதற்குப் பணிகிறோம் என்பதுதான் இந்த அரசினுடைய கொள்கையாக, இந்த அரசின் இலட்சியமாக இருந்து வருகின்றது. குறை சொல்ல வேண்டுமென்பதற்காகவே குறை சொல்லிக் கொண்டிருந்தால் அது ஜனநாயகம் அல்ல. உண்மையிலேயே குறை கண்ட இடத்தில் அதைச் சொல்வதுதான் ஜனநாயகம். அதைத் திருத்திக் கொள்வதுதான் ஜனநாயகம். குறை இல்லாத ஓர் ஆட்சியை யாரும் எங்கும் காண முடியாது. நிலவுக்கே களங்கம் இருப்பதாக சொல்லுகிறோம். அதைப் போல முழு நிலவாக இருந்தாலும் எங்கேயோ ஒரு கரும் புள்ளி இருக்கத்தான் செய்யும். அதைச் சுட்டிக் காட்டி அந்த அரசோடு ஒத்துழைத்து அதை நீக்குவதற்காகப் பாடுபட வேண்டுமே அல்லாமல், அதையே குற்றமாகச் சொல்லி அந்தக் குற்றத்தையே பெரிதாக்கி நிலவு பெரிதா, அதிலே இருக்கின்ற களங்கம் பெரிதா என்பதிலே போட்டி போட்டுக் கொண்டு, களங்கத்தைப் பெரிதாக்கி ஆட்சியைக் கவிழ்த்து விடலாம், ஆட்சியை ஒழித்து விடலாம் என்று யாராவது கருதுவார்களேயானால், அவர்களுக்கு நான் சொல்லுகிறேன். இந்தக் காலை வேளையில் ஆண்டுப் பிறப்பில் ஆங்கில ஆண்டு பிறப்பின் போது ஆயிரக் கணக்கான மக்கள் இங்கே குழுமியிருக்கின்ற இந்தக் காட்சி – இவர்கள் அத்தனை பேருக்கும் இந்த விழாவிலே நான் வேட்டி சேலை கொடுக்கப் போவதில்லை. உங்களிலே ஒரு பகுதியினர் தான் இவைகளைப் பெறவிருக்கிறார்கள். அவர்கள் பெறுகின்ற அந்தக் காட்சியைக் காண இவ்வளவு பேர் வந்திருக்கிறீர்கள் என்றால், காண்பதற்காக மாத்திரமல்ல – இதை வழங்குகின்ற எங்களை வாழ்த்துவதற்காக – எங்களுடைய ஆட்சிக்கு ஆதரவு தருவதற்காக வந்திருக்கிறீர்கள், உங்களுக்கெல்லாம் என்னுடைய தலைதாழ்ந்த வணக்கங்களை தெரிவித்து இந்த அளவில் விடைபெற்றுக் கொள்கிறேன்.

★ ★ ★



உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு–கோவை ★ 2010 ஜூன் 23–27

# உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் பங்கேற்க இதுவரை இந்தியா மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த 1,244 தமிழறிஞர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர்!

சென்னையில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் கலந்தாய்வுக் கூட்டத்தைத் 31.12.2009 அன்று தொடங்கிவைத்து
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை:–

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியமைச்சரும் பேரவையின் முன்னவருமான பெருமதிப்பிற்குரிய பேராசிரியர் அவர்களே, துணை முதலமைச்சர் தம்பி ஸ்டாலின் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களே, உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்காக அமைக்கப்பட்டுள்ள பல்வேறு குழுக்களின் அன்புக்குரிய தலைவர்கள், துணைத் தலைவர்கள், ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் மதிப்பிற்குரிய உறுப்பினர்களே, தலைமைச் செயலாளர் கே.எஸ்.ஸ்ரீபதி ஐ.ஏ.எஸ். அவர்களே, அரசு அதிகாரிகளே மற்றும் அலுவலர்களே, பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளே, தமிழறிஞர்கள், சான்றோர்கள், தமிழ் ஆர்வலர்கள், பத்திரிகைத் துறையின் முன்னோடிகள், கலைத்துறையினர், தொழிலதிபர்கள் அனைவருக்கும் இன்றைக்கு ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துகளைக் கூறி வருக வருக என்று உங்களையெல்லாம் வரவேற்கின்றேன்.

இங்கே நடைபெறுகின்ற இந்த கலந்தாய்வுக் கூட்டத்தில் எதிர்வரும் ஜூன் திங்களில் கோவையில் நடைபெற இருக்கின்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் அதன் வெற்றிக்காக எந்த வகையில் எல்லாம் நாம் பாடுபட வேண்டும், பணியாற்ற வேண்டும் என்பது பற்றி கருத்துகளை பரிமாறிக் கொள்ள இது மெத்தவும் பயன்படக்கூடிய ஒரு முயற்சியாக இருக்கும் என்பதற்காகத்தான் உங்களுக்கெல்லாம் அழைப்பு விடுத்து, உங்களை சந்திக்கின்ற வாய்ப்பை நான் பெற்றிருக்கின்றேன்.




**வெளிநாடுகளிலிருந்து அறிஞர்கள் பங்கேற்பு**

இந்த மாநாட்டைப் பொறுத்த வரையில், இதுவரையிலே வருவதாக பதிவு செய்திருக்கின்றவர்களுடைய பட்டியலை உங்கள் முன்னால் எடுத்துரைத்தால் மகிழ்ச்சி யடைவீர்கள் என்று நம்புகின்றேன். ஆஸ்திரேலியா விலிருந்து வெப் சைட் மூலமாக ஐந்து பேரும், ஈ–மெயில் போஸ்ட் மூலமாக இரண்டு பேரும் தங்களுடைய ஒப்புதல்களைத் தெரிவித்து ஆகமொத்தம் 7 பேர் ஆஸ்திரேலியா விலிருந்து வருவதாக இருக்கிறார்கள்.

இந்தோனேசியாவிலிருந்து ஒருவர், இலங்கையிலிருந்து 19 பேர், இதில் 10 பேர் வெப் சைட் மூலமாகவும், ஒன்பது பேர் ஈ–மெயில் போஸ்ட் மூலமாகவும், ஆகமொத்தம் 19 பேர் வருவதாக தங்களுடைய ஒப்புதலைத் தெரிவித்து இருக்கின்றனர்.

ஐக்கிய அமெரிக்காவிலிருந்து 22 பேர். 12 பேர் வெப் சைட் மூலமாகவும், 9 பேர் ஈ–மெயில் போஸ்ட் மூலமாகவும், ஒருவர் நேரடியாகவும் ஒப்புதலைத் தெரிவித்து இருக்கிறார்கள்.

யுனைடெட் கிங்டம் மூலமாக 5 பேர். இதில் 4 பேர் வெப் சைட் மூலமாக, ஒருவர் நேரடியாகவும் ஒப்புதலைத் தெரிவித்து இருக்கிறார்கள்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஒவ்வொன்றிலும் எத்தனை பேர் என்பதைக் கூற விரும்பவில்லை. பிறகு சரியாக அச்சுஇயற்றி உங்களுக்குத் தருகின்றேன்.

கனடாவிலிருந்து கத்தாரிலிருந்து, ஓமானிலிருந்து, எமிரேட்ஸிலிருந்து, ஐக்கிய அரபு எமிரேட்ஸிலிருந்து, கென்யாவிலிருந்து, சவுதி அரேபியாவிலிருந்து, சிங்கப்பூர், நார்வே, நெதர்லாந்து, புருனே, பிரான்ஸ், மலேசியா, வங்காளதேசம், ஜப்பான், ஜெர்மனி, நியுசிலாந்து, தென்கொரியா, ஸ்விட்சர் லாந்து, ரஷ்யா, செகோஸ்லோவாக்கியா, இப்படி வெளிநாடு களிலிருந்தும் மொத்தம் 188 பேர், நாடு தெரியாத நிலையில் 4 பேர் அவர்களாக அஞ்சல் எழுதியிருக்கிறார்கள்.

இந்தியாவிலிருந்து 742 பேர். ஆக மொத்தம் இந்த மாநாட்டிலே கலந்து கொண்டு கருத்துரை வழங்கவும், கட்டுரைகள் படிக்கவும் இன்று வரையிலே 1,244 பேர் தங்களுடைய விருப்பத்தினைத் தெரிவித்து இருக்கி றார்கள் என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

மற்றும் வர இருப்பவர்களுக்கு என்னுடைய அன்பான வாழ்த்துகளையும், வரவேற்பையும் இந்த கூட்டத்தின் மூலமாக தெரிவித்துக் கொள்கிறேன். உங்களுக்கு ஏதாவது ஐயப்பாடு இருந்தால் அவற்றையும், இதுவரையிலே இந்த நிகழ்ச்சிக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக என்னுடைய அழைப்பை ஏற்று வருவார்களோ இல்லையோ என்று எண்ணியிருந்தபோது அந்தக் கட்சியின் சார்பாக நம்முடைய சிவபுண்ணியம் அவர்கள் வந்திருக்கின்றார். அது நாம் செய்த புண்ணியம். அவரையும் வரவேற்று அனைவரும் கருத்துகளை கூடுமான வரையிலே சுருக்கமாக சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

### *சென்னையில் நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டு கலந்தாய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய நிறைவுரை (31.12.09)*

மணி பன்னிரண்டரையைத் தாண்டி விட்ட காரணத்தால் இந்த அளவோடு உங்களுடைய கருத்துரைகளை நாங்கள் செவிமடுத்து அவற்றை நிறைவேற்று வதற்கு என்னென்ன வழிமுறைகள் உண்டோ, அவற்றையெல்லாம் தொடர்ந்து கலந்து ஆலோசித்து நிறைவேற்றுவோம் என்ற உறுதியை தெரிவித்துக் கொள்கிறேன். சான்றோர்கள் இந்த அவையிலே எடுத்துரைத்த கருத்துகளில் மொத்தப் பிழிவு என்ன என்று பார்த்தால் தமிழர்களாகிய நாம் ''ஒன்றுபட்டு'' இருக்கிறோம் என்பதை உலகிற்கு உணர்த்த இந்த மாநாடு பயன்பட வேண்டும் என்பதுதான். ''பட்டு'' என்ற நிலை பட்டுப் போய் என்றுகூட சொல்லலாம். நம்முடைய ஒற்றுமைபட்டுப் போய் இருக்கிறோம் என்ற நிலையில் லாமல் ஒன்றுபட்டு இருக்கிறோம் என்ற நிலையை உருவாக்குவதற்கு அந்த மாநாடு பயன்பட வேண்டும். பயன்படும் என்ற உறுதியை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசியல் கட்சிகள் ஒன்றுக்கொன்று பல கருத்துகளை உடையனவாக இருந்தாலும் கூட, அந்தக் கருத்துகளையே தங்களுடைய அரசியல் செயல்பாடுகளுக்கு தேவையான நேரத்தில் பயன்படுத்திக் கொள்ள வேண்டு மேயல்லாமல், இது போன்ற பொதுவான அதிலும் தமிழர்களுடைய உணர்வைப் பிரதிபலிக்கின்ற, தமிழ் மொழியை வளர்க்கின்ற, தமிழ்மொழிக்கு ஆக்கமும், ஊக்கமும், உருவாக்குகின்ற உலகமெல்லாம் இன்றைக்குப் பாராட்டிக் கொண்டிருக்கின்ற

தமிழுக்கு மேலும் பெருமை சேர்க்க நடைபெற இருக்கின்ற ஒரு மாநாட்டில் கடுகளவு, துளியளவு, தினையளவு, தினையின் உமியளவுகூட வேறுபாடு வந்துவிடக் கூடாது என்பதில் நான் மிகுந்த முனைப்போடு கவனம் செலுத்துகின்றேன்.

உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமேயானால் நான் எழுதி வருகின்ற கட்டுரையைப் பற்றி இங்கே பலரும் பாராட்டிப் பேசினார்கள். ''செப்பேடு'' என்ற தலைப்பில் இந்த மாநாட்டைப் பற்றி கடந்த 7 நாட்களாக நான் முரசொலியிலே கட்டுரை தீட்டியிருக்கிறேன். அதைப் படித்த மக்கள், அறிஞர்கள், சான்றோர்கள், ஆன்றோர்கள் பெரிதும் பாராட்டி என்னைப் புகழ்ந்துரைத் திருக்கிறார்கள். ஆனால் அந்தக் கட்டுரைகூட ஒரு சிறு பிணக்கிற்கு காரணமாகிவிட்டது என்பதை அறிந்து உள்ளபடியே வருந்தினேன்.

அந்தக் கட்டுரையில் தமிழைச் செம்மொழியாக ஆக்குகின்ற முயற்சியில் திராவிட முன்னேற்றக் கழகம், மற்றும் உள்ள எல்லாக் கட்சிகளும் ஒன்றுபட்டு போராடி, வாதாடி மத்திய அரசிடத்திலே மனுக்களைக் கொடுத்தபோது மத்தியில் இருந்த அரசின் தாமதம் காரணமாக அது நிறைவேற முடியாமல் போய்விட்டது என்பதை நான் அதிலே குறிப்பிட்டிருந்தேன்.

அப்படி குறிப்பிடும்போது நான் கடந்த காலத்தில் இருந்த வாஜ்பாய் அரசைக் குறிப்பிட்டதாக சிலர் கருதிக்கொள்ள நேரிட்டதற்காக வருந்துகிறேன். நான் அப்படி குறிப்பிடவில்லை. எந்த இடத்திலும் என்னுடைய அருமை நண்பரும், அரசியல்வாதிகளிலேயே மிகுந்த நம்பிக்கைக்குரியவருமான வாஜ்பாய் அவர்களிடத்திலே நான் மாறுபாடு கண்டதேயில்லை. இன்றல்ல, ஏதோ, இந்தக் கூட்டத்திலே சொல்ல வேண்டும் என்பதற்காக அல்ல, கட்சியில் உள்ள தோழர்கள் கருதிக் கொள்ளக் கூடாது. குறிப்பாக நம்முடைய இல.கணேசன் வருத்தப்படக்கூடாது.

வாஜ்பாய் பற்றி என்னிடம் கேட்டபோது நான் ஒரு காலத்தில் சொல்லியி ருக்கின்றேன். ''Good man in a wrong party'' என்று நான் சொன்னேனே தவிர, நான் வாஜ்பாயை பற்றியோ, அல்லது அவருடைய தலைமையைப் பற்றியோ என்றைக்கும் விமர்சித்தது இல்லை. அவர் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும், வேறு பல தமிழ் அமைப்புகளின் சார்பிலும் விண்ணப்பங்கள் தரப்பட்டு, தமிழுக்கு செம்மொழி தகுதி தரவேண்டும் என்று கேட்ட நேரத்தில் வாஜ்பாய் அவர்களே என்னிடத்தில் என்ன சொன்னார் என்றால் ''அது பரிசீலிக்கப்பட்டு வருகிறது'' என்று சொன்னாரே தவிர, அது முடியாத காரியம் என்று வாஜ்பாய் அவர்கள் சொல்லவில்லை. அதை நான் கட்டுரையிலே சொல்லியிருக்கிறேன். அதை சொல்லி விட்டு வேறு ஒரு பகுதியிலே குறிப்பிடும் போது, பாரதிய ஜனதா இயக்கத்திலே ஜோஷியைப் போன்ற ஒரு சிலர் திராவிட இயக்கத்தின் மீது காழ்ப்பு கொண்டிருந்த காரணத்தால் இது தாமதம் ஆகிவிட்டதோ என்று கூடக் கருத வேண்டியிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இதை எடுத்து வைத்துக்கொண்டு இல.கணேசன் அல்ல; அவரைத் தூண்டிவிட்டு நீங்கள் எப்படி மாநாட்டிற்குப் போகலாம். கருணாநிதியின் அழைப்பை எப்படி ஏற்றுக் கொள்ளலாம் என்று ஒரு தடையை விதிக்க முயன்று, அதிலே வெற்றி பெற்று பத்திரிகைகளிலே அந்தச் செய்தி வந்தது. அதைப் பார்த்த பலரும், ஒருவேளை இன்றைக்கு இந்தக் கூட்டத்திற்கு பி.ஜே.பி. சார்பாக யாரும் வரமாட்டார்கள் என்றுதான்

எண்ணியிருந்தார்கள். நான் இங்கே உட்கார்ந்து வாசலையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

ஏனென்றால் நான் முதலமைச்சராக இருக்கிறேன் என்ற ஆணவம் கொண்டவன் அல்ல. தமிழ் வாழ உயிரையும் கொடுப்பேன் என்று சொல்லுகிற வாதம் உண்மைதான் என்பதை நிரூபிக்கின்றவகையில் அந்தத் தமிழுக்கு ஒரு மாநாடு நடத்துகின்ற நேரத்தில் ஒரு சிறு ஊனமும் ஏற்படக்கூடாது என்ற உணர்வோடு காலையில் **6** மணிக்கு எழுந்து – எழுந்தவுடன் திரு. இல. கணேசன் அவர்களுக்கு போன் செய்தேன். அவர் வெளியூர் சென்றிருந்தார். **8** மணிக்கு வந்தார். போன் செய்தேன். இன்னும் வரவில்லை என்றார்கள். பிறகு அவரே அலுத்துப்போய், கேட்டுப்பார்ப்போம் என்று நான் செய்த அந்த போனுக்கு செவிமடுத்து, நான் சொன்னேன், இப்படி நடந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். நான் எழுதியதை மீண்டும் படித்துப் பாருங்கள். அதில் நான் இந்த விஷயத்தில் பி.ஜே.பி. கட்சியை குறை சொல்லவேயில்லை. அந்த ஆட்சியிலே இருந்த சிலர் திராவிட இயக்கத்திற்கு பிடிக்காதவர்கள் என்பதால் அவர்களால் தாமதம் ஆகிவிட்டது என்று நான் சொன்னேனே தவிர வேறு அல்ல. ஏனென்றால் வாஜ்பாய் அவர்களைப் பொறுத்த வரையில் சில விஷயங்களில், கடற்கரையிலே மண்டபங்கள் எழுப்பக் கூடாது என்று தமிழக அரசு, மத்திய அரசு இரண்டும் விதித்திருந்த தடையைக்கூட மீறி நான் வாஜ்பாயைக் கேட்டுக் கொண்டேன். குமரியில் பெருந்தலைவர் காமராஜருக்கு மண்டபம் அமைக்க வேண்டும். இதில் தடை இருக்கிறது என்று சொன்னார். நீங்கள் நினைத்தால் தடையை நீக்கலாம் என்றேன். தடையை நீக்கிவிட்டு காமராஜர் மண்டபத்திற்கு இடம் கொடுத்தவர் வாஜ்பாய் அவர்கள். எனவேதான் செம்மொழி விஷயத்திலே நான் வைத்த கோரிக்கையை அவர் நிராகரிக்கவில்லை. அவர் நிராகரிக்கக் கூடும் என்பது போன்ற யூகங்கள் சில ஏடுகளிலே வெளிவந்தன. அதை வைத்துக் கொண்டு அதே நேரத்திலே ஜோஷி போன்றவர்கள் அங்கே வீற்றிருந்த காரணத்தால் இது தாமதமாக நடைபெறுகின்றதோ என்று சிலர் எழுப்பிய அந்த சந்தேகங்களுக்கு பதில் அளிக்கின்ற வகையிலே தான் நான் எழுதும்போது அதைக் குறிப்பிட்டேன். அது பற்றிய விளக்கத்தை நான் இல. கணேசனின் இடத்திலே காலையிலே சொன்னேன். அவர் என்னுடைய வார்த்தைக்கு மதிப்புக் கொடுத்து மன்னிக்கவேண்டும் – தமிழுக்கு மதிப்புக் கொடுத்து இன்றைக்கு இங்கே வந்திருக்கின்றார். அதற்காக நான் அவருக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இதேபோன்ற அணுகுமுறை இந்த மாநாட்டில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினால் கடைப்பிடிக்கப்படும். குறிப்பாக என்னால் கடைப்பிடிக்கப்படும் என்ற உறுதியை அனைவருக்கும் தந்து இந்த மாநாட்டை மிகுந்த சிறப்புடன் நடத்தித் தரவேண்டும் என்று மீண்டும், மீண்டும் உங்களையெல்லாம் கேட்டுக் கொண்டு காலையிலிருந்து இதுவரையிலே கருத்துரைகள் பலவற்றை வழங்கி என்னை கௌரவித்த – மன்னிக்க வேண்டும் – தமிழ்த்தாயை கௌரவித்த உங்கள் அனைவருக்கும் என்னுடைய இதயமார்ந்த நன்றியை மீண்டும், மீண்டும் தெரிவித்து இந்த அளவோடு இந்த நிகழ்ச்சி நிறைவு பெறுகிறது என்பதைக் கூறி அடுத் தடுத்து தேவைப்படும்போதெல்லாம் நான் அழைப்பேன். வந்து எங்களுக்கு அரிய ஆலோசனைகளைச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த அளவில் விடைபெறுகிறேன். ✶



உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு-கோவை ★ 2010 ஜூன் 23-27

# படமும் செய்தியும்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள், தெற்கு ரயில்வே சார்பில் சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வாரம் மும்முறையிலிருந்து வாரம் ஆறுமுறையாக அதிகரிக்கப்பட்ட சென்னை – மங்களூர் அதிவேக விரைவு ரயில், மதுரையிலிருந்து நீட்டிக்கப்பட்ட ஜம்முதாவி – திருநெல்வேலி விரைவு ரயில், திருநெல்வேலி – பிலாஸ்பூர் வாராந்திர விரைவு ரயில் ஆகிய சிறப்பு ரயில்களை கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் மாண்புமிகு மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு. தயாநிதிமாறன், மாண்புமிகு மத்திய ரயில்வே துறை இணை அமைச்சர் திரு. இ. அகமது, கவிஞர் கனிமொழி, எம்.பி., திருமதி. வசந்தி ஸ்டான்லி, எம்.பி., திரு. எம். கிருஷ்ணசாமி, எம்.பி., வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு. மா. சுப்பிரமணியன், தெற்கு ரயில்வே பொது மேலாளர் திரு. தீபக் கிருஷ்ணன் ஆகியோர் உள்ளனர். (22.12.2009)



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள் தனது இல்லத்தில் போலியோ நோய் ஒழிப்புத் திட்டத்தின் கீழ் போலியோ சொட்டு மருந்து சிறப்பு முகாமினை, குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து அளித்துத் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் மாண்புமிகு முதலமைச்சரின் மனைவி திருமதி. தயாளு அம்மாள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு. மா. சுப்பிரமணியன் மற்றும் மருத்துவத்துறை உயர் அலுவலர்கள் உள்ளனர் (10.1.2010)



மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், தலைமைச் செயலகத்தில், பள்ளிப்படிப்பு, பள்ளி மேற்படிப்பு பயிலும் சிறுபான்மையினப் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகைகளை வழங்கினார். உடன் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் மற்றும் உயர் அலுவலர்கள் உள்ளனர். (5.1.2010)





மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் தலைமையில், திரைப்படத் தொழிலாளர் நல வாரியத்தின் முதல் கூட்டம் 29.12.2009 அன்று சென்னையில் நடைபெற்றது.

# தொழில் நிறுவனங்கள் மாலை நேரத்தில் தடையின்றி இயங்கிட உயர் அழுத்த மின்சாரத்தை வெளிச் சந்தையில் பெற நடவடிக்கை


இந்திய தொழில் கூட்டமைப்பின் தமிழ்நாடு பிரிவின் நிருவாகிகள் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களை சந்தித்து, மாலை 6.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை உயர் அழுத்த மின்இணைப்புகள் இயங்காததால், உற்பத்தி பாதிக்கப்பட்டு வேலைவாய்ப்பும் குறைகிறது என்று தெரிவித்திருந்தனர். இந்த நிலையைப் போக்குவதற்காக தொழில் நிறுவனங்கள், மாலை நேரத்தில் உயர் அழுத்த தொழிற்சாலை களுக்கான மின்இணைப்புகளுக்குத் தேவையான மின்சாரத்தைக் கூடுதலாக வெளிச் சந்தையிலிருந்து மின்வாரியம் பெற்று விநியோகிக்க வேண்டுமென்றும், அவ்வாறு வழங்கப்படும் மின்சாரத்திற்கு உரிய கூடுதல் கட்டணம் செலுத்த முன்வருவதாகவும் இந்திய தொழில் கூட்டமைப்பினர் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களிடம் கோரிக்கை வைத்திருந்தனர்.

தமிழ்நாட்டில் நிலவும் மின்பற்றாக்குறையை ஈடுசெய்யும் வண்ணம் தமிழ்நாடு மின்சார வாரியத்தால் குறிப்பாக உயர் அழுத்த தொழிற் சாலைகளுக்கான மின் இணைப்புகளுக்கு மாலை 6.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை மின்சாரம் தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால் 5 விழுக்காடு மட்டும் பாதுகாப்பு மற்றும் வெளிச்சத்திற்காகப் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

சமீப காலமாக சர்வதேச அளவில் நிலவிவந்த பொருளாதார மந்தநிலை தற்பொழுது நீங்கி தொழில் மற்றும் அனைத்துத் துறைகளும் வேகமாக வளர்ச்சி பெற்று வரும் நிலையில், இந்திய தொழில் கூட்டமைப்பின் இக்கோரிக்கை குறித்து,

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு மின் வாரியத் தலைவரிடம் தெரிவித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக் கொண்டார். இதன் அடிப்படையில் தமிழ்நாடு மின்சாரவாரியம்,

மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களுக்கு
தொழில் கூட்டமைப்பு நன்றி!




தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் அனுமதியை முறையாகப் பெற்று இத்திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கைகளை தற்போது மேற்கொண்டுள்ளது.

இந்தக் கோரிக்கையின் மீது துரித நடவடிக்கை எடுத்து ஆவன செய்ததற்காக நன்றி தெரிவிக்கும் வகையில் இந்திய தொழில் கூட்டமைப்பின் தமிழ்நாடு தலைவர் திரு.சி.ஆர். ரங்கநாதன் மற்றும் நிருவாகிகள் மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களை 7.1.2010 அன்று தலைமைச் செயலகத்தில் நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

இந்த முறையினால், மீதமுள்ள 2 கோடியே 8 இலட்சம் மின்நுகர்வோருக்கு எந்த விதமான பாதிப்பும் இல்லை எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதனால் தொழில்துறையில் உற்பத்தி கூடுவதுடன், வேலைவாய்ப்பும் அதிகரிக்கும்.

* * *

# கலைத்துறையினரின் நலன்களுக்காக திரைப்படத்துறையினர் நல வாரியம்!



மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**கலைஞர்** அவர்கள் அறிவிப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அகில இந்திய திரைப்படத் தொழிலாளர்கள் மாநாட்டில் 9.10.2009 அன்று கலந்து கொண்டு உரையாற்றியபோது,

''தொழிலாளர் சமுதாயத்தின் நலன்களை உறுதிப்படுத்திடும் வகையில், அரசின் சார்பில் பல்வேறு அமைப்புசாராத் தொழிலாளர் நலவாரியங்கள் உருவாக்கப்பட்டு, அந்த வாரியங்களின் மூலம் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில், தமிழ்த் திரையுலக வளர்ச்சியிலும், அதன் வாழ்விலும் பல்வேறு நிலைகளில் தங்கள் உழைப்பை நாளும் அளித்திடும் கலையுலகத்தினரின் நலன்களுக்காகத் தனி நலவாரியம் அமைக்கப்பட வேண்டுமென தென்னிந்திய நடிகர் சங்கத்தின் சார்பிலும், தமிழ்த் திரையுலகின் சார்பிலும் அளிக்கப்பட்டுள்ள கோரிக்கையினை ஏற்று, தமிழக அரசு சின்னத்திரையினருக்கும் சேர்த்து ''திரைப்படத் துறையினர் நலவாரியம்'' ஒன்றினை புதிதாக உருவாக்கும்'' – என்று அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்பின் தொடர்ச்சியாக, 15.12.2009 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திரைப்படத் துறையினர் நல வாரியத்தைப் பின்வருமாறு அமைத்து ஆணையிட்டுள்ளார்:

செய்தித்துறை அமைச்சர் – *தலைவர்*

செய்தி மக்கள்தொடர்புத் துறை இயக்குநர் – *உறுப்பினர் மற்றும் செயலாளர்*

**அலுவல்சாரா உறுப்பினர்கள்:**

திரு. வி.சி. குகநாதன் – ''பெப்சி'' தலைவர்.

திரு. அபிராமி ராமநாதன் – திரையரங்க உரிமையாளர்கள் சங்கத் தலைவர்.

திரு. ஏ.வி.எம்.பாலசுப்பிரமணியம் – தயாரிப்பாளர்.

திரு. சிவகுமார் – நடிகர்.

திருமதி. குஷ்பு – நடிகை.

திரு. கோவை தம்பி – தயாரிப்பாளர்.

திரு. சிவசக்தி பாண்டியன் – தயாரிப்பாளர்.

திரு. வாகை சந்திரசேகர் – தென்னிந்திய நடிகர் சங்கப் பொருளாளர்.

திரு. எஸ்.பி.முத்துராமன் – இயக்குநர்

திரு. ''அன்பாலாயா'' பிரபாகரன் – தயாரிப்பாளர்

திரு. ''சத்யஜோதி'' டி.ஜி.தியாகராஜன் – தயாரிப்பாளர் (சின்னத்திரை).

திரு. விடுதலை– தமிழ்நாடு சின்னத்திரை கலைஞர்கள் கூட்டமைப்பின் தலைவர்.

மேலும், செய்தித் துறை, நிதித்துறை, வருவாய்த் துறை, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை ஆகிய அரசுத் துறைகளின் செயலாளர்களும்; தொழிலாளர் நலத்துறை மற்றும் நிலநிருவாகத் துறை ஆகிய துறைகளின் ஆணையர்களும் வாரியத்தின் அலுவல்சார் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

❖ ❖ ❖



உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு-கோவை ★ 2010 ஜூன் 23-27

# சாலைப் பயணங்கள் இனிதாகிட
# சாலை விதிகளை கடைபிடிப்போம்!
# விபத்துகளைத் தடுப்போம்!

சாலைப் பாதுகாப்பு வார விழாவையொட்டி
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் வேண்டுகோள் (1.1.2010)



**ஆ**ண்டுதோறும் சனவரித் திங்கள் முதல்வாரத்தில் கடைப்பிடிக்கப்படும் சாலைப் பாதுகாப்பு வார விழா, 1.1.2010 முதல் 7.1.2010 வரை தமிழகம் முழுவதிலும் நடைபெறுகிறது.

மக்களுக்குச் சாலைப் பயணங்கள் இனிதாக அமைந்திட வேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு, ஆண்டுதோறும் அதிக நிதி ஒதுக்கீடுகள் செய்து சாலைகளைப் பல்வகையிலும் மேம்படுத்துதல், தேவையான இடங்களில் பாலங்களையும், மேம்பாலங் களையும் கட்டுதல், சாலைச் சந்திப்புகளில் திசைகாட்டி விளக்குகளை அமைத்தல், வழிநெடுகிலும் எச்சரிக்கை உணர்வைத் தோற்றுவிக்கும் சாலைக் குறியீடுகளை நிறுவுதல் முதலான பல்வேறு நடவடிக்கை களையும் அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

சாலை விதிகளைத் தவறாமல் கடைப்பிடிக்க வேண்டுமென அனைவர்க்கும், குறிப்பாக வாகன ஓட்டுநர்களுக்கு அரசு அவ்வப்போது அறிவுரைகளையும் வழங்கி வருகிறது. எனினும், அடிக்கடி நிகழும் சாலை விபத்துகள் பற்றிய நிகழ்வுகளைத் தொலைக்காட்சிகளில் காணும்போதும், செய்தித்தாள்கள் வாயிலாக அறியும்போதும் மிகுந்த வேதனை ஏற்படுகிறது. தீவிரவாதச் செயல்களால் நம் நாட்டில் ஏற்படும் உயிரிழப்புகளைவிடச் சாலை விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்புகளே அதிகம். இது நம் வேதனையை மேலும் அதிகப்படுத்துவதுடன், சாலைப் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வை பொதுமக்களிடையே வளர்த்திட வேண்டும் என்னும் உணர்வையும் அளிக்கிறது.

சாலை விபத்துகளில் பலியானோர், கை, கால்கள் இழந்து பாதிக்கப்பட்டோர் போன்றோரின் குடும்பங்கள் அல்லல்களுக்கு ஆளாகின்றன, வளர்ச்சிப் பணிகள் தடைபடுகின்றன. அரசு நிருவாகத்திற்கும் இடையூறுகள் நேர்கின்றன. இத்தகைய இடர்ப்பாடுகள் ஏற்படாமல், மனித உயிரிழப்புகள் எதுவும் நிகழாமல் சாலைப் பயணங்கள் இனிதாக நிகழ அனைவரும் சாலை விதிகளை விழிப்புடன் கடைப்பிடித்திடல் வேண்டும். இதை வலியுறுத்துவதுதான் சாலைப் பாதுகாப்பு வார விழாவின் நோக்கமாகும்.

இந்த உணர்வோடு சாலை விதிகளைக் கடைப்பிடிப்போம்! விபத்துகளைத் தடுப்போம்! விலை மதிப்பிலான மனித உயிர்களைக் காப்போம்!

★

தாய்கோ வங்கி

TAICO BANK

# தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி லிட்.

தாளமுத்து நடராசன் மாளிகை, நெ.1, காந்தி இர்வின் சாலை,
எழும்பூர், சென்னை – 600 008.
தொலைபேசி எண் : 044–28411643 / 28547952 தொலை நகல் : 044 –28416456
மின்னஞ்சல் : taico@dataone.in taico@vsnl.net இணையதளம் : www.taicobank.com

தாய்கோ வங்கி – 46 ஆண்டுகளாக மக்கள் சேவையில்

சேமிப்பு திட்டங்களுக்கு இதர வணிக வங்கிகளை விட அதிக வட்டி வழங்குகிறது

- சேமிப்பு / நடப்பு கணக்கு
- வைப்புகளுக்கு காப்பீடு வசதி
- குறுகிய கால வைப்பு
- பாதுகாப்பு பெட்டக வசதி
- கணக்கு தொடர் வைப்பு
- ரொக்கச் சான்றிதழ்
- நீண்ட கால வைப்பு

மூத்த குடிமக்களுக்கு மேலும் 1%அதிக வட்டி

## தாய்கோ வங்கியின் கடன் திட்டங்கள்

### தொழிற் கூட்டுறவு சங்கங்களுக்கு

- காசுக்கடன்
- காலக்கடன்
- சரக்கீட்டுக்கடன்
- வங்கி உத்திரவாதம்
- நலிந்தோர்க்கு டாப்செட்கோ மற்றும் டாம்கோ மூலம் கடன்

### பண்ணை சாராக் கடன் திட்டங்கள்

- சிறுபோக்குவரத்து வாகனங்கள் வாங்க கடன்
- வீடு அடமானக்கடன்
- சிறுதொழில் மற்றும் குறுந்தொழில் முனைவோர்க்கு
- அதிக பற்றுக்கடன்
- காலக்கடன் மற்றும் நடைமுறை மூலதனக்கடன்
- நகைக்கடன்
- வீடுகட்டக் கடன்
- தேசிய சேமிப்பு பத்திரங்கள் / கிசான் விகாஸ் பத்திரங்கள் மீது கடன்

விரைவில் அறிமுகப்படுத்தவுள்ள புதிய கடன் திட்டங்கள் :
எஸ்.எம்.இ. ஸ்மார்ட் (SME Smart Scheme) மற்றும் எஸ்.எம்.இ.ஸ்மார்ட் பிளஸ் திட்டம்(SME Smart Plus Scheme) மூலமாக குறு மற்றும் குடிசைத் தொழில் நிறுவனங்களுக்கு வழங்கும் கடன் வசதிகள்

புதியதாக திறக்கப்பட உள்ள கிளைகள் :
விழுப்புரம், இராமநாதபுரம், பெரம்பலூர், நாகப்பட்டினம், ஒட்டன்சத்திரம் மற்றும் தூத்துக்குடி

நிறைவான பாதுகாப்பும், உத்திரவாதமும் பெற **தாய்கோ வங்கியில்** முதலீடு செய்வீர்!

R.N.I. No:21446/70-Regn.No:TN/ARD/48/09-11 &
WPP No:TN/PMG(CCR)518 / 09-11




திருவள்ளுவர் திருநாள் மற்றும் தமிழக அரசின் விருதுகள் வழங்கும் விழா
(15.1.2010)

தமிழரசு